வெற்றி திருமகன் எம்ஜி.ஆர்

முனைவர் செ. இராஜேஸ்வரி





வெற்றித் திருமகன் எம்ஜிஆர்

முனைவர் செ. இராஜேஸ்வரி எம்.ஏ.,எம்.ஃபில்., பி.ஹெச்டி

சந்திரோதயம் பதிப்பகம்
3/462, கம்பர் 2- வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 18

நூல் விவரம்

நூலின் பெயர் : வெற்றித்திருமகன்

ஆசிரியர் : முனைவர் செ. இராஜெஸ்வரி

பதிப்பு : இரண்டாம் பதிப்பு 2018

நூல் வகை : திரைப்படம் , அரசியல்

பக்கங்கள் : 120

வெளியீடு : சந்திரோதயம் பதிப்பகம் ,
தினமணி நகர், மதுரை
7010997639

விலை : ரூ. 185

அன்பு காணிக்கை

என்னை திராவிடப் பாரம்பரியத்தில்

வளர்த்த என் அன்பு தந்தை

தெய்வத்திரு **பொ. செல்லையாகோனார்**

அவர்களுக்கு

இந்நூல்அன்பு காணிக்கை



சைதை துரைசாமியின்
மனிதநேயம் இலவச ஐ.ஏ.எஸ் கல்வி மையம்

(மனிதநேய அறக்கட்டளையின் கீழ் இயங்கும் அமைப்பு)

"அர்ப்பணிப்புடன் கூடிய வாழ்வே அனைத்திலும் சிறந்தது"
"பலன் நோக்கா பணியே மனிதநேயத்திற்கு அழகு"

சைதை துரைசாமி
நிறுவனர் & தலைவர்
மேனாள் மேயர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

ஆலோசனைக் குழு :

திரு R.பூர்ணலிங்கம் IAS (Retd.)
மேனாள் முதன்மை செயலாளர்,
தமிழ்நாடு அரசு.

திரு A.X.அலெக்சாண்டர் IPS (Retd.)
மேனாள் D.G.P., தமிழ்நாடு காவல்துறை.

திரு S.S.ஜவஹர் IAS (Retd.)
மேனாள் முதன்மை செயலாளர்,
தமிழ்நாடு அரசு.

திரு S.நாகல்சாமி IAAS (Retd.)
மேனாள் முதன்மை கணக்காயர்,
தமிழ்நாடு & புதுச்சேரி.

திரு T.M.சங்கரசரவணன் M.V.Sc.,
கௌரவ தலைமை பயிற்சியாளர்.

திரு M.கார்த்திகேயன்
பயிற்சி இயக்குநர்.

மனிதநேயச் சிந்தனைகள் :

- அன்பு
- பாசம்
- நேசம்
- பரிவு
- கருணை
- இரக்கம்
- அர்ப்பணிப்பு வாழ்க்கை
- பிறர் துன்பம் போக்குதல்
- பிறர் தவறை மன்னித்தல்
- பிரதிபலன் பாராமல் உதவி செய்தல்
- தன்னைப் போல் பிறரையும் நினைப்பது
- தேவைப்படுவோரின் தேவையறிந்து தேடிப்போய் உதவி செய்தல்

இவை அனைத்தும்
மனிதநேயத்தின் வடிவங்கள்

நாள்: 11.07.2018

வாழ்த்துச் செய்தி

புரட்சித்தலைவர் அவர்களைக் குறித்து நாளும், நாளும் அறிய செய்திகள் அடங்கிய எண்ணற்ற நூல்கள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

இதிலிருந்து மங்கா புகழ் பெற்ற மாமனிதராய் புரட்சித்தலைவர் அவர்கள் இன்றும் நம்மிடையே வாழ்கின்றார் எனும் உண்மை தெரிகிறது.

அவர் துவக்க காலத்தில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தவித்து பின் மெல்ல மெல்ல ஒவ்வொரு படிக்கட்டையும் அளந்து வைத்து வாழக்கையில் முன்னேற்றம் கண்டவர்.

ஆகவே தான், அவருக்கு ஒவ்வொரு துறையும் குறித்து ஆழங்கால் அறிந்தவராக இருந்தார்.

வறியோர்க்கு உதவுவது, வசனம்-பாடல் மூலம் நற்கருத்துக்களை போதிப்பது, சொல்லுக்கும் செயலுக்கும் பேதமில்லாமல் நடப்பது, புகையிலை மற்றும் மது போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்படாமல் இருப்பது அவரது தனித்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

இதனை எம்.ஜி.ஆரின் எண்ணற்ற பக்தர்கள் இன்றும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதை நாம் காணலாம்.

திரைப்படத்தில் மிகப்பெரிய சாதனை புரிந்ததைப்போலவே 1972ல் அண்ணா தி.முக.என்னும் மாபெரும் இயக்கம் தொடங்கி ஏழை எளியோர்க்கு பல திட்டங்கள் தீட்டி வரலாற்றில் தனக்கென ஒரு இராஜமுத்திரையை பதித்து கொண்டவர் புரட்சித்தலைவர்.

இந்நூலாசிரியர், பேராசிரியர் செ.இராஜேஸ்வரி அவர்கள் திராவிட இயக்கத்தின்பால் மிகுந்த பற்று கொண்டவர். சிறந்த மொழி பெயர்ப்பாளர் கூட. அத்தோடு "எம்.ஜி.ஆர் தகவல் மையம்" ஒன்றை நிறுவி அவரைக் குறித்து வெளிவந்த நூல்கள்-புகைப்படங்கள் அனைத்தும் சேகரித்து பத்திரப்படுத்தி வைத்து உள்ளார்.

இது ஒன்றும் சாதாரண காரியமல்ல!

"வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆர்" எனும் இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் அரிய செய்திகள் விரவிக் கிடக்கின்றன. எம்.ஜி.ஆரின் பெரும் பக்தர்களுக்கு இவை முக்கனியின் சுவையாய் தித்திக்கும் என்பதில் ஐயமில்லை.

புரட்சித்தலைவர் அவர்கள் கம்பன் விழா ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தி கம்பனைக் குறித்து ஆழங்கால் கண்ட நீதிபதி மு.மு.இஸ்மாயில் அவர்களின் பாராட்டுதலை பெற்றதை வெகு அழகாக இந்நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவரது ஆழ்ந்த புலமைக்கும், புரட்சித்தலைவர் அவர்கள் மீது இவர் கொண்டிருக்கும் பக்திக்கும் நல்ல எதிர்காலம் இவருக்கு உண்டு என்பதை மட்டும் திண்ணமாய் கூறுவேன்.

வெல்க இவரது தமிழ் பணி.

அன்புடன்,
(சைதை துரைசாமி)
மேனாள் மேயர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

28, முதல் பிரதான சாலை, நந்தி சிலை அருகில், சி ஐ டி நகர், நந்தனம், சென்னை, தமிழ் நாடு - 600035, தொலைபேசி: 044 - 2435 8373
Email: manidhanaeyam@gmail.com Website: www.mntfreeias.com

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று

பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy*

English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [*Centre for Language Studies*] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100" என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***

2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***

3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***

4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***

5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***

6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***

7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***

8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***

9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***

10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***

11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***

12. **இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,**

13. **முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்**

14. **இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.**

15. **எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு *[MGR Science Fiction Films]***

16. **படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு** *ஆகியவை வெளிவந்துள்ளன.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் **பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி மற்றும் திட்டிவாசல் பெண்ணொருத்தி** *என்ற கவிதை நூல்களை இவர் முறையே"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You Language of Love, and A Lady at the little gate", என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்] ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி

அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் **‘அமராவதியின் காதல்’** என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய **“என்னோட ராசி நல்ல ராசி”** என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் **‘மர வழிபாட்டின் வேர்களைத் தேடி *(Deep into the roots of Tree worship)*, காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு’** போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்

எம் ஜி ஆர் பெயரில் ஓர் ஆய்விருக்கை

[Chair on MGR Studies]

பாரத ரத்னா எம் ஜி ஆரை பற்றிய நூல்களும் கட்டுரை தொடர்களும் இன்னும் பலபலவாக வந்து கொண்டிருக்கின்றன. புத்தக விழாக்களில் ஒரு தனிமனிதரை பற்றி விற்கும் நூல்களில் எம் ஜி ஆர் பற்றிய நூல்கள் முதலிடத்தைப் பெறுகின்றன. எம் ஜி ஆர் பற்றி இதயக்கனி, மர்மயோகி, காவல்காரன், உரிமைக்குரல் மன்னாதி மன்னன் போன்ற பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. எம் ஜி ஆருக்காக சிங்கப்பூர் மலேசியா ஃபிரான்சு ஆகிய நாடுகளில் விழா கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் கேரளாவிலும் வெளிநாடுகளில் மலேசியாவிலும் எம் ஜி ஆருக்கு சிலை வைக்கப்பட்டுள்ளது.

வேறு எந்த நடிகருக்கும் தலைவருக்கும் இல்லாத பல சிறப்புகளை கொண்டிருக்கும் எம் ஜி ஆரின் வெற்றிக்கான உத்திமுறைகளை அறிய பல துறை சார்ந்தவர்களும் ஆர்வமாக இருக்கின்றனர். எனவே அவரது மனித நேயம்; கலையுலகத் தொழில்நுட்ப நுண்ணறிவு ,அரசியல் அனுபவம், மக்கள் நலத்திட்டங்கள் ஆகியன குறித்து ஆராய்ச்சிகள் நடத்த ஓர் ஆய்விருக்கை ***[Chair on MGR Studies]*** *அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அவசியம் ஆகும். அவரை பற்றி அமெரிக்க ஆசிரியர்களும் மாணவர்களும் ஆராய்ச்சிகள் மேற்கொண்டுள்ளனர்.*

எம் ஜி ஆர் நடித்த படங்கள் இன்னும் திரை அரங்குகளில் பழைய உற்சாகத்துடன் ஓடி இலாபத்தை தருகின்றன. பழைய சிவாஜி மற்றும் ரஜினி, கமல், அஜித், விஜய் படங்கள் மறுபடி திரைக்கு வருவதும் குறைவு அப்படியே திரையிடப்பட்டாலும் ஓரிரு படங்களை

தவிர மற்றவை இலாபம் தருவதும் குறைவு. எனவே அவை திரையிடப்படுவதில்லை.எம் ஜி ஆர் காலத்து பழைய ரசிகர்களை போல புதிய ரசிகர்களும் உருவாகி வருவதால் தான் படங்கள் இன்னும் திரைஅரங்குக்கு வருகின்றன.

அரசியலில் எம் ஜி ஆரைப் பற்றி எந்த எதிர்க்கட்சியினரும் குறைத்து பேச முடியாத ஓர் உன்னத நிலையை அவர் தக்க வைத்துள்ளார். சத்துணவு திட்டம். தெலுங்கு கங்கை எனப்பட்ட கிருஷ்ணா நதி நீர் இணைப்பு திட்டம் , போன்றவை பலருக்கு வழிகாட்டி திட்டங்களாக உள்ளன. மத்திய மாநில அரசின் நிதிநிலை ஆதரவாக இல்லாதபோது பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டி ஒரு நலத்திட்டத்தை செயல்படுத்தும் துணிவு ஆகியன அவரது நினைத்த்தை முடிப்பவர் என்ற எண்ணத்தை உறுதிசெய்கிறது.

திரையுலகிலும் அரசியலிலும் அவரது வெற்றிக்கான புகழுக்கான காரணங்கள் பற்றி அறியும் ஆர்வம் அவர் காலத்திய மக்களுக்கு மட்டுமல்லாது இன்றைய இளைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளது. நிஜத்திலும் படத்திலும் அவரை பற்றிய எண்ணமும் மதிப்பும் ஒரே மாதிரி உருவாக்கப்பட்டது போலியானது அல்ல என்ற க்ருத்து இப்போது நிலைபெற்றுள்ளது. எனவே மனிதன் என்பவன் தெய்வமாகலாம் – என்ற கண்ணதாசனின் கருத்துப்படி இப்போது அவருக்கு சென்னைக்கு அருகே கோயில் கட்டி விரதம் இருந்து பாதயாத்திரை செல்லும் அளவுக்கு அவரது ரசிகர் தொண்டராகி பக்தராகிவிட்டனர். எம் ஜி ஆரின் புகழை பக்தியை உரமிட்டு வளர்க்க எந்த மதமோ மொழியினமோ சாதியோ அரசியல் கட்சியோ தனிப்பட்ட முறையில் ஆதரவாக இருக்கவில்லை. எனினும் காலம் அவர் புகழை நின்று நிலைக்கச் செய்துவிட்டது.

திரையுலகில் இன்றைக்கும் எம் ஜி ஆர் ஃபார்முலாவையே ரஜினி கமல் அஜித் விஜய் போன்ற உச்ச நடிகர்கள் பின்பற்றி வெற்றி பெறுகின்றனர். அரசியலில் அவர் தொடங்கிய திட்டங்களை எதிர்க்கட்சியாலும் நீக்க இயலவில்லை. அவை மக்களின் நன்மதிப்பை பெற்று இருப்பதால் அவற்றை நீக்கினால் மக்கள் ஆதரவு குறைந்து விடும் என்ற தோல்வி பயமே காரணமாகும்.

ஆக திரையுலகம் அரசியல் இந்த இரண்டிலும் மக்களின் பெரு வரவேற்பை பெற அவர் என்னென்ன வழிகளில் முயன்றார் என்பதை விரிவாகவும் நுணுக்கமாகவும் ஆராய்ந்து பிற்கால சந்த்தியினருக்கு அவற்றை ஆவணப்படுத்த பல்கலைக் கழகங்களில் ஆய்விருக்கையை அரசு நிறுவ வேண்டும். அவரது திரைப்படங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

எம் ஜி ஆர் தனது சொந்தப் படங்களுக்கு தொலைக்காட்சி மற்றும் சேட்டிலைட் உரிமை கூட யாருக்கும் வழங்கக் கூடாது என்று உயிலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் பெரும் பொருட்செலவில் நடித்து இயக்கி தயாரித்த நாடோடி மன்னன், அடிமைப்பெண், உலகம் சுற்றும் வாலிபன் ஆகிய படங்கள் கலைஞரின் தொலைக்காட்சிகளிலும் ராஜ் டிவி உட்பட வேறு சில தொலைக் காட்சிகளிலும் ஒளிபரப்பாகின்றன. அவருடைய படங்களின் நெகட்டிவ்களை சிலர் அழிக்க முயன்ற தகவல்களும் உண்டு அவ்வாறு அழிக்கப்படா வண்ணம் அவற்றை பாதுகாப்பது அரசின் கடமையாகும் அவை திரைப்படம் எடுப்பவருக்கும் அதில் நடிப்பவருக்கும் பாடெ எழுதுவோருக்கும் தொகுப்பாளருக்கும் அரங்கம் அமைப்பவருக்கும் எனப் பல துறை தொழில் நுட்ப

வல்லுனருக்கும் பாடநூல்களாக அமையதத்தக்க சிறப்புடையன.

எம் ஜி ஆர் 1936இல் சிறிய பாத்திரம் ஒன்றில் அறிமுகமாகி 1947இல் கதாநாயகன் அந்தஸ்தைப் பெற பதினோரு வருடங்கள் ஆயிற்று. அவருக்கு சிறு நடிகர்கள் பட்ட கஷ்டங்கள் தெரியும். அப்போது காலையில் இருந்து ஒரு வாய் தண்ணீர் கேட்டு கிடைக்காமல் படப்பிடிப்புத் தளத்தில் பசியோடு தாகத்தோடு அவர் உட்கார்ந்து இருக்கிறார். எனவே அவர் தன் படப்பிடிப்பின் போது சிறு நடிகர்களுக்கும் பசியாற நல்ல உணவளித்தார். 1947இல் கதாநாயகனான உடனேயே அவர் உச்ச நடிகர் ஆகிவிடவில்லை. பிறகும் நல்ல வாய்ப்பு கிடைக்காமல் வெளியே வர அவமானப்பட்டு இராணுவத்தில் போய் சேர்ந்து விடலாமா என்று விரக்தி அடைந்ததுண்டு.

*1951இல் மர்மயோகி பெரிய வெற்றி பெற்ற பிறகும் இரண்டு வருடங்கள் அவருக்கு பெரிய வெற்றி படங்கள் வரவில்லை. இடையில்' நாம்' ஒரு வருடம் ஓடினாலும் அது ஜமீந்தாரின் கொடுமைகளையும் கம்யூனிசத்தின் அவசியத்தையும் விளக்கிய ஒரு சோகப் படம். 1954இல் **மலைக்கள்ளன்** வந்த பின்பே அவர் **'ஏழை பங்காளன்'** என்ற கருத்தாக்கம் தோன்றியது. . அதன் பின்னர் 1977 வரை அதே எண்ணத்தை தொடர்ந்து காப்பாற்றியதால் திரையுலகில் கொடி கட்டி பறந்தார். இந்த வருடங்களில் எத்தனை சமூக, பொருளாதார அரசியல் மாற்றங்களை இந்த சமுதாயம் சந்தித்தது. அதற்கேற்ப அவரும் தன் படங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். என்னென்ன மாற்றங்களை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை இன்றைய திரையுலகினர் அறிந்துகொள்ள எம் ஜி ஆரின் படங்கள் ஒரு பாடமாக அமையும். ஆளும் அரசை எதிர்த்த காலத்தில் [1954 முதல்*

1967 வரை பிறகு 1967 முதல் 1972 வரை] எப்படி படம் எடுக்க வேண்டும் ஆதரித்த காலத்தில் [1967 முதல் 1972வரை] எப்படி படம் எடுக்க வேண்டும் என்பதை அவரது படங்கள் சொல்லித்தரும்.

தமிழக அரசு இயல் இசை நாடகம் என்ற நுண் கலைகளோடு திரைப்படம் என்ற தொழில்நுட்பக் கலையையும் சேர்த்து ஒரு பல்கலைக்கழகம் நிறுவி அதிலும் எம் ஜி ஆருக்கென்று ஓர் ஆய்விருக்கை ஏற்படுத்த வேண்டும். இப்போது தமிழக அரசு தமிழ்வளர்ச்சி நிறுவனத்தில் எம் ஜி ஆருக்கு ஒரு ஆய்விருக்கை ஏற்படுத்த முனவந்துள்ளது. தென்னிந்திய மொழி படங்களுக்கான கல்லூரிகளில் ஆங்கில படங்களை காட்டி பாடம் எடுப்பது போல எம் ஜி ஆர் படங்களையும் காட்டி பாடம் எடுக்க வேண்டும் இம்மாணவர்கள் எடுக்கும் படங்களை பார்ப்பவர் இங்குள்ளவர்கள் தானே. வெளிநாட்டு படங்களை காப்பியடிக்கும்போது எந்தளவுக்கு அதை நம் பண்பாட்டோடு பொருத்தி எடுக்க வேண்டும் என்பதை அவர்கள் எம் ஜி ஆர் படங்கள் மூலமாக கற்றுக்கொள்ளலாம்.

If I were a king *மற்றும்* ***The prisoner of Zenda*** *ஆகிய படங்களைப் பார்த்து எடுக்கப்பட்ட நாடோடி மன்னன் இன்றும் திரைஅரங்கில் வசூலை அள்ளுகிறது. தொலைக்காட்சிகளில் ஏராளமான விளம்பர வருவாயைப் பெற்றுத் தருகிறது. எம் ஜி ஆரின் நீதிக்கு தலை வணங்கு படம் அவர் திமுகவுக்கு விட்ட ஓர் அரசியல் எச்சரிக்கை. அப்படம் பிரெஞ்சு எழுத்தாளர் யூஜீன் எழுதிய* ***Le mysteries the Paris*** *என்ற நாவலை தழுவி எடுக்கப்பட்ட படமாகும்.* ***Roman Holiday*** *என்ற படத்தின் தமிழாக்கமாக சந்திரோதயம் வந்தது.* ***Come September*** *என்ற பொழுதுபோக்கு படம் எம் ஜி ஆர் நடித்து அன்பே*

வா என்ற பெயரில் வந்து வசூலை அள்ளி குவித்தது. சார்லி சாப்ளினின் The Kid சில மாற்றங்களுடன் பெற்றால் தான் பிள்ளையா என உருமாறியது. ஆக பிற மொழிப்படங்களைத் தமிழில் எடுக்கும்போது செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன என்பதையும் ஆங்கிலப் படங்கள் போல எடுக்க வேண்டும் என்று ஆசைப் படும்போது என்னென்ன ஆசைகளை மட்டும் நிறைவேற்ற தமிழ் சமூகம் இடம் கொடுக்கும் என்பதையும் எம் ஜி ஆர் படங்களைப் பார்த்து அறியலாம். இதற்கென்று சிலர் முழு நேரப் பணியாக அவரது படங்களை ஆராய்ச்சி செய்வது அவசியம் ஆகும்.

அமெரிக்காவினர் செய்த ஆராய்ச்சிகள் சில

ராபர்ட் ஹார்ட்கிரேவ்

*டெக்சாஸ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ராபர்ட் என்பவர் **[Robert L Hardgrave Jr]** தமிழ் திரையுலகம் பற்றி ஓர் ஆராய்ச்சி செய்தார். அந்த ஆராய்ச்சி தலைப்பு **When Stars displace the Gods: The folk culture of cinema in Tamil Nadu** என்பதாகும். இதில் எம் ஜி ஆரின் ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட்து அவரது ரசிகர்கள் அவரை தெய்வமாக பார்ப்பது அவர் படங்களுக்காக பணம் செலவழிப்பது என 1975இல் விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். சிவாஜி ரசிகர்களை விட எம் ஜி ஆர் ரசிகர்கள் லோ க்லாஸ் என்று அழைக்கப்பட்டதையும் அவர் பதிவு செய்திருக்கிறார். 1972இல் எம் ஜி ஆர் கட்சி ஆரம்பித்தபோது அவரது ரசிகர்கள் எம் ஜி ஆருக்கு அளிக்கும் ஆதரவாக தங்களை அதிமுக தொண்டர்களாக மாற்றினர். அவர் மீதிருந்த பற்று பக்தியாக பரிமளித்தது, என்று ரசிகர்களை பேட்டி கண்டு தன் கட்டுரையில் வெளிப்படுத்தினார். நாட்டுப்புறத்தில் ஊருக்கு நல்லது செய்பவரை தெய்வமாக மதிப்பது போல எம் ஜி ஆரும்*

படங்கள் மூலமாக அனைவருக்கும் மகிழ்ச்சி அளிப்பதால் அவர் நல்லது செய்கிறார் எனவே அவரைத் தெய்வமாக மதிக்கிறார்கள் என்பது அவரது ஆராய்ச்சியின் முடிவு.

எம் ஜி ஆர் மீதான பற்றுக்கு என்ன காரணம் என்பதை அவர் ரசிகர்களிடம் கேட்கிறார். எம் ஜி ஆர் நிறைய சம்பாதிக்கிறார். இந்தியாவிலேயே அவர் தான் அதிக வரி செலுத்துகிறார். ஒரு வருடத்துக்கு ஆறு லட்சம் வரியாகக் கட்டுகிறார் ***[The Mail, Dec 18. 1969].*** *ஆனால் அவரிடமிருந்து கட்சி நிறைய பணத்தை கறந்துவிடுகிறது. மிச்சத்தை அவர் தரும காரியங்களுக்கு கொடுத்துவிடுகிறார். ஒரு தீ விபத்து நடந்தால் உடனே அவர் அங்கு வந்து ஆறுதல் சொல்வார். என்று ரசிகர்கள் ராபர்ட்டிடம் தெரிவிக்கின்றனர்.*

எம் ஜி ஆரது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து ரசிகர்கள் கவலைப்படுவதில்லை. அவர் நல்லவர்; அவர் எது செய்தாலும் அது நல்லதாக தான் இருக்கும் என்று அவர் மீது ரசிகர்கள் வைத்திருந்த அசையாத நம்பிக்கையை ராபர்ட் பதிவு செய்கிறார்.

1975இல் அமெரிக்க ஆராய்ச்சியாளர் செய்த பதிவுகள் 42 ஆண்டுகள் கழித்தும் மாறவில்லை என்றால் அது குறித்து நாமும் தீவிரமாக் ஆராய்ச்சி செய்யவேண்டுமே தவிர எம் ஜி ஆர் ஆதரவு தெரிவிக்கும் மக்களை பாமரர்கள், முட்டாள்கள் என்று சொல்லிக்கொண்டு இருப்பது சரியாகாது. இன்றைக்கு இந்தியாவிலேயே அதிக பட்டதாரிகள் [42%] நிறைந்த மாநிலமாக தமிழகம் உள்ளது. உயர்கல்வியில் இந்தியாவில் தமிழகம் முதலிடத்தை பெற்றுள்ளது. இன்றும் எம் ஜி ஆர் மீதான மதிப்பு மாறவில்லை.

அவருடைய சமூக மதிப்பும் குறையவில்லை; சந்தை மதிப்பும் குறையவில்லை.

எம் ஜி ஆர் இறந்து முப்பது ஆண்டுகள் கழிந்த பின்பும் அவரது படங்கள் வசூலில் சாதிக்கின்றன. அவரது நூறாவது பிறந்தநாள் விழா உலகமெங்கும் தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில் எல்லாம் கொண்டாடப்படுகின்றது. நூற்றாண்டு முடிந்த பின்பும் விழா கொண்டாட்டங்கள் இன்னும் தொடர்கின்றன. எம் ஜி ஆர் உலகப் பேரவை பிரதிநிதிகள் மாநாடு ஜூலை பதினைந்தாம் நாள் அன்று சென்னை பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் பல்கலைக்கழக வளாகத்தில் வெகு சிறப்பாக கொண்டாடாப்பட்டது. ஏனென்று ஆராய்வோம்.

முனைவர் சாரா

அமெரிக்காவின் போடொயின் கல்லூரியின் மானுடவியல் பேராசிரியை முனைவர் சாரா டிக்கி தமிழ் திரையுலகம் குறித்து சில ஆராய்ச்சிகளை செய்து ஆய்வுரைகளாக வெளியிட்டுள்ளார் . *1993*இல் ***The Journal of Asian Studies*** என்ற இதழில் அவரது ***The Politics of Adulation: Cinema and the Production of Politicians in South India*** என்ற ஆய்வுரை வெளிவந்தது. அதன் பிறகு *2001*இல் ***Opposing faces: Film star fan clubs and the construction of Class identity in south India*** என்ற ஆய்வுரையை ரசிகர் மன்றங்கள் குறித்து ஆராய்ச்சி செய்து வெளியிட்டார். *2005*இல் அவர் மீண்டும் மதுரை வந்தார். தமிழில் அழகாகப் பேச தெரிந்த அவர் அப்போது என்னிடம் சில மாதங்கள் தமிழ் பயின்றார். அத்துடன் தான் எம் ஜி ஆரின் செல்வாக்கு இன்னும் குறையாமல் இருப்பது குறித்து ஆராய்ச்சி செய்ய திட்டமிட்டிருப்பதாகவும் அதற்கு நான் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவருடன் எம் ஜி

ஆர் படங்கள் பார்க்க ஞாயிற்றுக்கிழமை மாலை ஆறுமணி காட்சிக்கு போவது,, ரசிகர்கள் சந்திப்பு, திரை அரங்க உரிமையாளர்கள் பேட்டி என எங்களின் ஆராய்ச்சி பயணம் தொடர்ந்தது. நான் பல வருடங்களாக் எம் ஜி ஆர் பற்றி சேகரித்து வைத்திருந்த தகவல்களை அவருக்கு காட்டி விளக்கினேன். தமிழில் எடுத்த பேட்டிகளை ஆங்க்லைத்தில் மொழிபெயர்த்து தந்தேன். இந்த ஆராய்ச்சி 2006இல் ***The Nurturing Hero: Changing Images of MGR*** என்ற தலைப்பில் உருவானது.

ரசிகர் மன்றங்கள் பற்றி முனைவர் சாரா சுமார் இருபது ஆண்டுகளாக இந்தியா வந்து வந்து ஆராய்ச்சியை தொடர்ந்து செய்துவந்தார். 2006இல் அவர் எம் ஜி ஆர் ரசிகர்களை பார்த்து எம் ஜி ஆர் இறந்து சுமார் இருபதாண்டு கழிந்தபிறகும் அவரை நினைவு வைத்திருக்கிறீர்களே என்றுகேட்டபோது எம் ஜி ஆரை உயிருள்ளவரை மறக்க இயலாது என்பதே பொதுவான பதிலாக அவருக்கு கிடைத்தது. ஏன் என்று கேட்டதற்கு பெருவாரியான மக்கள் சொன்ன பதில் அவர் படங்களில் நல்ல கருத்து இருக்கும்; வள்ளல்; விருந்தோம்பலில் சிறந்தவர், சத்துணவு வழங்கினார் அரிசி விலையை உயர்த்தவில்லை மக்களிடம் அன்பாக இருப்பார் என்பதாக இருந்தது.

அரிசிக்கு அளித்த மானியத்தை மத்திய அரசு நிறுத்தியதும் எம் ஜி ஆர் அண்ணா சமாதி முன்பு உண்ணவிரதம் இருந்து மானியத்தை திரும்ப பெற்றதை நாம் அனைவரும் அறிவோம். எனவே அவர் அரிசி விலையை கட்டுப்பாட்டில் வைத்திருந்த்து மக்கள் மனதில் அவருக்கென்றுஓர் இட்த்தை தக்க வைத்துள்ளது.

1990களில் முனைவர் சாரா உங்களுக்கு ஏன் எம் ஜி ஆரை பிடிக்கும் என்று ரசிகர்களை கேட்டபோது, நல்ல

நடிகர், ரசிகர்களிடம் அன்புள்ளவர், குழந்தை உள்ளம் கொண்டவர், படத்தில் கெட்டவனாக நடிக்கமாட்டார், கத்திச் சண்டை சிலம்பு சுற்றுதல் குத்துச் சண்டை என வித விதமான சண்டைகள் செய்வார்; நல்லவனாகவே படத்தில் வருவார், நிஜ வாழ்வில் நிறைய பேருக்கு உதவுவார், விபத்து வெள்ளம் மற்றும் புயலால பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனே அரிசி மூட்டை அளிப்பார். உணவு உடை பண உதவி என விரைந்து வந்து செய்வார். ஏழைகள் மீது அன்புள்ளவர் என்று கூறினர் என்பதை தம் ஆய்வுரையில் பதிவு செய்துள்ளார்.

முனைவர் சாரா தன் ஆய்வுரையின் முடிவில் எம் ஜி ஆர் உணவு வழங்கல் மூலமாக மக்களுடன் தாயன்பு என்ற முறையில் இரண்டறக் கலந்து இருப்பதை உறுதி செய்தார். எம் ஜி ஆரை பற்றிய பிம்பம் தாய் பிம்பமாக மக்கள் மனதில் பதிந்துவிட்டது என்பது அவரது ஆய்வின் முடிவு. அம்மா என்ற பிம்பத்தை 2006இல் மக்கள் பெண்ணாகிய ஜெயலலிதாவுக்கு கூட கொடுக்க முன்வரவில்லை, என்ற கருத்தையும் பதிவு செய்தார். அந்த தேர்தலில் ஜெயலலிதா சட்டமன்ற தேர்தலில் தோல்வி அடைந்தார் என்பதை நாம் இத்தருணத்தில் நினைத்து பார்க்க வேண்டும். அமெரிக்கரின் ஆராய்ச்சி சரியாக இருப்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அம்பிகா சுப்ரமணி

அமெரிக்க ஆய்வாளர் அம்பிகா பிறப்பால் தமிழர் என்றாலும் தமிழ் அறியாதவர் அமெரிக்காவில் பிறந்து அமெரிக்கப் பெண்ணாகவே வளர்ந்தவர். இவர் எம் ஜி ஆரின் ரசிகர்கள் குறித்து ***The politics of Adoration : a Baktinian Analysis of MGR fandom*** *என்ற தலைப்பில் ஆய்வு செய்தார் . இவர் அமெரிக்க பல்கலைக்கழக் மாணவிகள் மதுரையில் வந்து தங்கி படிக்கும் South India Term Abroad*

என்ற அமெரிக்க நிறுவனத்தில் ஒரு வருடம் தமிழும் பண்பாடும் படித்த போது எம் ஜி ஆர் ரசிகர்கள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டார். இவரும் எம் ஜி ஆர் படம் பார்த்தார்; ரசிகர்களை சந்தித்தார், திரையரங்க உரிமையாளர்களிடம் பேசினார். அவர்களிடம் எம் ஜி ஆரை ரசிப்பவர்களிடையே ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் குறித்து வினவினார். மோகன் தாசின் ***MGR : The Man and the Myth*** *வாசித்தார்.* ***M.S.S*** *பாண்டியனின்* ***The Image trap*** *படித்தார். எம் ஜி ஆர் ரசிகர்களுக்காக வரும் இதயக்கனி, காவல்காரன் உரிமைக்குரல் மர்மயோகி போன்ற சினிமா இதழ்களைப் பார்த்தார். வேறு எந்த நடிகருக்கும் இவ்வாறு வருவதில்லை என்பதைப் புரிந்துகொண்டார்.*

அம்பிகா எம் ஜி ஆர் மீது ரசிகர்கள் கொண்டிருக்கும் அன்பையும் பற்றையும் மிக்கயீல் மிக்காயிலோவிச் பக்தின் என்ற அறிஞரின் இலக்கிய கொள்கைப்படி ஆராய்ந்தார், பக்தினின் கொள்கைப்படி சினிமா நாவல் கவிதை பாடல் என எந்த ஒரு கலைப்படைப்பும் அதை உருவாக்கிய கலைஞர்களின் சொல் நடிப்பு அபிநயம் மூலமாக மட்டுமே கருத்துகளை புலப்படுத்துவதில்லை. அக்கலைகளை கண்டு அனுபவித்து ரசிப்பவரின் மனோபாவத்துக்கு ஏற்ப அந்த கலை வடிவம் புரிந்துகொள்ளப்படுகிறது. இந்த த்ததுவத்தின் அடிப்படையில் அம்பிகா எம் ஜி ஆரின் கதாபாத்திரப் படைப்பு அவரது நிஜ வாழ்க்கை எப்படியிருந்தாலும் ரசிகர்கள் அதை பற்றி அக்கறைப்படாமல் அவரது திரை பிம்பம் அளித்த மகிழ்ச்சியில் அவரை இன்னும் விரும்புகின்றனர். அதனால் எம் ஜி ஆரை நிஜத்திலும் ஒரு ஹீரோவாக ஏற்றுக்கொண்டு இன்றைக்கும் ஆதரிக்கின்றனர். இவ்வாறு நல்லவன் வல்லவன் என நம்பியவனை உயர்ந்தவனாக வீரனாக பொதுமக்கள் மதிப்பதை

*அம்பிகா **Bhakhtin and Popular culture** என்று மிகிதா ஹோய் என்பவர் எழுதிய கட்டுரையில் இருந்து மேற்கோள் காட்டி விளக்குகிறார்.*

தொடர்பியல் துறை தலைவரின் ஆராய்ச்சி

*மதுரை இறையியல் கல்லூரியின் முன்னாள் துறைத்தலைவர் **CRW** டேவிட் என்பவர் எம் ஜி ஆர் தனிப்பாடல்களில் தொடர்பியல் திரன் என்ற பெயரில் முனைவர் பட்டத்துக்காக் ஆராய்ச்சி செய்தார். அப்போது அவருக்கு எம் ஜி ஆரின் பாடல்களை வகை தொகை படுத்த நான் உதவினேன். எம் ஜி ஆரின் தொடர்பியல் உத்திகள் என்ற வகையில் அவர் பாடலாசிரியரிடன் வலியுறுத்திய சொல் எளிமையும் கருத்து வலிமையும் குறிப்பிட்த்தக்கன.*

இரண்டு வயது பிள்ளை என் பாட்டின் பல்லவியை பாட வேண்டும் என்றளவில் எளிமையான சொற்களை கொண்டு அவர் பெற்ற பாடல்கள் இன்றும் காலத்தால் அழியாத கல்லெழுத்துக்களாக வரலாற்றில் நிலை பெற்றுள்ளன. இன்று வாட்சப்பில் துரோகிகளை இனம்காட்ட எங்கள் வீட்டு பிள்ளை படத்தில் இடம்பெற்ற நான் ஆணையிட்டால் பாட்டில் வரும்

இவர் ஆசைக்கும் தேவைக்கும்

வாழ்வுக்கும் வசதிக்கும் ஊரார் கால் பிடிப்பார் –

ஒரு மானமில்லை அதில் ஈனமில்லை

இவர் எப்போதும் வால் பிடிப்பார்

என்ற வரிகள் வலுவாக கை கொடுக்கின்றன. இப்படம் வந்த காலகட்ட்த்தில் இந்திய திரை அரங்குகளில் அதிக வரவேற்பு பெற்ற பாடலாக கணிக்கபட்ட பாடல் இதுவாகும். இன்றும் அதன் கருத்தும் இசையும் பல சூழ்நிலைகளில் கை கொடுக்கின்றது. எம் ஜி ஆர் கணக்கு

கேட்ட்தற்காக திமுகவை விட்டு வெளியேற்றிய போது இதே பாட்டில் உள்ள ''ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்'' என்ற வரிகள் அவருடைய சொந்தக் குரலாகவே ஒலித்தன. எம் ஜி ஆரின் பாடல்கள் பல தலைப்புகளில் ஆராயத் தக்கன.

எம் ஜி ஆர் பாடல்களை தொகுத்து வகைப்படுத்திய அனுபவம் எனக்கு எம் ஜி ஆர் பற்றிய தகவல்களை தொகுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. அடுத்ததாக அமெரிக்க மாணவர்கள் என்னிடம் தமிழ் கற்க வந்தபோது அவர்களை எம் ஜி ஆர் படங்களுக்கு அழைத்துச் சென்றேன். அவர்கள் எம் ஜி ஆர் பற்றி ஆர்வமாக தெரிந்துகொண்டனர். எம் ஜி ஆர் பற்றிய புத்தகங்கள் பேட்டிகள் கட்டுரைகள் துண்டு செய்திகள் என முப்பத்தைந்து ஆண்டுகள் சேகரித்ததைக் கொண்டு விகடன் டாட் காமில் முப்பது கட்டுரைகள் எழுதி வெளியிட்டேன். இன்னும் அவரை பற்றி எழுத நிறைய இருக்கிறது. இந்த ஆராய்ச்சி தனி நபர் செய்து முடிக்கக்கூடிய பணி அல்ல. எம் ஜி ஆர் என்பது ஒரு நிகழ்வு ***[phenomena]*** அதை பல்கலைக்கழகங்கள், மாநில அரசு, மத்திய அரசு, மற்றும் உலகெங்கும் பரவியிருக்கும் தமிழினம் சேர்ந்து செய்ய வேண்டிய மாபெரும் ஆராய்ச்சி பொருள் ஆகும்.

கலை மக்களுக்காக

கலை கலைக்காக என்ர சிந்தனையை விட கலை மக்களுக்காக என்ற சிந்தனையுடன் வளர்க்கப்பட்டவர் திராவிட இயக்கத்தை சேர்ந்த எம் ஜி ஆர். மேடை பேச்சை ஒரு கலையாக மேம்படுத்தி அதன் மூலமாக சமூக சீர்திருத்தத்துக்கு வித்திட்டவர் அண்ணா. அனல் பறக்கும் வசனங்களால் சமூகத்தின் சீர்கேடுகளை

சாடியவர் கலைஞர். திரைப்படத்தின் நடிப்பு நடனம் சண்டை பாடல் எனப் பல்வேறு அம்சங்களைக் கருவிகளாக்க் கொண்டு சங்க இலக்கியத்தின் கருப்பொருட்களான அகத்திணை [காதல்], புறத்திணை [சண்டை] என்பவற்றை தன் படத்தின் மையக் கருவாக்கியவர் எம் ஜி ஆர். அடுத்ததாக திருக்குறள் நாலடியார் போன்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் விருந்தோம்பல் கள்ளுண்ணாமை ஒழுக்கமுடைமை, கள்ளாமை பிறன்மனை நோக்கா பேராண்மை என கூறப்பட்ட நீதிக் கருத்துக்களையும் தன் படங்களில் போதித்தவர் எம் ஜி ஆர்.

தமிழரின் வீர விளையாட்டுக்களான சிலம்பம், சுருள்வாள், மான் கொம்பு போன்றவற்றை தன் படங்களில் காண்பித்து அவற்றைப் பெருமைப்படுத்திய பண்பாட்டு காவலர் எம் ஜி ஆர். பெண்மை போற்றுவோம் என்ற அடிப்படையில் தாய்க்குலத்தின் மதிப்பை உயர்த்தும் வகையில் படம் எடுத்தவர். ஒரு படத்தில் ஜோடியாக நடித்த நடிகையை மற்ற படங்களில் தங்கையாகக் கொண்டு நடிக்கமாட்டார். தம்பி மனைவியாக கருத வேண்டிய நடிகையை [விஜயகுமாரி] ஜோடியாக ஒப்பந்தம் செய்ய மாட்டார். திரைப்படமாக இருந்தாலும் நடிப்பு தானே என்றாலும் அதிலும் அவர் ஒரு கண்ணியத்தை காத்து வந்தார். எனவே எம்ஜி ஆருக்காக பல்கலைக்கழகங்களில் ஓர் ஆய்விருக்கை அமைப்பது எம் ஜி ஆர் நூற்றாண்டு விழா கொண்டாடுவதன் பயன்களில் முக்கியமானதாகும்

சென்னை பல்கலைக் கழகத்தில் எம்ஜிஆர் ஆய்விருக்கை

முன்னாள் மேயர் மனிதநேயச் செம்மல் சைதை துரைசாமி அவர்களின் சீரிய முயற்சியோடும் நிதி உதவியோடும் சென்னை பல்கலைக்கழகத்தில் எம் ஜி

ஆர் ஆய்விருக்கை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்விருக்கை **பாரதரத்னா புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் ஆய்விருக்கை** என்று அழைக்கப்படும். வரும் கல்வியாண்டில் இருந்து செயல்படத் தொடங்கும் இந்தா அய்விருக்கையோடு எம் ஜி ஆர் நுலகம் மற்றும் ஆவணக் காப்பகம் ஒன்றும் நிறுவப்படும். மாத இதழ் ஒன்று வெளிவரும் மாதம் ஒரு முறை வரும்

ஒவ்வொரு மாதமும் இது படம் அல்ல பாடம் என்ற தலைப்பில் ஒரு எம் ஜி ஆர் படம் காண்பிக்கப்பட்டு அப்படத்தின் சமூக அக்கறை குறித்து விவாதங்கள் நிகழ்த்தப்படும். எம்ஜி ஆரின் பன்முகத் திறமை மற்றும் ஆளுமை குறித்து ஆண்டுக்கு ஒரு சர்வதேசக் கருத்தரங்கும் இரண்டு தேசிய கருத்தரங்குகளும் நடத்தப்படும். வெளிநாட்டு ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் எம் ஜி ஆர் குறித்து அறிந்துகொள்வதற்கு இந்த ஆய்விருக்கை நல்ல ஒரு தகவல் களஞ்சியமாக விளங்கும் அவர்களின் ஆய்வுகள் ஊக்குவிக்கப்படும்.

1. எம் ஜி ஆர் ரசிகர்களின் தனித்தன்மை



இலக்கியமும் நாடகமும் திரைக்கலையும் அரசியலும் பின்னிப் பிணைந்திருக்கும் தமிழகத்தில், `எம்.ஜி.ஆர்' என்ற மூன்றெழுத்து நபர் நடத்தியிருக்கும் சாகசம், சரித்திரத்தில் இதுவரை காணப்படாத புதுமை. நாடகத்தில் ஆரம்பித்த அவரது வாழ்க்கைப் பயணம், திரையுலகில் கோலோச்சி, அரசியலில் நிறைவுபெற்றது. அவர் பிறந்து நூறு ஆண்டுகள் ஆனதைக் கொண்டாடும் இந்த ஆண்டில், அவரின் வெற்றிக்கான சூட்சுமங்களில் சிலவற்றைக் காண்போம்...

ரசிகர் மன்றம்

'நடிகன், நாடாள முடியுமா?' என்று எம்.ஜி.ஆரைப் பார்த்து தி.மு.க எள்ளி நகையாடியபோது, அவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் அவரின் ரசிகர்கள்தான். இவர்கள்தான், எம்.ஜி.ஆர் ஆரம்பித்த `அண்ணா தி.மு.க' கட்சியின் தொண்டர்களாக தம்மை அறிவித்துக்கொண்டு கட்சிப் பணிகளைச் சிறப்பாகத் தொடங்கி நடத்தினர்.

கட்சி, அதற்கான கொள்கை, நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்க்கை எனத் தொடங்கப்படும் முறைக்கு மாறாக, ரசிகர்களே தொண்டர்களாக மாறி எம்.ஜி.ஆரிடம் சென்று, `கட்சி தொடங்க வேண்டும்' என வற்புறுத்தி, அவரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டது தமிழகத்தின் புதுமையான... மறக்க முடியாத வரலாறு

எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம் என்பது, தமது படங்களின் மூலம் ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நடிகருக்காகத் தொடங்கப்பட்ட மன்றம் அல்ல. இந்த மன்றங்களை, நாம் சினிமா சார்ந்த ஒரு விஷயமாக மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. `கடவுள் இல்லை' என்ற பாரம்பர்யத்தில் தோன்றிய தி.மு.க-வில் தன்னை இணைத்துக்கொண்டிருந்த எம்.ஜி.ஆர் ரசிகர்கள், கடவுள் பயம் இல்லாத கெட்டவர்கள், ஏழை ஏதிலி, படிக்காத பாமரர், ரௌடி, எம்.ஜி.ஆரை ரசிக்கும் பெண்கள் மோசமானவர்கள்... என்பதுபோன்ற எண்ணங்களும் பரவலாக இருந்தன. இத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் எம்.ஜி.ஆர் ரசிகர்கள், அவர்மீது தீவிர அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

எம்.ஜி.ஆருக்கு முதலில் ரசிகர் மன்றம் ஆரம்பித்தவர், தன் மனைவியின் தாலியை விற்று தொடங்கினார். அதன் பிறகு ரசிகர் மன்றங்கள் புற்றீசல்களாகத் தோன்றின. கோயில் இல்லாத ஊர் இருக்கலாம், குளம் இல்லாத ஊர்கூட இருக்கலாம். ஆனால், எம்.ஜி.ஆர் மன்றம் இல்லாத இடமே இல்லை எனும் அளவுக்கு ரசிகர் மன்றங்கள் துளிர்த்தன.

பிரதமர் திறந்துவைத்த மன்றம்!

எம்.ஜி.ஆருக்குத் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, உலகில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் ரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்டன. ஆளும் கட்சியான

காங்கிரஸ், எம்.ஜி.ஆருக்குச் சிறிதும் ஆதரவு காட்டாத காலத்திலேயே மக்களின் ஆதரவு எம்.ஜி.ஆருக்குப் பரிபூரணமாக இருந்தது. அவருடைய ரசிகர் மன்றங்கள், அவரை வசூல் சக்கரவர்த்தியாக வைத்திருந்தன. அந்தமான் தீவில், எம்.ஜி.ஆருக்கு ரசிகர் மன்றம் தொடங்க வேண்டும் என ரசிகர்கள் திட்டமிட்டனர். அந்தச் சமயத்தில் அங்கு பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி வருவதாக இருந்தது. உடனே எம்.ஜி.ஆர் ரசிகர்கள், பிரதமரைக் கொண்டே மன்றத்தைத் திறக்க முடிவுசெய்து, அதில் வெற்றியும் பெற்றனர். இந்திய வரலாற்றிலேயே, ஏன் உலக வரலாற்றிலேயே ஒரு பிரதமர் ஒரு நடிகரின் ரசிகர் மன்றத்தைத் திறந்துவைத்த பெருமை எம்.ஜி.ஆர் ஒருவருக்கு மட்டுமே.

மன்றத்தைக் கலைத்துவிடு!

எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம், எம்.ஜி.ஆரைக் கேட்டுக்கொண்டு ஆரம்பிக்கப்படவில்லை. எம்.ஜி.ஆர் திரைப்படம் வெளியாகும் நாள்களில் கட் அவுட் வைப்பது, கூட்டமாகத் திரளும் ரசிகர்களை ஒழுங்குப்படுத்துவது, இனிப்பு வழங்குவது, எம்.ஜி.ஆர் பட போஸ்டர்களை எதிரி ரசிகர்களிடமிருந்து பாதுகாப்பது... எனப் பல்வேறு பணிகளை அவர்கள் செய்துவந்தனர். ஒரு சமயம் எம்.ஜி.ஆருக்கும் அவரின் ரசிகர்களுக்கும் இடையே மனஸ்தாபம் உண்டாயிற்று. `தன்மீதான அதீத அன்பால் ரசிகர்கள் சிலர் உணர்ச்சிவசப்பட்டு, சிலபல வேலைகளில் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டுவிடுகின்றனர்' என்று கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர்., அவர்களைக் கூப்பிட்டுக் கண்டித்தார். அப்போது அவர்கள் தங்களின் உள்ளூர் பிரச்னைகளை எடுத்துக்கூறி, தங்களின் நியாயத்தை உணர்த்த முயன்றனர். எம்.ஜி.ஆருக்கு சட்டென கோபம்

வந்துவிட்டது. அவர்களைப் பார்த்து, `மன்றத்தைக் கலைத்துவிடுங்கள்' என்றார்.

கூட்டத்தில் இருந்த கோபக்கார ரசிகர், `அதைச் சொல்ல நீங்கள் யார்? நீங்கள் சொல்லி நாங்கள் மன்றம் ஆரம்பிக்கவில்லை. படம் நடிப்பதுதான் உங்கள் வேலை. ரசிகர் மன்றம் நடத்துவது எங்கள் விருப்பம். எங்கள் பிரச்னைகளை நாங்களே தீர்த்துக்கொள்கிறோம்' என்றார். எம்.ஜி.ஆர் அசந்துபோய்விட்டார். 'நம்மீது இப்படி ஒரு வெறித்தனமான அன்பு வைத்திருக்கிறார்களே... இவர்களது பாசத்தையும் பற்றையும் நாம் குறைத்து மதிப்பிட்டுவிட்டோமே' என நினைத்து, 'இவர்கள்தான் தமது சொத்து, சுகம், வாழ்வு!' என்பதை உணர்ந்துகொண்டார். அவர்களைச் சமாதானம் செய்து அனுப்பிவைத்தார்.

எங்க ஊர் எம்.ஜி.ஆர் இயேசுபுத்திரன்!

எம்.ஜி.ஆரையே தன் வாழ்வின் வழிகாட்டியாகக்கொண்டு வாழும் ரசிகர்கள் பல கோடிப்பேர் உண்டு. கன்னியாகுமரியைச் சேர்ந்த இயேசுபுத்திரன் என்பவர், கடலில் மூழ்கி இறக்க முயற்சி செய்பவர்களைக் காப்பாற்றுவதைத் தம் தலையாயக் கடமையாகக்கொண்டு வாழ்பவர்; கடலில் நீந்தும் ஆசையில் அங்கு இருக்கும் பாறைகளில் சிக்கி உயிரிழக்கும் பலரின் உடல்களைக் கரை சேர்த்தவர். அந்தப் பணிக்கான உந்துதல், எம்.ஜி.ஆர் நடித்த `படகோட்டி' படம். தீவிர எம்.ஜி.ஆர் ரசிகரான இயேசுபுத்திரன் ``சின்ன வயசுல இருந்து எம்.ஜி.ஆர்-னா எனக்கு அவ்வளவு ப்ரியம். படகோட்டியா நடிச்சதுல இருந்து அவரு மேல உசிராயிட்டு. எம்.ஜி.ஆர் மாதிரி சும்மா பேசினா லட்சியம் ஆகிடுமா? உதவின்னு வந்தா உதவணும் சார்'' என்று கூறும் லட்சிய வாழ்க்கையை

வாழ்ந்துவருகிறார். ஏழைதான் என்றாலும், எம்.ஜி.ஆரின் கொள்கைகளையே தன் கொள்கைகளாகக்கொண்டு வாழும் எளியவர், லட்சியவாதி.

ரத்தத்தின் விலை 15 ரூபாய்!

பழைய படங்களில், எம்.ஜி.ஆர் நடித்த படங்கள் மட்டுமே இன்றும் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடிக்கொண்டிருக்கின்றன. மதுரை, சென்னை போன்ற பெரிய ஊர்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட திரையரங்குகளில் எம்.ஜி.ஆர் படங்கள் ஓடுவதைக் காணலாம். ரத்ததானம் பற்றிய விழிப்புஉணர்வு வந்த காலத்தில், அரசு மருத்துவமனைகளில் இளைஞர்கள் வந்து ரத்தம் கொடுத்துக்கொண்டே இருந்தனர். சிலர் வாரம் ஒருமுறை வந்ததைக் கேள்விப்பட்ட மருத்துவர்கள், அதிர்ந்துபோயினர். அவர்களை விசாரித்தபோது எம்.ஜி.ஆர் நடித்த புதுப்படம் வெளியாகும் நாள்களில், இளைஞர் கூட்டம் இவ்வாறு ரத்ததானம் செய்ய அதிக எண்ணிக்கையில் வந்த உண்மையைத் தெரிந்துகொண்டனர். இவர்கள், 'நாம் சொன்னால் கேட்க மாட்டார்கள்' எனக் கருதிய மருத்துவர்கள், அதை எம்.ஜி.ஆருக்குத் தெரியப்படுத்தினர்.

எம்.ஜி.ஆர் பதறிப்போய் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், 'என் படத்தைப் பார்ப்பதற்காக எவரும் உங்கள் ரத்தத்தை விற்கக் கூடாது. பணம் இல்லையென்றால், எனக்குத் தந்தி கொடுங்கள். நான் பணம் அனுப்பிவைக்கிறேன்' என்றார். சிலர் அந்த வழியையும் கையாண்டனர். பணம் மணியார்டரில் வந்தது. படம் பார்த்து மகிழ்ந்தனர். ஆனாலும், 'எம்.ஜி.ஆரிடமே பணம் வாங்கி அவர் படத்தைப் பார்ப்பதா!' என்று மனம் வெதும்பினர். பிறகு, அவ்வாறு

பணம் கேட்பதையும் ரத்தத்தை விற்பதையும் விட்டுவிட்டனர்.

எம்.ஜி.ஆர் ரசிகர்கள், `எம்.ஜி.ஆருக்கு, தாம் ஏதாவது செய்ய வேண்டும்' என நினைப்பார்களே தவிர, அவரிடம் எதையும் கேட்டுப் பெற விரும்புவதில்லை. `உனக்கு என்ன வேண்டும் கேள்' என்று எம்.ஜி.ஆர் பலரிடம் கேட்டபோதும், ரசிகர்கள் `எங்களுக்கு எதுவும் வேண்டாம்' என்று மறுத்திருக்கிறார்கள். அவரைப் பார்த்தாலே போதும் தமது ஜென்மம் பூர்த்தியடைந்துவிட்டதாகவே கருதினர். இதுவும் எம்.ஜி.ஆருக்குக் கிடைத்த மாபெரும் வரப்பிரசாதம்.

ரசிகையின் தீவிரப்பற்று!

'எம்.ஜி.ஆர் படங்களைப் பார்க்கும் பெண்களுக்கு, 1950 - 60களில் 'அவள் நல்லவள் அல்ல', 'கடவுளுக்கு பயப்பட மாட்டாள்' போன்ற அவப்பெயர்கள் நிலவியபோதும் பெண்கள் தீவிர ரசிகையாகவே இருந்தனர். கிராமங்களில், `எம்.ஜி.ஆர் ரசிகையோடு வாழ மாட்டேன்' என பஞ்சாயத்தைக் கூட்டிய வரலாறும் உண்டு.

ஒருமுறை ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மம்சாபுரம் என்ற கிராமத்தில் ஒரு குடும்பத்தில் தகராறு எனப் பஞ்சாயத்துக் கூட்டப்பட்டது. கணவர், ``என் மனைவி எம்.ஜி.ஆர் படத்தைப் பார்ப்பது எனக்குப் பிடிக்கவில்லை" என்றார். மனைவியோ, ``இவருடன் நான் வாழ மாட்டேன். இவர் எப்போதும் எம்.ஜி.ஆரைப் பற்றி குறைத்துப் பேசுகிறார்" என்றார். பஞ்சாயத்தார் கணவனிடம், ``எம்.ஜி. ஆரைப் பற்றி நீ எதுவும் குறைத்துப் பேசக் கூடாது. அவள் எம்.ஜி.ஆர் படம் பார்க்க நீ அனுமதிக்க வேண்டும். நீங்கள் தனித்தனியாக படம் பார்த்துக்கொள்ளுங்கள். வீட்டில், வீட்டு விஷயம்

மட்டுமே பேசுங்கள். சினிமா பற்றி இருவரும் பேசக் கூடாது" என்று அறிவுறுத்தி அனுப்பிவைத்தனர்.

அரசியலில் ரசிகையர் புரட்சி!

எம்.ஜி.ஆர்., கட்சி ஆரம்பித்து திண்டுக்கல்லில் முதல் தேர்தலைச் சந்தித்த நேரம். அப்போது அங்குள்ள காங்கிரஸ் பிரமுகர் ஒருவரின் புது மருமகள் தலையில் இரட்டை இலையில் ரோஜா செருகியிருப்பதைப் பார்த்துவிட்டு, 'என்ன... பொண்ணு அந்தக் கட்சியா?' என்றார். அதில் வருத்தப்பட்ட பிரமுகரின் மகன், 'ஆமாம். நமக்கு சரிவரலைன்னா திருப்பி அனுப்பிட வேண்டியதுதான்' என்றார். அப்போது அங்கு வந்திருந்த பிரமுகர் ஒருவர் , இந்தப் பதிலால் அதிர்ச்சியடைந்தார். ஆனால் அந்தப் பெண்ணோ, 'அதுதான் என் தலைவிதின்னா அப்படியே ஆகட்டும்' என்றார்.

இப்போது இரண்டாவது முறையாக அந்த விருந்தினருக்கு அதிர்ச்சி. 'என்ன பெண் இவள், கணவர் சொல்படி கேட்காமல், அவர் வழிப்படி செல்லாமல் தனக்கென ஒரு கருத்து வைத்திருக்கிறாளே. அதுவும் `அப்படியே ஆகட்டும்' என்கிறாளே. 'மன்னித்துவிடுங்கள். உங்கள் சொல்படி நானும் இனி காங்கிரஸ் அபிமானியாகவே மாறிவிடுகிறேன்' என்று சொல்ல வேண்டாமா? அவளால் அவள் கணவருக்கு எவ்வளவு பெரிய அவமானம் ஏற்பட்டுவிட்டது. அதுவும் தன்னைப்போன்ற ஓர் அயலான் முன்னிலையில் அந்தப் பெண் இப்படிப் பேசியிருக்க வேண்டாமே' என்று சங்கடப்பட்டார். ஆனால், எம்.ஜி.ஆர் ரசிகைகள் இதற்கெல்லாம் அஞ்சுவது கிடையாது. பலர் பட்டென பதில் சொல்லிவிடுவர். அந்தத் தேர்தலில் எதிர்க்கட்சியினர் அசந்துபோகும் அளவுக்குப் பெண்கள் தம் தலையில் இரட்டை இலையுடன்கூடிய பூவைச்

சூடியபடி வாக்குச்சாவடிகளுக்கு வந்து வாக்குகளைப் பதிவுசெய்தனர்.

ரசிகைகள் முடிவுசெய்த ஆட்சி!

தம் ரசிகையரின் உள்ளக் கருத்தின் உறுதிப்பாட்டை நன்கு உணர்ந்திருந்த எம்.ஜி.ஆர் ஒரு பொதுக்கூட்டத்தில், `பெண்கள், தம் கணவர் சொன்னாலும் கேட்க மாட்டர்கள்; நான் சொன்னால் கேட்பார்கள். இது தாய்க்குலத்தின் கட்சி' என்றார். அதுபோல வேறு எவரும் நினைத்திருக்கக்கூட இயலாது. பெண்களும் அரசியல் மற்றும் ஆட்சி பற்றி தனித்து முடிவெடுக்க முடியும், அவர்களின் கருத்தும் சபையேறும், அதுவும் வெற்றிபெறும் என்பதை உலகுக்கு உணர்த்தியவர்கள் எம்.ஜி.ஆர் ரசிகைகளே என்றால், அது உண்மை; வெறும் புகழ்ச்சி அல்ல.

பெண்களின் இந்த ரசிகப் பற்றுக்குக் காரணம் என்னவென்றால், படங்களில் அவர் பெண்களை மதித்த விதம் என்பது சத்தியவாக்கு. பல ஆண் விமர்சகர்கள், எம்.ஜி.ஆரை `ஆணாதிக்கவாதி' என்று குறை சொல்வதும் உண்டு. ஆனால், இலக்கியமும் திரைப்படங்களும் சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதே இந்தக் குற்றச்சாட்டுக்கான நேர்மையான பதில். சமூகத்தின் போக்கையும் மீறி எம்.ஜி.ஆர் தன் படங்களில் பெண்களை மன உறுதி படைத்தவர்களாக, செயல்திறன் படைத்தவர்களாகக் காண்பித்தது உண்டு. 'நாடோடி மன்னன்' படத்தில் வரும் மதனா (பானுமதி), 'அரசகட்டளை'யில் வரும் அமுதா (சரோஜாதேவி), 'அடிமைப்பெண்'ணில் வரும் ஜீவா (ஜெயலலிதா)... எனப் பல பெண் கதாபாத்திரங்களை அதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

2. அடிமைப்பெண்ணுக்குப் பெருகி வரும் செல்வாக்கு

புதியவர்களும் இளைஞர்களும் `அது என்ன, எம்.ஜி.ஆரின் செல்வாக்கு இப்படிப் பெருகிக்கொண்டே போகிறதே!' என ஆச்சர்யப்பட்டு, அவர் படங்களை போனிலும் கம்ப்யூட்டரிலும் பார்க்கிறார்கள். ``பழைய



படங்களை, என்னால் பத்து நிமிடம்கூடப் பார்க்க முடியாது'' என்று சொல்லும் எழுத்தாளர் ஜெயமோகன்கூட, ``எம்.ஜி.ஆர் படங்களை கடைசி வரை என்னால் பார்க்க முடிகிறது'' என்று ஆனந்த விகடனில் தெரிவித்திருந்தார். அதுதான் எம்.ஜி.ஆரின் வெற்றி ஃபார்முலா. பிடிக்காதவரையும் தம் படத்தைப் பார்க்கவைத்துவிடுவார்.

திரைப்படங்களில் வன்முறை அதிகரிப்பதுகுறித்து தனது கவலையைத் தெரிவித்த உளவியல் நிபுணர் ருத்ரைய்யாவும் “அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர் பத்து பேரை எதிர்த்து சண்டைபோடும்போது கஷ்டமாக இருக்காது; அருவருப்பாக இருக்காது; UNEASY-ஆக இருக்காது’’ என்று குறிப்பிட்டிருந்தார். ஏனென்றால், எம்.ஜி.ஆர் எப்படியும் ஜெயித்துவிடுவார் என்பதால், ரசிகர்கள் பயப்படாமல் படம் பார்க்கலாம். நல்லவன் வாழ்வான் என்பதில், எம்.ஜி.ஆர் படங்களில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை.

எம்.ஜி.ஆர் திரைப்படங்கள் மீது கடுமையாக விமர்சனம் வைக்கும் பலரும், அவரை ஏதேனும் ஒரு வகையில் ரசித்தனர். சிலர் அவர் திரையில் நடித்த காலத்தில் விமர்சித்துவிட்டு, பிற்காலத்தில் அவரைப் பாராட்டியதும் உண்டு. தூரத்தில் இருந்து அவரைப் பார்த்தும் கேள்விப்பட்டும் விமர்சித்தவர்கள் அவரை அருகில் நெருங்கிப் பார்த்துப் பழகியபோது, அவரது நற்குணங்களைக் கண்டு தம் தவறை உணர்ந்திருக்கின்றனர்.

ஒருமுறை சினிமாவில் எதிர் அணியைச் சேர்ந்த ஒருவர், தன் மகள் திருமணத்துக்கு பணம் இல்லாமல் அலைந்தபோது சிலர் அவரை “எம்.ஜி.ஆரிடம் போய்க் கேளுங்கள்'' என்றனர். அவரும் வேறு வழியின்றி போய்க் கேட்டார். எம்.ஜி.ஆர் ``உங்கள் முகவரியைக்

கொடுத்துவிட்டு போங்கள்" என்றார். இரவு ஆகிவிட்டது. பணம் கிடைக்கவில்லை. `இனி மானம் போய்விடும்' என்று நினைத்த அவர்கள், தற்கொலை செய்துகொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்தனர். ஷூட்டிங் முடிந்து வீட்டுக்கு வந்த எம்.ஜி.ஆர்., சட்டைப் பையில் இருந்த முகவரிச் சீட்டைப் பார்த்தார். திடீரென ஞாபகம் வந்தவராக தன் உதவியாளரை அழைத்து உடனே பணம் கொடுத்து அனுப்பினார். நல்ல வேளை அவர்கள் தற்கொலை செய்துகொள்வதற்குள் எம்.ஜி.ஆரின் உதவியாளர் போய்விட்டார். எதிர் அணியைச் சேர்ந்தவர் என்பதால், அவர் உதவவில்லை என நினைத்திருந்த அந்தக் குடும்பத்தினர், தம் நன்றியைச் சொல்ல இயலாமல் திண்டாடினர்.

தங்கள் குடும்ப மானமும் தங்கள் மகளின் வாழ்க்கையும் காப்பாற்றப்பட்டுவிட்டதால், அவர்கள் எம்.ஜி.ஆரை தெய்வமாகக் கருதினர். இவ்வாறு நண்பர்-பகைவர் எனப் பாரபட்சம் பார்க்காமல், எம்.ஜி.ஆர் பலருக்கும் உதவியுள்ளார். அதனால்தான் இன்னும் அவரைப் பற்றி மக்கள் பேசிக்கொண்டே இருக்கின்றனர்.

எம்.ஜி.ஆர்., சினிமாவைவிட்டு விலகி நாற்பது ஆண்டுகளாகிவிட்டன; இந்தப் பூவுலகைவிட்டு மறைந்து முப்பது வருடங்களாகிவிட்டன. இன்னும் அவர் இருப்பது போன்ற ஓர் எண்ணமும் பேச்சும் நிலவிக்கொண்டிருப்பதை யாரும் மறுக்க இயலாது. காலத்தால் அழியாத காவிய நாயகனாக இன்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். இதற்கான காரணங்களை இப்போது வெளிவந்திருக்கும் `அடிமைப்பெண்' படத்தை மட்டும் வைத்து ஆராய்வோம். எம்.ஜி.ஆரிடம் ‘‘உங்களை எவ்வளவு நாள் மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள்?’’ என்று கேட்டபோது ‘‘என் படங்களின் நெகட்டிவ் இருக்கும்

வரை" என்றார். ஆம், அது சத்தியவாக்கு. அவர் படங்களின் நெகட்டிவ் இப்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் திரை அரங்குகளில் வெற்றி நடைபோடுவதைக் காண்கிறோம்.

இனி இந்தப் படங்களைப் பாதுகாப்பதும் எளிது. அவர் படங்களை திரை அரங்குக்குப் போய்தான் பார்க்க வேண்டும் என்றில்லை, நம்முடைய மொபைல்போனில்கூட நினைத்த நேரத்தில் நினைத்த காட்சிகளைப் பார்க்கலாம் என்ற நிலை தோன்றிவிட்டது. `பாகுபலி'யின் இமாலய வெற்றியும் கதைப் பொருத்தமும் இப்போது சேர்ந்துகொண்டு `அடிமைப்பெண்'ணுக்கு வெண் சாமரம் வீசுகின்றன.

அன்று அடிமைப்பெண்

"அடிமைப்பெண்' படம், 1969-ம் ஆண்டு மே தினத்தன்று வெளிவந்தது. அது ஒரு சாதனைப் படம். எம்.ஜி.ஆரின் முந்தைய சாதனைகளை அவரது படங்களே முறியடிப்பது வழக்கம். `எங்க வீட்டுப் பிள்ளை' படத்தின் சாதனையை முறியடித்து, புதிய சாதனை படைத்தது `அடிமைப்பெண்'. எம்.ஜி.ஆர் தமிழ் திரையுலகின் உச்சத்தை எட்டியபோது இந்தப் படம் வெளிவந்தது. `அடிமைப்பெண்' படம் எடுத்தபோது ஜெயலலிதாவும் அதிக செல்வாக்குடன் இருந்தார். இவரது ஆளுமையையும் செல்வாக்கையும் படம் முழுக்கக் காணலாம். இந்தப் படத்தை எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ் தயாரித்தது, கே.வி.மகாதேவன் இசை அமைத்தார். எம்.ஜி.ஆரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியின் சம்பந்தி கே.சங்கர் இயக்கினார். கலைஞரின் மைத்துனர் சொர்ணம் வசனம் எழுதினார். ஜெயலலிதா கதாநாயகி மற்றும் வில்லி என இரண்டு மாறுபட்ட கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். இப்போது விளம்பரங்களில் அவரது வில்லி தோற்றத்தை அதிகமாக

வெளியிடுகின்றனர். எம்.ஜி.ஆர்., அப்பா-மகன் என இரு வேடங்களில் நடித்திருந்தாலும், அப்பா வேடம் மிகவும் சிறியது. ஒரு சண்டைக் காட்சியும் சில வசனங்களும் மட்டுமே அவருக்கு உண்டு. ஜெயலலிதாவுக்கு இரண்டும் பெரிய கதாபாத்திரங்கள். அத்துடன் ஒரு பாடலும். இதற்கு திரையிசைத் திலகம் கே.வி.மகாதேவன், எம்.ஜி.ஆரிடம் 90 மெட்டுக்கள் போட்டுக்காட்டினார். `அம்மா என்றால் அன்பு...' என்ற அந்தப் பாடல், எம்.ஜி.ஆர் பாடுவதற்காக டி. எம்.எஸ்-ஸைக் கொண்டு மீண்டும் குழுப்பாடலாகப் பதிவு செய்யப்பட்டது. ஆனால், படத்தில் இடம்பெறவில்லை.

`அடிமைப்பெண்'ணின் சாதனை

தமிழில் 1969-ல் வெளிவந்த படங்களில் `அடிமைப்பெண்' மிகப்பெரிய வெற்றி பெற்றது. அந்த ஆண்டின் ஒரே வெள்ளிவிழா படம். சென்னை நகரில் முதன்முதலாக நான்கு திரை அரங்குகளில் திரையிடப்பட்டு, நூறு நாள்கள் ஓடிய வெற்றிப்படம். திருவண்ணாமலை, சேலம், கடலூர் ஆகிய ஊர்களில் மூன்று திரை அரங்குகள், கோவையில் இரண்டு திரையரங்குகள், பெங்களூரில் மூன்று திரை அரங்குகள், இலங்கையில் ஏழு திரையரங்குகளில் மட்டுமல்லாது, திரையிட்ட அனைத்து இடங்களிலும் வெற்றி வாகை சூடியது `அடிமைப்பெண்'. மதுரையில் சிந்தாமணி தியேட்டரில் வெளியிட்டு நூறாவது நாள் வெற்றி விழாவின்போது எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, பண்டரிபாய், அசோகன் போன்றோர் ரசிகர்களுக்கு நேரடியாகக் காட்சியளித்தனர்.

இன்றைக்கு `அடிமைப்பெண்' (2017) வெளியாவதற்கு டிஜிட்டல் மாற்றம் காரணமாக பெரியளவில் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால், பத்து வருடங்களுக்கு முன்னால் சென்னையில் உள்ள

மெலடி, அபிராமி, பிருந்தா போன்ற ஏசி திரையரங்குகளில் வெளியாகி, தன் வெற்றியை மீண்டும் பறைசாற்றியது `அடிமைப்பெண்'. இதேபோன்று மற்ற ஊர்களிலும் நல்ல லாபத்தைப் பெற்றுத்தந்தது. எம்.ஜி.ஆர் படங்களுக்குக் கிடைக்கும் வசூல் காரணமாக, அரசுக்கு நல்ல வரித்தொகையும் கிடைத்தது. இன்றைக்கு படங்களுக்கு வரிவிலக்கு கேட்கின்றனரே தவிர, வரி செலுத்த யாரும் முன்வருவதில்லை. ஆனால், எம்.ஜி.ஆர் பட விளம்பரங்களில் அரசுக்குச் செலுத்திய வரித்தொகையைக் குறிப்பிட்டு ஒருவரும் விளம்பரம் செய்வது கிடையாது. அரசுக்கு வரி செலுத்துவதைத் தவிர்க்கவே திட்டமிடுகின்றனர்.

அரசியலுக்கு அழைத்த 'அடிமைப்பெண்'

'அடிமைப்பெண்'ணின் வெற்றி, எம்.ஜி.ஆருக்கு அரசியலில் நேரடியாக அடி எடுத்துவைக்கும் ஊக்கத்தைக் கொடுத்தது. அரசியலுக்கு வந்தால் தன்னை ஆதரிப்பார்களா என்பதை அறிய விரும்பிய எம்.ஜி.ஆர்., தயாரிப்பாளர் நாகிரெட்டியிடம் இதுகுறித்து பேசி, தன்னை வைத்து ஒரு படம் எடுக்கும்படி கூறினார். இந்தியில் வெளிவந்து வெற்றிநடை போட்டுக்கொண்டிருந்த `அப்னா தேஷ்' என்ற படத்தை `நம் நாடு' என்ற பெயரில் தமிழில் எடுத்தனர். அந்தப் படம் `அடிமைப்பெண்' ரிலீஸாகி ஆறு மாதங்கள் கழித்து வெளிவந்தது. அதுவரை அவர் தன் படம் எதையும் வெளியிடவில்லை.

1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் எம்.ஜி.ஆரின் அதிர்ஷ்ட எண்ணான 7- நாள் அன்று தமிழகம் எங்கும் வெளியாயிற்று. சென்னையில் முதல் நாள் திரையரங்குக்கு வந்து நாகி ரெட்டியுடன் `நம் நாடு' படத்தைப் பார்த்த எம்.ஜி.ஆர்., ரசிகர்களின் வரவேற்பைப் பார்த்து அவரைக் கட்டிப்பிடித்து தன்

மகிழ்ச்சியைக் வெளிப்படுத்தினார். ``மக்கள் என்னை ஏற்றுக்கொண்டுவிட்டனர். வெற்றி... வெற்றி!'' என்று கூறி மகிழ்ந்தார்.

பத்திரிகைகளில் அடிமைப்பெண்'`

`அடிமைப்பெண்' பற்றி பத்திரிகைகள் பல ஆண்டுக்கு முன்பிருந்தே செய்திகளை வெளியிட்டு வந்தது. முதலில் பானுமதி, அஞ்சலிதேவி எம்.ஜி.ஆர் நடித்து வெளிவருவதாக இருந்தது. பிறகு, சரோஜாதேவி கே.ஆர்.விஜயா மற்றும் ஜெயலலிதா நடித்து படப்பிடிப்பும் நடந்தது. அப்போது ஏற்பட்ட தீவிபத்தினால் படம் நின்று போயிற்று. இந்தப் படத்தில் இளவரசியான ஜெயலலிதா அடிமைப்பெண்ணாக இருப்பதாகவும், அவரை எம்.ஜி.ஆர் காப்பற்றிக் கொண்டுவந்து அரசியாக்குவதாகவும் கதை அமைந்திருந்தது. இந்தக் கதை கிட்டத்தட்ட `நாடோடி மன்னன்' கதைபோல் இருப்பதால், புதிய கதை உருவாக்கப்பட்டு ஜெயலலிதாவுக்கு அதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

ஜெயலலிதா நடிப்பது முடிவானதும், தமிழின் முன்னணிப் பத்திரிகைகளில் `அடிமைப்பெண்'ணின் படப்பிடிப்பு குறித்து பல செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. பாலைவனத்தில் ஜெயலலிதா ஆடும் நடனத்துக்கு தைக்கப்பட்ட உடைக்கு பல மீட்டர் நீளமான துணி எடுக்கப்பட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. அத்துடன் அவர் ஆடும் மற்றொரு நடனத்தில் அவர் சிறிய முரசுகளைக் கட்டிக்கொண்டு ஆடுகிறார். இதில் அவர் நடனங்கள் வெளிநாட்டுப் பாணியில் அமைந்திருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்தன. அவரது நடனப் பசிக்கு இந்தப் படம் நல்ல தீனியாக அமைந்ததை மறுக்க இயலாது. எகிப்தில் ஆடும் `பெல்லி டான்ஸில்' உள்ள நடன அசைவுகளை

`ஏமாற்றாதே ஏமாறாதே...' பாடலில் தமிழ்ப் படத்துக்கு ஏற்ற வகையில் நடன அசைவுகளை அளவாக வெளிப்படுத்தியிருப்பார் ஜெயலலிதா. `காவல்காரன்' படத்தில் `நினைத்தேன் வந்தாய் நூறு வயது...' பாடல் காட்சியிலும் இதே பெல்லி டான்ஸ் மூவ்மென்ட்ஸைப் பார்க்கலாம்.

புஷ் குல்லா

`அடிமைப்பெண்' படத்துக்காக படப்பிடிப்புக்குப் போயிருந்த வேளையில்தான் எம்.ஜி.ஆருக்கு புஷ் குல்லா பரிசாகக் கிடைத்தது. அது அவருக்கு அழகாக இருப்பதாக அவர் மனைவி ஜானகி சொன்னதால், அன்று முதல் அவர் அந்த புஷ் குல்லாவைத் தொடர்ந்து அணிந்துவந்தார். அப்போது ஒரு நிருபர், ``நீங்கள் வழுக்கையை மறைக்கத்தான் புஷ் குல்லா அணிகிறீர்களா?" என்று கேட்டபோது, ``எனக்கு வழுக்கை இருந்தால், மக்கள் என்னை எம்.ஜி.ஆர் என்று ஏற்றுக்கொள்ள மாட்டார்களா?" என்று பதில் கேள்வி கேட்டார். இந்தக் கேள்விக்கான பதிலை, அந்த நிருபர் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் 1985-ம் ஆண்டில் சிகிச்சை பெற்றுவந்தபோது வெளியான புகைப்படங்களைப் பார்த்து மக்கள் அவருக்கு அமோகமாக ஓட்டளித்து வெற்றி பெறச்செய்தபோது புரிந்துகொண்டார். அவரது கதை கதாபத்திரம் மற்றும் கொடை உள்ளம் இவையே மக்களை மிகவும் கவர்ந்தன.எம்.ஜி.ஆர்

1936-ம் ஆண்டில் எம்.ஜி.ஆர் `சதிலீலாவதி' என்ற படத்தில் நடித்தது முதல் 1969-ம் ஆண்டில் `அடிமைப்பெண்' வெளிவரும் வரை அவரைப் பார்த்துக்கொண்டிருந்த மக்களுக்கு, அவர் வயது என்ன என்பதைக் கணக்கிடத் தெரியாதா? அவருக்கும் அந்தந்த வயதுக்குரிய உடலியல் மாற்றங்கள் வரும் என்பது புரியாதா? இருந்தாலும் அவரை மக்கள் ரசித்து

மகிழ்ந்ததற்குக் காரணம், அவரது கதையமைப்பும் அதற்கேற்ற கதாபாத்திரப் பொருத்தமும் இளமைத் தோற்றமும் அவரது சுறுசுறுப்பும்தான்.

பாடல் காட்சிகளில் அவர் சும்மா நின்றுகொண்டு பாட மாட்டார். அவரிடம் ஒரு துள்ளலும் உற்சாகமும் ததும்பிக்கொண்டேயிருப்பதைப் பார்க்கலாம். அதனால்தான் `வேட்டைக்காரன்' பட விமர்சனத்தில் `கால்களில் சக்கரம் கட்டியிருக்கிறாரோ!' எனக் கேட்டிருந்தது. ஆக, `அடிமைப்பெண்' படப்பிடிப்புக்குப் பிறகு எம்.ஜி.ஆரின் உடல் மெரினாவுக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்யப்படும் வரை அவர் புஷ் குல்லா அணிந்திருந்தார்.

எம்.ஜி.ஆரின் கையில் ஒரு வாட்ச்

``நூறு முறையாவது `அடிமைப்பெண்' படத்தைப் பார்த்திருப்பேன்'' என்று கூறும் ஒரு ரசிகர், ஒருநாள் எம்.ஜி.ஆர் கையைப் பிடித்து முத்தம் கொடுத்து அவருடன் கைகுலுக்கி இருக்கிறார். அவர் எம்.ஜி.ஆர் ப்ரியர் அல்லர் வெறியர். எம்.ஜி.ஆர் கார் அங்கு இருந்து நகர்ந்த பிறகும் எம்.ஜி.ஆரைத் தொட்ட இன்பத்திலேயே திளைத்திருந்தார். அப்போது அந்தப் பகுதியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆரின் கார் சற்று தொலைவில் நின்றுவிட்டது. மீண்டும் எல்லோரும் கார் அருகில் ஓடினர். அவர் ஒரு வாட்சை நீட்டியபடி வெளியே எட்டிப்பார்த்தார். பிறகுதான் தெரிந்தது, இந்த ரசிகர் எம்.ஜி.ஆர் கையைப் பிடித்தபடி காருடன் சிறிது தூரம் ஓடியபோது, அவரது வாட்ச் கழன்று எம்.ஜி.ஆர் மடியில் விழுந்திருப்பது. ரசிகருக்கு இரட்டிப்பு சந்தோஷம். எம்.ஜி.ஆர் தொட்டுத் தந்த வாட்ச், இன்றும் அவருக்குப் பொக்கிஷமாகத் தெரிகிறது. அந்தப் பகுதியில் இரண்டு நாள்களுக்கு அதுதான் பேச்சு.

கொடுக்கக் கொடுக்க இன்பம் பிறக்குமே!

எம்.ஜி.ஆரின் கொடை உள்ளம் எல்லோருக்கும் தெரிந்ததுதான் என்றாலும், பாலைவனத்து ஒட்டகவாலாக்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏராளமான ஒட்டகங்கள் இடம்பெறும் காட்சி ஒன்றில் நடிக்க பாலைவனத்துக்கு வந்த அவர்களுக்கு, தாகம் தீர்க்க எம்.ஜி.ஆர் கிரேடு கிரேடாக கோகோகோலா வரவழைத்துக் கொடுத்தார். அவர்கள் மனமுவந்து `பெரியமனுஷன்யா அவரு' என்ற அர்த்தத்தில் `படா ஆத்மி' எனப் புகழ்ந்தனர்.

படப்பிடிப்புக்காக ராஜஸ்தான் வந்த எம்.ஜி.ஆர்., அங்கு நடந்த விபத்துக்கான நிவாரண உதவியாக பெருந்தொகை ஒன்றை முதலமைச்சரிடம் கொடுத்து உதவியிருக்கிறார். மறுநாள் பத்திரிகைகளில் எம்.ஜி.ஆரின் புகழ் கொடிகட்டிப் பறந்தது. எங்கு இருந்தாலும் மலர் மணக்கும் என்பதில் ஆச்சர்யமில்லையே! இந்தப் பாலைவனப் படப்பிடிப்பின்போது ஜெயலலிதாவால் மண்ணில் கால் புதைந்து நடக்க இயலவில்லை என்பதால், எம்.ஜி.ஆர் அவரை குழந்தைபோல தூக்கிக்கொண்டு சென்றாராம். உதவி என்பது, பணத்தால் மட்டுமல்ல... நல்ல மனத்தாலும் நடக்கும்.

நிலைத்து நிற்கும் பாத்திரப் படைப்பு

சமீபத்தில் வட மாநிலத்தில் ஒரு விவசாயி, தன்னிடம் உழவு மாடு இல்லாத காரணத்தால் தன் மகள்களை ஏரில் பூட்டி, தன் நிலத்தை உழும் செய்தியைப் படித்தோம். பலர் வருத்தப்பட்டனர். இதே நிலைதான் `அடிமைப்பெண்' படத்தில் வரும் பெண்களுக்கும். அவர்கள் வண்டி இழுக்க வேண்டும், ஏர் உழ வேண்டும், செக்கு இழுக்க வேண்டும். இவர்களை

சூரக்காட்டு மன்னனிடமிருந்து வேங்கையன் (எம்.ஜி.ஆர்) காப்பாற்ற வேண்டும். `இது ஏதோ ராஜா காலத்துக் கதை. இதெல்லாம் இன்றைக்கு சரிவராது' என நினைத்து ஒதுக்க முடியாது. எம்.ஜி.ஆரின் படங்கள் எல்லா காலங்களுக்கும் பொருந்தும் கதையையும் கதாபாத்திரங்களையும் கொண்டிருப்பதால்தான், அவை இன்றும் இளைய சமுதாயத்தினராலும் விரும்பிப் பார்க்கப்படுகின்றன; வரவேற்பு பெறுகின்றன.

ஹீரோ-வை உருவாக்கும் ஜீவா

கிராமங்களில் கட்டுக்கடங்காத காளை போலத் திரியும் ஒருவனைத் திருத்த வேண்டும் என்றால், `ஒரு கால்கட்டு போட்டுவிட்டால் சரியாகிவிடும்' என்பார்கள். அதாவது ஒரு பெண் அவன் வாழ்க்கையில் வந்து அவள் அவனைத் திருத்தி குடும்பப் பொறுப்புள்ளவனாக்கி விடுவாள் என்பது நம்பிக்கை. இதுதான் ஜீவாவின் பாத்திரப்படைப்பு. மனித சஞ்சாரமற்ற தனிச்சிறையில் அடைந்து கிடந்த ஒருவனை, ஜீவாவின் கையில் ஒப்படைத்துவிட்டு அவளது தாத்தா இறந்துவிடுகிறார். அவள் அவனுக்கு நாகரிகம், பண்பாடு, பாதுகாப்புக் கலைகள், தன் வரலாறு என அனைத்தும் சொல்லிக்கொடுத்து மாவீரனாக உருவாக்குகிறாள். அவனும் தன் கடமையைத் திறம்பட நிறைவேற்றுகிறான். இது அன்றைக்கும் இன்றைக்கும் பொருந்தக்கூடியதுதான் என்பதால், இந்தக் கதாபாத்திரத்தை பெண்களும் ஆண்களும் ஏற்றுக்கொள்கின்றனர். திரையரங்கில் படம் பார்த்துக்கொண்டிருந்தபோது எம்.ஜி.ஆர்., ஜீவாவிடம் முத்தம் கேட்கும் காட்சியில் வைத்தியர் (சந்திரபாபு) ஜீவாவிடம் `இவன், உன்னிடம் தவறாக நடந்துகொள்ளப்போகிறான்' என்று எச்சரிக்கிறார். அப்போது திடீரென எங்கள் பின் சீட்டில் இருந்த ஒருவர்

``அதெல்லாம் சிவாஜி படத்தில்தான் நடக்கும்'' என்றார். ஒரு விநாடி பயங்கர அமைதி. அவர் அதுவரை வசனங்களை எல்லாம் முன்கூட்டியே சொல்லிக்கொண்டு வந்தவர், இப்படி ஒரு கமெண்ட் அடித்தார்.

தாயின் வைராக்கியம்



வயதான மரத்தை வைரம் பாய்ந்த மரம் என்பர். அதுபோல வயதானவர்களும் வைராக்கியம் படைத்தவர்களாக இருப்பது வழக்கம். `அடிமைப்பெண்' படத்தில் வரும் ராஜமாதா (பண்டரிபாய்) தன் குடிமக்களை அடிமைப் பிடியிலிருந்து காப்பதுதான் தன் முதல் கடமை என்று நம்பியதால், அவர் தன் மகன் விடுதலை அடையாத நிலையிலும் ஓர் உறுதிமொழி எடுத்திருக்கிறார். எனவே, தன்னைக் காண வந்த மகனிடம் `என் முகத்தில் விழிக்காதே! நம் குலப்பெண்கள் அனைவரது காலிலும் உள்ள விலங்குகளை அகற்றிவிட்டு, பிறகு என்னிடம் வா''

என்று இரக்கமே இல்லாமல் அனுப்பிவிடுகிறார். இந்த வைராக்கியம் வேங்கையனுக்கு பெரும் ஊக்கமாக அமைகிறது. அப்போது அவர் பாடும் பாடல் மனிதத் தாயைப் பாடுவதாக இல்லாமல் அன்னை பராசக்தியையே எண்ணிப் பாடுவதுபோல அமைந்திருக்கும். ஜெயலலிதா உயிருடன் இருந்தபோது அ.தி.மு.க-காரர்கள் பலரது போனிலும் இந்தப் பாடலே (தாயில்லாமல் நானில்லை) காலர் ட்யூனாக இருந்ததை நாடறியும்.

சூரக்காடு ஏன்?

எம்.ஜி.ஆரின் சினிமா ரசிகர்கள் தம் எதிரியாகக் கருதிய சிவாஜி, சூரக்கோட்டையின் சொந்தக்காரர். ஆக, சூரக்கோட்டை இந்தப் படத்தில் `சூரக்காடு' என்றாயிற்று. கோட்டை என்றால், அவனை மன்னனாகக் காட்ட வேண்டும். இவன் மன்னன் அல்ல, மனிதப்பண்பு சிறிதும் இல்லாத காட்டான். அதனால்தான் அந்த நாட்டுக்கு பெயர் `சூரக்காடு'. இப்போது ரசிகர்களும் திருப்தி அடைவார்கள். படங்களுக்கும் கதாபாத்திரங்களுக்கும் பெயர் சூட்டுவதில் எம்.ஜி.ஆர் காட்டும் அளவுக்கு வேறு யாராவது அக்கறையும் கவனமும் காட்டியிருப்பார்களா என்றால் சந்தேகம்தான்.

ஜீவா – காதலின் கௌரவம்

எம்.ஜி.ஆர்., படங்களில் நடித்து கொஞ்சம் பிரபலமாகி வந்த நேரம் அவருடன் சில படங்களில் நடித்து வந்த (கதாநாயகியாக அல்ல) ஒரு நடிகைக்கு, இவர் மீது ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆர்., காதலில் ஈடுபட்டு திரை வாய்ப்புகளைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அவர் தொழிலில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அந்த நடிகை, எம்.ஜி.ஆருக்கு வெண்மை நிறம் பிடிக்கும் என்பதால்

இரவில் வெள்ளை உடையில் இவர் இருந்த அறையின் கதவை வந்து தட்டினார். நல்ல பாடகியான அவர், நடத்தும் கச்சேரிகளுக்கு எல்லாம் எம்.ஜி.ஆர் முதல் வரிசையில் போய் அமர்ந்து ரசிப்பாராம். ஆனால், காதல் என்றவுடன் காத தூரம் ஓட ஆரம்பித்தார். பாவம் அவர் சூழ்நிலை அப்படி. அவர் அம்மாவிடம் காதல் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு போய் நிற்க இயலாது. அவரால் அந்தக் காதலை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதால், அவர் வெற்று ஆசையை வளர்த்துக் கொள்ளவில்லை.

பிறகு திரையுலகில் எம்.ஜி.ஆர் நல்ல நிலைக்கு வந்து சொந்தமாகப் படம் எடுத்தபோது, அந்தப் பாடகி நடிகையின் செல்லப்பெயர்களை, தான் திருமணம் செய்யும் கதாநாயகிகளுக்கு வைத்து அந்தக் காதலை கௌரவித்தார். `நாடோடி மன்னன்' படத்தில் சரோஜாதேவி, `அடிமைப்பெண்'ணில் ஜெயலலிதா, `உலகம் சுற்றும் வாலிபன்' படத்தில் சந்திரகலா ஆகியோருக்கு அந்தப் பெண்ணின் பெயர்தான் சூட்டப்பட்டது.

குழந்தைகள், ரசிகரான கதை

எம்.ஜி.ஆர் படங்களைப் பார்க்கும் சிறுவர்களுக்கு, அவை நல்ல போதனைகளாக இருந்தது மட்டுமல்லாமல், அவரைப் பின்தொடர வேண்டும் என்ற தீவிர எண்ணத்தையும் அந்தப் படங்கள் ஏற்படுத்தின. மற்ற தமிழ் திரைப்படங்களில்கூட சிறுவர்களைக் காட்டும்போது, அவர்கள் எம்.ஜி.ஆர் படப் பாடல்களைப் பாடுவது போன்ற காட்சிகள் அமைக்கப்பட்டிருப்பது இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும். இதுவும் ஒரு தொழில் உத்தி. அடுத்த தலைமுறையை தனக்கு ரசிகராகத் தயார்படுத்தும் சிறப்பான உத்தி.



நடிகரும் பத்திரிகையாளருமான சோ, தன் துக்ளக் பத்திரிகையில் எம்.ஜி.ஆரின் தொடரும் செல்வாக்கு பற்றிக் கூறும்போது ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருப்பார். அவர் தான் வரும் வழியில் பிளாட்பாரத்தில் ஒட்டப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் படத்தை ஒரு சிறுவன் வணங்கிவிட்டு வந்ததைப் பார்த்திருக்கிறார். அவனை அழைத்து `என்ன செய்தாய்?' என்று கேட்டபோது, அவன் அவரிடம் `எம்.ஜி.ஆரை கும்பிட்டால் நல்லா படிப்பு வரும். அதனால கும்பிட்டுட்டுப் போறேன்' என்றானாம். இவன் வளர்ந்து பெரியவனாகும்போது, தன் பிள்ளைகளுக்கும் இதைத்தான் சொல்வான். அவர்களும் `என் அப்பா தீவிர எம்.ஜி.ஆர் பக்தர்' என்று அவர்கள் பிள்ளைகளிடம் சொல்வார்கள்.

இப்படித்தான் எம்.ஜி.ஆர் மீதான அன்பு பக்தியாகப் பல இடங்களில் கனிந்துவிட்டது. எம்.ஜி.ஆர் என்ற மனிதர் மாமனிதராகி இப்போது தெய்வமாகிவிட்டார். `அடிமைப்பெண்' படத்தில் குழந்தைகள் முதலில் எம்.ஜி.ஆரோடு சேர்ந்து படிப்பார்கள். பிறகு `காலத்தை வென்றவன் நீ...' பாடலில் அவரிடம் கொஞ்சிக் குலவுவார்கள். அவரோடு பேபி ராணியும் இன்னொரு சிறுவனும் இருக்கும் கட் அவுட்டில் இவர்களுக்கு பதில் அஜித்தின் பிள்ளைகளை இணைத்திருந்தார்கள். மதுரை, மினிப்பிரியா தியேட்டர் வாசலில் வைக்கப்பட்ட அந்தக் கட் அவுட்டைப் பார்த்து பலரும் அஜித் ரசிகர்களின் விவேகத்தைப் பாராட்டினர். `அடிமைப்பெண்' படத்தின் பிற்பகுதியில் பெரியவர்கள் எல்லோரும் தவறான கருத்துடன் எம்.ஜி.ஆரிடம் விரோதப் போக்கைக் காண்பிக்கும்போது, சிறுவர்கள் மட்டும் அவரிடம் ஓடிவந்து `மாமா... மாமா' என்று அழைத்து அன்பு மழை பொழிவார்கள். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பதை நிரூபிக்கும் காட்சி இது.

இந்தப் படத்தில் பேபி ராணி முக்கியமான ரகசியத்தைக் கண்டுபிடிக்கும் புத்திசாலிப் பிள்ளையாகக் காட்டப்பட்டிப்பார். ஜீவாவுக்குப் பதில் பவளவல்லி வந்திருப்பதை அவள் காலில் இருக்கும் ஆறாவது விரலை வைத்து இந்தப் பாப்பா கண்டுபிடித்துவிடும் . அதை வைத்தியரிடம் வந்து கேட்கும்போது, அவர் தூக்கக்கலக்கத்தில் பதில் சொல்லும்போது `பட் பட்' என்று அவர் கன்னத்தில் அடிக்கும். படம் பார்க்கும் பெண்களும் ஆண்களும் குழந்தைகளும் சிரித்து ரசித்துப் பார்க்கும் காட்சி இது. கடைசிப் பாடல் காட்சியில் பிள்ளைகளும் தங்களை அந்த விடுதலைப் போரில் இணைத்துக்கொள்வர். `உன்னைப் பார்த்து இந்த உலகம்

சிரிக்கிறது...' என்ற பாடல் காட்சியில் சிறுவர்களும் பங்கேற்றிருப்பது இந்த நாட்டின் நன்மையில் அவர்களுக்கும் நேரடி பங்கு இருப்பதை எம்.ஜி.ஆர் சுட்டிக்காட்டுகிறது.

எம்.ஜி.ஆர் ரசிகர்கள் யார்?

எம்.ஜி.ஆருக்கு வயதானவர்கள், இளைஞர்கள், இளம்பெண்கள், குழந்தைகள் என அனைவரும் ரசிகர்கள்தான். அவரது படம், இவர்கள் அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது.

கட்சிக் கொள்கை

எம்.ஜி.ஆர்., பகுத்தறிவு பாசறையைச் சேர்ந்தவர். அவர் தன் படத்தில் தன் கட்சியின் சின்னம் மற்றும் கொள்கைகள் இடம்பெறுவதை கட்டாயம் ஆக்கியிருந்தார். அதனால்தான் முக்கியமான தத்துவப் பாடலை தனிப்பாடலை அவர் பாடும்போது தன் கறுப்புச் சட்டை கட்சியைச் சேர்ந்தவன் என்பதை நேரடியாக உணர்த்துவதற்காக அவர் கறுப்புச் சட்டை அணிந்து நடிப்பார். கலர் படமாக இருந்தாலும் அவர் கறுப்புச் சட்டை அணிந்திருப்பார். `எங்க வீட்டுப் பிள்ளை'யில் `நான் ஆணையிட்டால்...' பாடல், `சந்திரோதயம்' படத்தில் `புத்தன், இயேசு, காந்தி பிறந்தது...' போன்ற பாடல் காட்சிகளில் அவர் கறுப்புச் சட்டை போட்டிருப்பதைச் சான்றாகக் கூறலாம்.

`அடிமைப்பெண்' படத்தில். பேய், பிசாசு, மாந்திரீகம் என்பவையெல்லாம் வெறும் பொய் பித்தலாட்டம் எனக் காட்டும் காட்சிகள் இடம்பெற்றன. இந்த விஷயத்தை வேடிக்கையாக நகைச்சுவையாகக் காட்டியிருப்பார். அம்முக்குட்டி புஷ்பமாலா வைத்தியராக இருந்து இப்போது மந்திரவாதியாக மாறி வந்திருக்கும் சந்திரபாபுவை மிரட்டுவதற்காக

மண்டையோட்டை பறக்கவிடுவார். பிறகு தானே எலும்புக்கூடு உடையைப் போத்திக்கொண்டு எலும்புக்கூடு நடந்து வருவதுபோல் காட்டி அவரை பயமுறுத்துவார். பிறகு ``இதெல்லாம் பொய். இங்கே பார் மண்டையோட்டுக்குள் புறாவை அழுத்தி வைத்திருக்கிறேன். அதனால் அது அசைகிறது' என்பார். படம் பார்க்கும் பிள்ளைகள் சிரித்து மகிழ்வார்கள். சிரிப்புடன் சிந்தனையையும் ஊட்டும் காட்சிகள் இவை.



3. இளமைத் தோற்றம் பெற எம் ஜி ஆரின் எதிர் நீச்சல்



'வெற்றி வேண்டுமா போட்டு பாரடா எதிர்நீச்சல்...' என்ற பாடல், எம்.ஜி.ஆரின் 100-வது படமான 'ஒளிவிளக்கு' படத்துக்காக எழுதப்பட்டது (ஆனால் அது எதிர்நீச்சல் படத்தில் பயன்படுத்தப்பட்டது) எவ்வளவு பொருத்தம் என்பதை,

அவரது சொந்த வாழ்க்கையிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

எம்.ஜி.ஆர் பிறந்தது முதல் அவர் மரணிக்கும் வரை அவருக்கு வாழ்க்கை மலர்ப்படுக்கையாக இல்லை. சிறுவயதில் வறுமை, பிறகு தனிமை, திரைத்தொழிலில் லேட் பிக்கப். அதில் தாக்குப்பிடிக்க அவர் கையாண்ட உத்திகள் அல்லது சிரமங்கள், அரசியலில் நெருங்கியவர்களே எதிரிகளாக மாறியது, கடைசிக்காலத்தில் கட்சிக்காரர்களும் குடும்பத்தினரும் ஆட்சி விவகாரங்களில் ஈடுபட்டதால், அவர்களை தலையிடவிட வேண்டாம் என்று நாளிதழில் அறிவிப்பு வெளியிட்டது என, தொடர் போராட்டங்களாகவே எம்.ஜி.ஆர் வாழ்க்கை அமைந்துவிட்டது.

எம்.ஜி.ஆரின் வயது என்ன?

'மர்மயோகி' படத்தில் நடிக்கும்போது "இந்தப் படம் மிகப்பெரிய வெற்றியைப் பெறும்" என்று அதன் தயாரிப்பு நிர்வாகியான சுந்தரம்பிள்ளை எம்.ஜி.ஆரிடமும் அவர் நண்பர்களிடமும் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது, "நாற்பது வயதுக்குமேல்தான் எம்.ஜி.ஆருக்கு பெரிய அதிர்ஷ்டம் அடிக்கப்போகுது" என்றார். உடனே எம்.ஜி.ஆர் அவரிடம், "ஏன்யா வயசைப் பற்றி இப்போ பேசுற!" என்று அதட்டுகிறார். 'மர்மயோகி' 1951-ம் ஆண்டில் வெளிவந்தது. அதன் படப்பிடிப்பு 1950-ம் ஆண்டில் நடந்திருந்தாலும், அப்போது எம்.ஜி.ஆருக்கு வயது 40-க்குமேல். அதாவது 41 என்றுகூட வைத்துக்கொள்வோம். அப்படியிருந்தாலும் எம்.ஜி.ஆர் பிறந்தது 1910-ம் ஆண்டுக்கு முன்புதான் இருக்கவேண்டும். ஆக, அவர் பிறந்த வருடம் 1917 என்பது சரியல்ல.

மேலும், 'அவர் பத்து வருடங்கள் முந்திகொடுத்திருக்கிறார்' என்று எதிர் அணியினரின் விமர்சனத்தை மொத்தமாகவும் ஒதுக்கிவிட முடியாது. அவர் பரங்கிமலையில் தேர்தலைச் சந்தித்தபோது, அவர் தன் பிறந்த தேதியை வேட்பாளர் மனுவில் குறிப்பிடவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அப்போதுதான் இந்த 1917 விவகாரம் வெளியுலகுக்குத் தெரியவந்தது. நம்முடைய தேடல், அவர் எப்போது பிறந்தார் என்பதல்ல. அவர் சினிமாவில் வலுவாகக் காலூன்றியபோது அவருக்கு வயது 44-க்குமேல் இருக்கலாம். ஏனென்றால், 'மர்மயோகி' வெற்றிபெற்ற பிறகும்கூட 1952, 1953-ம் ஆண்டில் வெளிவந்த படங்களைக் காட்டிலும் 1954-ம் ஆண்டில் 'மலைக்கள்ளன்' வெளியான பிறகுதான் அவருக்கு தொடர் வெற்றிகள் குவிந்தன.

மலைக்கள்ளனுக்குப் பிறகு

தமிழுக்கு 'வெள்ளித் தாமரை' விருது வாங்கித் தந்த படமும், தமிழ் தவிர தெலுங்கு மற்றும் இந்தியிலும் வெளிவந்து வெற்றிவாகை சூடியதுமான 'மலைக்கள்ளன்' குறித்து, பிறகு விரிவாகப் பார்க்கலாம். எம்.ஜி.ஆர்., தமிழ் திரையுலகின் வசூல் சக்கரவர்த்தியாக, வெற்றி நாயகனாக மாறியபோது எதிர்ப்பும் அதன் கூடவே வந்தது. ஆரம்பம் முதல் அவரை 'கிழவன்' என்றே பலரும் விமர்சித்தனர். தங்கள் பேச்சில் எம்.ஜி.ஆரைக் `கிழவன்' என்றே குறிப்பிட்டனர். வசனமும் நடிப்பும் இளமையும் திரைத் துறைக்கு முக்கியம் எனக் கருதியவர்கள், காதல் காட்சிகளுக்கும் சண்டைக் காட்சிகளுக்கும் மட்டுமே எம்.ஜி.ஆர் முக்கியத்துவம் அளிப்பதாகக் கருதி, அவரை கடுமையாக விமர்சித்தனர். 'நேற்று இன்று நாளை' படம் எடுத்த அசோகன்கூட, 'கிழவன் ரொம்ப இழுத்தடிக்கிறான்'

என்று சொன்னது, எம்.ஜி.ஆர் காதுகளுக்கு எட்டிவிட்டது. ஆக, திரையுலகில் வெற்றிபெற்ற நாள் முதல் எம்.ஜி.ஆர், 'கிழவன்' என்ற விமர்சனத்துக்கு ஆளானார். அதை அவர் எதிர்கொண்டவிதம் ஆச்சர்யமானது.

`மீனவ நண்பன்' வரை [முதலமைச்சராகும் வரை]

எம்.ஜி.ஆர் எப்போதும் எந்தப் பேட்டியிலும் பேச்சிலும் தன் வயதைக் குறிப்பிட்டுச் சொல்ல மாட்டார். 'அது உங்களுக்கே தெரியும்' என்று பொதுவாகச் சொல்லிவிடுவார். ஆனால், தன் ரசிகர்களின் ஆதரவு தனக்கு இருப்பதை அழுத்தமாகச் சொல்லி விமர்சனக்காரர்களின் வாயை மூடிவிடுவார். அதேவேளையில், படத்தில் இளமையாகத் தோன்றுவதற்கு என்னென்ன தேவையோ அவற்றை மிகச்சரியாகச் செய்துவிடுவார். அந்த வகையில் தன் பிம்பம் சிதையாமல் பார்த்துக்கொள்வார். தன் திரைப் பிம்பம் வெறும் மாயை அல்ல, அதில் உண்மையும் உண்டு என்பதை அவ்வப்போது வெளியே வரும் வேளைகளில் சில வீரதீர சாகசங்களை நிறைவேற்றி உறுதிப்படுத்திவிடுவார்.

அவர் தன் எதிரிகளோடு போராடி ஜெயித்த அதே வேளையில், தன் வயதோடும் வயோதிகத்தின் பலவீனங்களோடும் போராடி ஜெயித்தார். `மீனவ நண்பன' [1977] படத்தில் கடற்கரை மணலில் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் வாள் சண்டைபோடும் காட்சி எடுக்கப்பட்டது. ஒரு ஷாட் முடிந்ததும் ஓரமாகப் போய் அமைதியாக நின்றுகொள்வார். அவருக்கு மூச்சுவாங்குவது மற்றவருக்குத் தெரியாமல் இருப்பதற்காக அவர் இவ்வாறு சிறிது நேரம் யாரோடும் பேசாமல் நிற்பாராம். `மீனவ நண்பன்', எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகு 1977-ம் ஆண்டில் வெளிவந்தது.

அப்போது அவர் கிட்டத்தட்ட எழுபது வயதை எட்டியிருந்தார்.

கட்டுடல் பராமரிப்பில் தொடர் முயற்சி

எம்.ஜி.ஆர் ., வயதான காலத்திலும் தனக்கு வாய்ப்பு வந்தால் அதற்கு, தான் தகுதி உடையவனாக இருக்க வேண்டும் என்பதற்காக சிறு வயதிலேயே குஸ்தி, சிலம்பம், பளுதூக்குதல். உடற்பயிற்சி ஆகியவற்றில் தீவிரமாக ஈடுபட்டுவந்தார். ஐசோமெட்ரிக் பயிற்சிக்குரிய கருவி வாங்கக் காசு இல்லாத காரணத்தால், ஒரு மரத்தில் குனிந்து சாய்ந்து நின்று அந்தப் பயிற்சியைச் செய்து வயிற்றையும் மார்பையும் வனப்பாக வைத்திருந்தார். பளுதூக்குவதில் சாண்டோ சின்னப்பா தேவர் மற்றும் நம்பியாரைத் தோற்கடிக்கும்வகையில் அதிக பளுதூக்கிக் காட்டுவார். இதனால்தான் ‘அன்பே வா’ படத்தில் ‘ஃபைட்டிங் புல்’ என்ற வீரரை அவரால் உயரே தூக்கி கீழே எறிய முடிந்தது. வேறு பல சண்டைக் காட்சிகளிலும் அவர் வில்லனையும் ஸ்டன்ட் ஆள்களையும் முதுகில் தூக்கி கீழே எறிவது அவருக்கு சிரமமில்லாமல் இருந்தது.

எம்.ஜி.ஆர் பெரிய நடிகர் ஆனதும், வடபழனியில் இடம் வாங்கி அங்கு மணல் கொட்டி தன் ஸ்டன்ட் நடிகர்களை வீர விளையாட்டுகளில் பயிற்சி பெறவைத்தார். இன்று அந்தத் திடல் அவர் பெயரில் `ஜானகி ராமச்சந்திரன் கலாலயம்' [ஜே. ஆர். கே] என்ற பள்ளிக்கூடமாக மாறியுள்ளது. தன்னைபோல தன் ஸ்டன்ட் பார்ட்டியும் தினமும் வீர விளையாட்டுகளில் நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் இருக்கவேண்டும் என்பதில் அக்கறைகாட்டினார். அவர்களுக்கு திருமங்கலத்தில் 48 வீடுகள் கட்டித்தரவும் முன்வந்தார். ஆனால்,

அவர்கள்தான் `அந்தப் பகுதி சிட்டியைவிட்டு தூரமாக இருக்கிறது' என மறுத்துவிட்டார்கள்.

யானைக்கவுனி பகுதியில் அவர் வாழ்ந்தபோது செய்த பயிற்சிகளை, தன்னுடன் சண்டைபோடும் சங்கர் போன்ற ஸ்டன்ட் நடிகர்கள் தொடர்ந்து செய்து பழக வேண்டும் என வலியுறுத்திவந்தார். அவர்களுக்கும் ஸ்டன்ட் திறமைகளை வளர்த்துவிட்டு அவர்களாலும் தனது சண்டைக்காட்சிகள் பிரமாதமாக அமையும்படி பார்த்துக்கொண்டார். கடின முயற்சிகளை மேற்கொண்டு, எம்.ஜி.ஆர் தன் முதுமையை வென்று காட்டினார். இந்த வகையில் அவர் விதியை தன் மதியால் வென்றார்.

சுட்டதால் கிடைத்த இளமை!

‘பட்டுச்சேலை காத்தாட...’ பாடல், மதியம் இரண்டு மணிக்கு ஆரம்பித்து மாலைக்குள் ஷூட் செய்த பாடல். அதில் நடித்த எம்.ஜி.ஆர் ‘நான் ரொம்ப குண்டா இருக்கிறேன்ல’ என்று இந்தப் பாடல் காட்சியைப் பார்த்துச் சொன்னாராம். இவ்வாறு தன் உடல் எடைகுறித்து கவலைப்பட்ட எம்.ஜி.ஆருக்கு, உடல் எடை குறைப்பு தானாகவே ஏற்பட்டது. அதுதான் கடவுள் அளித்த கொடை. எம்.ஆர்.ராதாவால் சுடப்பட்டு மருத்துவமனையில் தங்கி இருந்த எம்.ஜி.ஆர் வீடு திரும்பியதும், அவர் எடை குறைந்து இளமைத் தோற்றத்துடன் காட்சியளித்தார். கண்ணதாசனை எம் ஜி ஆரை பாராட்டிய போது அவர் அசுர ஜாதகம் கொண்டவர். விழுவார் ஆனால் அதனால் பெரிய பாதிப்பொன்றும் வராது. அதுவும் நன்மைக்காகவே முடியும் என்றார். எம் ஜி ஆரை எம் ஆர் ராதா சுட்ட்து கூட நன்மையில் தான் முடிந்த்து. கவிஞர் சொல் பலித்த்து.

குண்டு பாய்ந்த பின் ஷூட்டிங்குக்கு வந்த எம் ஜி ஆர் ஜெயலலிதாவுடன் நடிக்க உயரத்திலும் தோற்றத்திலும் நிறத்திலும் பொருத்தமாகத் தோன்றினார். 'காவல்காரன்' ஷூட்டிங்கில் கலந்துகொண்டபோது, அவரைப் பார்த்தவர்கள் இருபது வயது குறைந்ததுபோல தோன்றியதைச் சுட்டிக்காட்டி மகிழ்ந்தனர். கடைசிவரை தன் எடை கூடாமல் பார்த்துக்கொண்டார். இப்படி இயற்கை அவ்வப்போது அவருக்கு சில வரங்களை அனுகூலமாக அளிக்கும். அது அவரது முற்பிறவி பலனோ அல்லது அவரது கொடையின் பலனோ தெரியவில்லை.

தலைமுடி பராமரிப்பு

எம்.ஜி.ஆர் படங்களில் விதவிதமான விக் வைத்திருப்பார். அவர் ஹேர்ஸ்டைலைப் பார்த்தவுடனேயே, 'இது இந்தப் படம்' எனச் சொல்லிவிடலாம். சினிமாவுக்கு நடிக்க வந்த புதிதில், அவருக்கு தலைமுடியில் முன்பக்க கர்லிங் வரவேண்டும் என்பதற்காக அடுப்பில் கம்பியைக் காயப்போட்டு முடியில் நெட்டு நெட்டாக சூடு வைப்பாராம். இதனால் அந்த முடி சூடுபட்ட இடத்தில் கருகி, அதற்குமேல் வளராமல் நின்றுவிடும். இதை இப்போது `ஃபயரிங் டெக்னிக்' என்கின்றனர். அவருடைய வறுமையும் தொழில் பக்தியும்தான் இதுபோன்ற விஷப் பரீட்சைகளுக்கு இட்டுச்சென்றன. இவ்வாறு சூடு வைத்ததால், அவருக்கு தலைமுடி அவர் நினைத்தவகையில் அமையவில்லை. அங்கங்கே எரிந்து வளராமல் நின்றுவிட்டது.

இதனாலும் முன் வழுக்கை விழத் தொடங்கியதாலும், அவர் 'திருடாதே' படம் முதல் தொடர்ந்து விக் வைத்துக்கொள்ள தொடங்கினார்.

வெளியே விழாக்களுக்கு வரும்போது நிஜ முடியுடன்தான் வந்தார். ‘அடிமைப்பெண்’ வெற்றி விழாவுக்கு வரும்போது தலையில் புஷ்குல்லா வைக்க ஆரம்பித்திருந்தார். மொத்தமாக வழுக்கை விழுந்து விக் வைத்துக்கொள்வதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே விக் வைத்து விதவிதமாக முடியலங்காரம் செய்துகொள்வது புத்திசாலித்தனமானது என்று எம்.ஜி.ஆர் கருதியிருக்கலாம்.

இளமை உணர்வு

‘ஓர் ஆண், இளமையாக உணரும் வரை இளமையாக இருக்கிறான். ஒரு பெண்ணோ, இளமையாகத் தோன்றும் வரை இளமையாக இருக்கிறாள்’ என்பர். அதுபோல எம்.ஜி.ஆர் தான் படங்களில் நடிக்கும்போது ஒவ்வொரு காட்சியிலும் தோற்றத்திலும் தான் இளைஞன் என்பதை உறுதிப்படுத்தும் விதமாகக் காட்டுவார். `அடிமைப்பெண்’ படத்தில் ராணி பவளவல்லி அவருக்கு தண்டனை கொடுக்கும் காட்சியில் அவர் ஆர்ம்ஸ் காட்டுவதை ரசிப்பதற்காக பலமுறை அந்தப் படத்தைப் பார்க்க திரை அரங்குக்குப் போனதாக கமல்ஹாசன் ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

இதுபோன்ற காட்சிகள் இளைஞர்களைக் கவரும் என்பதால், எம்.ஜி.ஆர் இவற்றில் அதிக அக்கறை காட்டுவார். அரங்கில் இந்தக் காட்சிக்கு அதிக கரகோஷமும் ஆர்ப்பரிப்பும் இருக்கும். பாடல் காட்சி ஒன்றில்கூட எம்.ஜி.ஆர் சும்மா நிற்க மாட்டார். தனது காட்சி எதையும் வீணாக்க மாட்டார். ஒவ்வொரு காட்சியும் தனக்கு அனுகூலமாக இருக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருப்பார். இதை

எடிட்டிங்கில் தானே ஈடுபடுவது மூலம் சாதித்துக்காட்டுவார்.

'வேட்டைக்காரன்' படக் காட்சிகளில் இவருடைய துள்ளல் பற்றி நம் அனைவருக்கும் தெரியும். `மதுரை வீரன்' படத்தில் பொம்மியை வெள்ளத்திலிருந்து காப்பாற்றிய பிறகு டி.எஸ்.பாலையாவிடம் கேலி பேசும்போது அவர் துள்ளலும் குதியாட்டமும் அவர் வயதை மறைத்துவிடும். இந்தக் காட்சியை எதிரியும் வெகுவாக ரசிப்பர். அதுவும் அவர் சிரித்துக்கொண்டே இரண்டு கால்களையும் சேர்த்து ஒரு குதி குதிப்பார் பாருங்கள். அந்த முகபாவம், கலகலவென்ற சிரிப்பு. உண்மையில் ஒரு வாலிபன் அந்த இடத்தில் இருந்தால் இப்படித்தான் இருந்திருப்பான். அவ்வளவு பொருத்தமான, உற்சாகச் சித்திரிப்பு மற்றும் காட்சியமைப்பு.

எம்.ஜி.ஆர் டான்ஸ் மூவ்மென்ட்டுகளில் அவர் மண்டிபோட்டு ஆடும் ஸ்டெப்ஸ் மற்றவர்களைவிட அவரை வித்தியாசமாகக் காட்டும். இது வயதானவர்களால் போட முடியாத கடினமான ஸ்டெப்கள். அவர் மிகவும் எளிதாகப் போட்டுவிடுவார். இதனால் அவர் நிஜ வயதை மறக்கடிக்கச் செய்யும் வகையில் இளமை உணர்வை ஏற்படுத்துவார். அவர் படங்களில் பல்வேறு விசேஷ அம்சங்களுடன் நடனக் காட்சிகள் அமைக்கப்பட்டாலும், அவற்றின் வெற்றிக்கு உறுதுணையாக இருப்பவை அவரது விரைவான உடல் அசைவும் துறுதுறுப்பும் சிரித்த முகமும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இவ்வாறு முகம், உடல் அசைவு, துறுதுறுப்பு என அனைத்து அம்சங்களும் இளமையாக இருக்கும்படி பார்த்துக்கொண்டதுதான் அவரை இளைஞராக உணர்த்தியது.

எம்.ஜி.ஆர், தான் சம்பந்தப்பட்ட காட்சிகளை தானே பல முறை இயக்குவதன் ரகசியம், தன் இளமைத் தோற்றத்துக்கு பங்கம் வந்துவிடக் கூடாது என்பதுதான். அவர் கேமரா கோணம், எடிட்டிங் போன்ற விஷயங்களை ஆரம்ப காலத்திலிருந்தே தெரிந்துவைத்திருந்ததால், தன் காட்சிகளைச் சிறப்பாகக் கொண்டுவருவதில் அவர் தேர்ச்சிபெற்றிருந்தார். தன் தோற்றம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவர் எந்தச் சமரசத்துக்கும் இடம்கொடுத்ததே இல்லை. தன்னை பற்றிய தவறான இமேஜை ஏற்படுத்தும் படங்களை, செய்திகளை யாராவது வெளியிட்டால், அவர்களை உண்டு இல்லை எனச் செய்வதிலும் அவர் தயங்கியதேயில்லை. எதிரிகளை ஒடுக்கிவைப்பதில், அவர் கடைசிவரை கவனமாகவே இருந்தார். அவர் எது செய்தாலும் அது சரியாக இருக்கும் என்று நம்பும் மக்களும், அவருக்கு ஆதரவாக நின்றனர்.

புறநானூற்று பாடல் ஒன்றில், ‘மன்னன் கரிகாலன், பகைவனுக்கு சுட்டெரிக்கும் சூரியனாகவும்... நண்பருக்கு குளிர் தரும் நிலவாகவும் விளங்கினான்' என்று புலவர் பாராட்டி பாடியிருப்பார். அதுபோல எம்.ஜி.ஆரும் ‘மர்மயோகி’ படத்தில் ``கரிகாலன், குறிவைத்தால் தவற மாட்டான்; தவறும் என்றால் குறிவைக்க மாட்டான்’’ என்று பேசிய வசனம், படத்துக்கு மட்டும் பேசிய வசனம் அல்ல; அவர் தன் வாழ்விலும் ஒரு மாமன்னனைப்போலவே வாழ்ந்தார்.

தோற்றப் பொலிவு

எம்.ஜி.ஆர் தன் இமேஜைக் காப்பாற்றுவதில் காட்டிய கவனங்களில் உடை தேர்வும் முக்கியமானது. அவர் தன் முண்டா தெரியும்வண்ணம் கையை



இறுக்கமாக வைத்து சட்டை போடுவார். எதிர் அணியினர், ‘ஜாக்கெட் போட்டிருக்கிறார்’ எனக் கேலி செய்தாலும், அது பற்றி கவலைப்பட மாட்டார். பேன்ட்டை உயர்த்திப்போடுவார்; இறக்கிப்போட மாட்டார். இதனால் அவருக்குக் கடைசி வரை தொந்தி விழவில்லை. உடற்பயிற்சியோடு உடை உடுத்தும் பாங்கும் ஒருவரின் தோற்றப்பொலிவுக்கு முக்கியம்

என்பதை அவர் நன்கு உணர்ந்து அதன்படி செயல்பட்டார்.

இடுப்பில் அரைஞாண் கயிறு கட்டுவதால், ஹெர்னியா பாதிப்பு வராமல் தவிர்க்கலாம் என்று நம் பெரியவர்கள் சொல்வதுண்டு. அதுவும் ஃபேமிலி ஹிஸ்டரி இருப்பவர்கள் நிச்சயமாக இதைப் பின்பற்றுவது நல்லது. இப்போது பேன்ட்டை மிகவும் இறக்கிப் போட்டு தொப்பை விழவைத்துவிட்டனர். வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வாழ வேண்டும் என்பது உணவுக்கட்டுப்பாட்டை மட்டும் அல்ல, இடுப்பில் இறுக்கிக்கட்டும் உடை கட்டுப்பாட்டையும் சேர்த்து சொல்லும் முதுமொழி.

பாடலும் உடையும்

1964, 65, 66-ம் ஆண்டுகளில் வந்த படங்களில் எம்.ஜி.ஆர் பாடல் காட்சிகளில் காலர் வைத்த டி-ஷர்ட் போட்டிருப்பார். இதை அவர் தனது ஸ்டைலாகவே பின்பற்றினார். `எனக்கொரு மகன் பிறப்பான்' பாடல், 'ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்...' பாடல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த டி-ஷார்ட், அவரது கழுத்துச் சுருக்கத்தையும் மறைத்தது. உடம்பையும் கட்டுடலாகக் காட்டியது.

பாடலாசிரியர்களையும் தன் இளமைத் தோற்றத்தை வர்ணிக்கும் பாடல்களை எழுதும்படி கவனித்துக்கொண்டார். இவர் படத்துக்குப் பாடல் எழுதும்போது பாடலும் பிரபலமானது; அதிக பணமும் கிடைத்தது. அதனால் பலரும் இவர் சொல்படி கேட்டனர். பணமும் புகழும் ஒருசேரக் கிடைக்கும்போது, மறுத்துச் சொல்ல எவருக்கும் மனம் வராது. அப்படி மறுத்தாலும் அவருக்குத்தான் நஷ்டமே!

கண்ணதாசன் 'குடும்பத்தலைவன்' படத்தில் இவருக்காக எழுதிய,

`கட்டான கட்டழகு கண்ணா - உன்னைக்

காணாத பெண்ணும் ஒரு பெண்ணா?'

பாடல் வரிகளும் `நீதிக்குப் பின் பாசம்' படத்தில் இவருக்காக எழுதிய

`தேக்கு மரம் உடலைத் தந்தது

சின்ன யானை நடையைத் தந்தது'

பாடல் வரிகளும் , கவிஞர் முத்துலிங்கம் 'மீனவ நண்பன்' படத்தில் இவருக்கு எழுதிய

`தங்கத்தில் முகம் எடுத்து

சந்தனத்தில் உடல் எடுத்து'

பாடல் வரிகளும் இவரது உடல் உறுதியை எடுத்துக் கூறுவதாக அமைந்தன. இவ்வாறு தன் படத்தில் பணியாற்றும் ஆள்களை தனக்கு ஏற்றபடி வளைக்கத் தெரிந்தவராக எம்.ஜி.ஆர் இருந்தார்.


ஜோடி நடிகைகள்

எம்.ஜி.ஆர்., திருமணமான நடிகைகளை பெரும்பாலும் தனக்கு ஜோடியாகப் போடுவது கிடையாது. பானுமதி, சாவித்திரி இருவரும் அதற்கு விதிவிலக்கு. பானுமதியோடு அவரை ஜோடியாகப் போட்டபோது, பானுமதி திரையுலகில் உச்சத்தில் இருந்தார். அப்படியிருந்தும் அவரை தன் படமான 'நாடோடி மன்னன்' படத்தில் பாதியிலேயே நீக்கிவிட்டார். 'மகாதேவி' படம் கதையின் நாயகிக்கு அதிக வெயிட்டேஜ் கொடுத்த காரணத்தால், சாவித்திரியை தயாரிப்பாளர் கண்ணதாசன் புக் செய்தார்.

சிவாஜி ரசிகர்கள் `எங்கள் நடிகையர் திலகம் சாவித்திரியோடு ஜோடி போட்டு நடிக்க முடியுமா?' என்று சவால்விட்டதற்கு பதில் சவால் விடும்வகையில், `வேட்டைக்காரன்' படத்தில் நடித்தார். அதில் வெற்றியும் பெற்றார். இரு தரப்பினரும் சவாலுக்குச் சவால்விடும் பழக்கம் இன்றும் இருந்துவருகிறது. கே.ஆர்.விஜயா தானே நெருங்கிவந்து நடிப்பார். மேலும், பெண் ரசிகைகளை ஏராளமாகக் கொண்டவர். குடும்பப் பாங்கான வேடங்களுக்குப் பொருத்தமானவர் என்பதால் அவர் திருமணமான பிறகும் சில படங்களில் எம்.ஜி.ஆர் அவரோடு நடித்தார். பொதுவாக, எம்.ஜி.ஆர் திருமணமான பெண்களைத் தவிர்த்து இளம் பெண்களோடு மட்டுமே நடித்துவந்தது தன் இளமை இமேஜைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் என்பதில் ஐயமில்லை.

‘அரசகட்டளை’ படம் எடுத்து வெளிவருவதற்கு முன்பு சரோஜாதேவி திருமணம் செய்துகொண்டதால், அந்தப் படத்தில் அவரின் கேரக்டரைச் சாகடித்துவிட்டு ஜெயலலிதாவை தன் புதிய ஜோடி ஆக்கிவிட்டார். சரோஜாதேவியின் திருமணத்துக்கு முன்பு இந்தப் படம் வெளிவந்திருந்தால் அவர் முதன்மை கதாநாயகியாகவும் ஜெயலலிதா இரண்டாம் கதாநாயகியாகவும் இருந்திருப்பர்.

திருமணமாகாத இளம்பெண்களோடு நடித்தால் அது தன் இளமை இமேஜை உயர்த்தும் என்றும் நம்பிய எம்.ஜி.ஆர்., 1970-ம் ஆண்டுக்குப் பிறகு 16 முதல் 17 வயது பெண்களோடு நடிக்க ஆரம்பித்தார். ஆளும் குண்டு அதிகாரமும் அதிகம் என்ற நிலையில், ஜெயலலிதாவிற்காக உருவாக்கியிருந்த கதாபாத்திரத்தில் ‘உலகம் சுற்றும் வாலிபன்’ படத்தில் சந்திரகலாவை நடிக்கவைத்தார்.



சந்திரகலாவோ, பாட்டி மாதிரி இருந்தது பலரையும் வருத்தத்தில் ஆழ்த்தியது. இருந்தாலும் இவர்கள் எல்லாரும் துணைக்கருவிகள்தானே. முக்கியமானவர் எம்.ஜி.ஆர் மட்டுமே என்பதால், இதுபோன்ற குளறுபடிகள் ஏற்பட்டாலும் மற்ற அம்சங்கள் படத்தை வெற்றிபெற செய்துவிடும்.

வெளியிடங்களில் மனத்துணிவும் உடல்வலுவும்

எம்.ஜி.ஆரை எதிர் அணியினர் 'டோப்பா தலை' என்றும் 'அட்டைகத்தி வீரர்' என்றும் விமர்சித்தபோதும் அவர் தன் தொழில் உத்திகளை விடாமல் பின்பற்றிவந்தார். திரை பிம்பத்தில் அவர் மிகவும் கவனமாக இருந்துவரும் அதே வேளையில், அவர் ஒரு நிஜ வீரர் என்பதை உறுதிப்படுத்தும் விஷயங்களும் நிஜ வாழ்வில் அவ்வப்போது நடக்கத்தான் செய்தன.

ஒரு சமயம் அவர் மதுரைக்கு இரவில் காரில் வந்துகொண்டிருந்தார். அப்போது கொள்ளையர்கள் அவரின் காரை வழிமறித்தனர். எம்.ஜி.ஆர்., 'நீங்கள் கொள்ளையடித்துச் செல்ல என்னிடம் ஏதும் காசு பணம் இல்லை' என்று சொல்லிப் பார்த்தார். அவருடன் பயணித்த சிரிப்பு நடிகர் தங்கவேலுவுக்கோ ஒரே நடுக்கம். இன்றைக்கு நம்மை இவர்கள் அடித்து உதைக்கப்போகிறார்கள் என அவர் பயந்துவிட்டார். சொன்னதைக் கேட்காமல் கொள்ளையர்கள், 'காரைவிட்டு இறங்கு' என்றதும் எம்.ஜி.ஆர் கீழே இறங்கி அவர்களுடன் சண்டைபோட தயாரானார்.

அவரது துணிச்சலைப் பார்த்து கொள்ளையர்கள் சற்று தயங்கினர். `யார் இவர், பெரிய பயில்வானோ! நாம் இத்தனை பேர் இருக்கிறோம், நம்மை எதிர்க்க முன்வருகிறாரே!' என்று தயங்கி நின்ற வேளையில் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர், `இவர் எம்.ஜி.ஆர்'

என்பதை கண்டுபிடித்துவிட்டார். பிறகென்ன. மன்னிப்புகேட்டு தலை வணங்கி வழிவிட்டனர்.

'உலகம் சுற்றும் வாலிபன்' படப்பிடிப்பு ஜப்பானில் நடந்தபோது, ஒருவர் சந்திரகலாவிடம் சில்மிஷம் செய்தார். அப்போது எம்.ஜி.ஆர் பட்டென அவரை அடித்துவிட்டார். இது வெளிநாடு என நினைத்து அவர் தயங்கவில்லை.

'உரிமைக்குரல்' ஷூட்டிங்கின்போது ஓடிப்போய் இரு திசைகளிலும் பிரிந்து செல்லும் ஒரு மாமரக் கிளையின் நடுவே குதிக்கவேண்டிய ஷாட்டுக்கு டூப் நடிகர் தயாராக இருந்தபோதும் இவர் அவரை கையமர்த்திவிட்டு, தானே ஓடி குதித்தார். இதுபோன்ற ரிஸ்குகளை இவர் எடுத்து பொதுமக்கள் மத்தியில் தன்னை இளமையும் சுறுசுறுப்பும் குறையாதவர் என்று நேரில் நிரூபித்துக்கொள்வார்.

இது ரிஸ்கான ஷாட் என்பதால், டூப் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமயத்தில் இவர் இப்படிச் செய்தது இயக்குநர் ஸ்ரீதருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால், சுற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மக்களின் உற்சாகம் இவரது இமேஜை உயர்த்தியது.

எதிரியைத் தேர்ந்தெடுத்தல்

`தனக்கு எதிரியாக இருப்பவன்கூட தனக்குச் சமமாக இருக்க வேண்டும்' என்று 'சந்திரோதய'த்தில் வசனம் பேசிய எம்.ஜி.ஆர்., அதை தன் நிஜ வாழ்க்கையிலும் பின்பற்றினார். எதிரியைத் தேர்ந்தெடுத்து தனக்கு அவரை எதிரியாகத் தக்கவைத்துக்கொள்வதிலும் எம்.ஜி.ஆர் கவனமாக இருந்தார்.

`



எதிரியைத் தேர்ந்தெடுத்து தனக்கு அவரை எதிரியாகத் தக்கவைத்துக்கொள்வதிலும் எம்.ஜி.ஆர் கவனமாக இருந்தார். எம்.ஜி.ஆர்-சிவாஜி என திரையுலகிலும் எம்.ஜி.ஆர்-கருணாநிதி என அரசியலிலும் தன் எதிரிகளை அவர் வரைமுறைப்படுத்திக்கொண்டார். தன் சக்தியை

இவர்களை நோக்கியே செலுத்தினார். தனிப்பட்ட முறையில் நண்பர்களாக இருந்தாலும் தொழில்முறை எதிரிகள் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். சில சமயம் இந்த எதிரித்தனம்கூட போலியானதோ என நினைக்கும்படி இவர்களின் நடவடிக்கைகள் இருந்தன.

ஜெயகாந்தன், நா.பார்த்தசாரதி போன்றோர் எம்.ஜி.ஆரை எதிர்த்து நாவல்கள் எழுதியபோது, இவர் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. அவர்களின் துறைக்கும் நமது துறைக்கும் தொடர்பில்லை என விலக்கிவிட்டார். அவர்கள் நிஜத்தில் நடப்பதைத்தானே எழுதுகிறார்கள் என்று அவர்களை அலட்சியப் படுத்திவிட்டார். ஆனால், பத்திரிகையாளரிடம் இவர் மேம்போக்காக இல்லை. அவர்களிடம் தன் விஷயத்தில் கடுமையாகத்தான் நடந்துகொண்டார். எம்.ஜி.ஆர்., தான் சாதிக்கவேண்டிய திறமை பெற்றிருக்கும் துறைகளில் மட்டும் அதீத கவனம் செலுத்தி தன் நோக்கு நிலையை ஒருமுகப்படுத்தி எதிரிகளின் சவால்களை எதிர்கொண்டார்.

இவ்வாறு பல விஷயங்களிலும் எதிரிகளை வீழ்த்தும் வழிமுறைகளை தொடர்ந்து கையாளுவதில் இவர் மிகவும் கவனமாக இருந்தார். திரையிலும் நிஜத்திலும் தம்மை ஒரே மாதிரி காட்டிக்கொண்டதால், எதிரிகள் இவரை கடைசி வரை ஜெயிக்கவில்லை.

----

4. எம்.ஜி.ஆர் பாடல்களில் பிரச்சார உத்தி



எம்.ஜி.ஆர் சிறு வயது முதல் நாடக மேடையில் நடித்துப் பழகியவர் என்பதால் பாடல்களின் செல்வாக்கு குறித்து அவர் நன்கு அறிந்திருந்தார். பாடல்கள் சுதந்திரப் போராட்டத்துக்குப் பயன்பட்ட விதத்தை அறிந்திருந்ததால் தேச விடுதலை போல சமூக விடுதலைக்கும் அவை நல்ல பிரசார உத்தியாகத் திகழும் என்று அவர் நம்பினார். இத்துடன் தன் சுய விளம்பரத்துக்கும் திரை இசைப் பாடல்களைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்தார். இந்த முன்னறிவுடன் அவர் பாடல் ஆசிரியர்களிடம் பாடல்களைக் கேட்டு எழுதி வாங்கினார்.

எம் ஜி ஆருக்கு உடன்பாடில்லாத எந்த ஒரு விஷயமும் அவர் பாடலில் இல்லாதபடி பார்த்துக்கொண்டார். எவ்வளவு பெரிய கவிஞராக இருந்தாலும் தன் விருப்பத்துக்கேற்றபடி பாடல் அமையாதவரை அவர் விடுவதேயில்லை.

படித்தவர்களிடமும் பண்புள்ளவர்களிடமும் தன் பாதையில் குறுக்கிடாதவரை அவர் எப்போதும் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருந்தார். இருப்பினும் காதல் பாடல்களில் அவர்களின் விருப்பத்துக்கு இடம் அளித்த எம்.ஜி.ஆர், தத்துவப் பாடல் என்று ரசிகர்களாலும் வேறு பலராலும் அழைக்கப்படும் தனிப் பாடல்களில் அவர் பாடல் ஆசிரியரோடு எந்த சமரசமும் செய்துகொள்வதில்லை.

எம்.ஜி.ஆரின் திரைப்பட வரலாறு 1936-ல் தொடங்கி 1977-ல் நிறைவு பெற்றது. இந்த முப்பது ஆண்டுகளில் 1954-ல் வெளியான 'மலைக்கள்ளன்' படத்துக்குப் பிறகே அவர் படப்பாடல்கள் தீவிரமாக சமூக அக்கறை உள்ளனவாகப் படைக்கப்பட்டன. இந்த 22 வருட காலத்தில் எம்.ஜி.ஆர் படங்களில் ஒரிரு தனிப் பாடலாவது அவரது பிரசார பீரங்கியாகச் செயல்பட்டது. எம்.ஜி.ஆர் படப் பாடல்கள் குறித்து சான்றுகள் காட்டி எழுதினால் முந்நூறு பக்க அளவில் புத்தகமே எழுதலாம் என்றாலும், அதன் விரிவு அஞ்சி 'அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கிறேன் அரங்க மாநகருளானே' என்பது போல இப்போதைக்குச் சுருக்கமாக சிலவற்றை மட்டும் காண்போம்.

மூன்று காலகட்டம் - மூன்று கருத்தாக்கம்

எம்.ஜி.ஆர் திமுக கட்சிக்கு வந்த பிறகு அவர் பாடல்களில் மிகுந்த கவனம் செலுத்தத் தொடங்கினார். அப்போது காங்கிரஸ் எதிர்க்கட்சியாக இருந்ததால் அந்த

ஆட்சி அக்கட்சி பெரியவர்கள் சிலரின் ஏமாற்றுத்தனம் போன்றவற்றை மக்களுக்கு எடுத்துச்சொல்லும் கடமை தனக்கிருப்பதாகக் கூறிய எம்.ஜி.ஆர் தன் தனிப்பாடல்களில் இந்த கருத்துக்களைப் புகுத்தினார். இவை சமூகச் சாடல், சமூக அக்கறை, இளைய சமுதாயத்தின் நியாயமான கோபம் கொப்பளிக்கும் பாடல்களாக அமைந்தன.

பின்பு திமுக ஆட்சிக்கு வந்ததும் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடப்பது போன்ற பாடல்களையும், திமுக-வின் வரலாறு மற்றும் பெருமை பேசும் பாடல்களையும் தனிப்பாடல்களாக அமைத்தார். இவை மகிழ்ச்சி ததும்பும் பாடல்களாக ஒலித்தன.

அடுத்து அதிமுக கட்சி உருவானதும் மீண்டும் பாடலின் கருத்தாக்கம் மாற்றம் அடைந்தது. திமுக அரசு ஊழல் மலிந்த அரசு என்னும் கருத்து வலுவாக பரப்பப்பட்டது. **'புதிய சமூகம் தோன்ற வேண்டும்', 'புதிய ஆட்சி மலர வேண்டும்',** 'ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்' என்ற கருத்துக்கள் எம்.ஜி.ஆரின் படங்களிலும் பாடல்களிலும் மையக் கருத்தாக மாறின.

ஆரம்பக்கட்ட காங்கிரஸ் எதிர்ப்பு பாடல்கள்

1952-ல் திமுக அரசியலில் தலைதூக்கிய காலத்தில் அக்கட்சியில் எஸ்.எஸ்.ஆர், எம்.கே.ராதா, நாரயணசாமி போன்ற நடிகர்கள் இருந்தாலும், எம்.ஜி.ஆர் அளவுக்குக் கட்சியால் தானும் தன்னால் கட்சியும் வளர உழைத்தவர்கள் எவரும் இல்லை. கட்சிக்காக உழைத்த கலைஞர்கள் பலர் இருந்தனர். அவர்கள் மேடையில் பிரகாசித்த அளவுக்குத் திரையில் ஜொலிக்கவில்லை.

திமுகவில் எம் ஜி ஆர்

1952இல் நாராயணசாமி மூலமாக எம்.ஜி.ஆருக்கு அண்ணாவின் அறிமுகம் கிடைத்தது. அவரது கருத்துரைகளுக்கு இளைஞர் கூட்டம் மயங்கிக் கிடந்ததை அறிந்த எம்.ஜி.ஆர், திமுக-வுக்கு தமிழக அரசியலில் நல்ல வாய்ப்பு இருப்பதை யூகித்தார். இந்த முன்னறிவு அவரை திமுக-வின் பக்கம் ஈர்த்தது.

காங்கிரஸ் கட்சியின் வேகமும் விவேகமும் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நமத்துவிட்டதைப்போல எம்.ஜி.ஆருக்குத் தோன்றியது. எனவே இளைஞர்களைக் கவர்ந்த திமுக-வில் தன்னை இணைத்துக்கொண்டார்.



*இக்கட்சிக்குத் தன் பங்களிப்பாக தன் படங்களிலும் பாடல்களிலும் கட்சி கருத்துகளைப் புகுத்தினார். 1954-ல் கலைஞர் கருணாநிதி கதை, வசனம் எழுதி பட்ஷி ராஜா ஸ்டுடியோஸ் தயாரிப்பில் வெளிவந்த 'மலைக்கள்ளன்' படத்தில் நேரடியாக தனது காங்கிரஸ் தாக்குதலைத் தொடங்கினார். டி.எம்.சவுந்தரராஜன் குரலில் **'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே...**' என்ற பாடலைச் சேர்த்தார். இதற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்தது. அடுத்த ஆண்டு வெளிவந்த 'குலேபகாவலி' படத்தில் 'நியாயமில்லே இது நியாயமில்லே...' என்ற பாடலும், 1956-ல் வெளிவந்த 'மதுரை வீர'னில் **'ஏய்ச்சு பிழைக்கும் பிழைப்பே சரிதானா எண்ணிப்பாருங்க நீங்க எண்ணிப்பாருங்க...'** என்ற பாடலும் எம்.ஜி.ஆர் ரசிகர்களின் எண்ணிக்கையை ஏற்றிவிட்டது. அதே ஆண்டு வெளிவந்த 'தாய்க்குப்பின் தாரம்' படத்தில் அவர் பாடிய 'மனுசனை மனுசன் சாப்பிடுறாண்டா தம்பிப்பயலே...' பாடல் இளைஞர்களைடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.*

களத்தில் இறங்கிய எம்.ஜி.ஆர் :

திமுககாரர் என்ற முத்திரை கிடைத்ததில் வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர் அடுத்த ஆண்டு [1957] முதல் திமுக-வின் தேர்தல் பணிகளுக்கு நிதி உதவி அளிக்க ஆரம்பித்தார். ஒரு கட்டத்தில் அண்ணாவே 'தம்பி நீ தரும் தொகையைவிட உன் முகம் எனக்கு ஆயிரக்கணக்கான ஓட்டுகளை அள்ளித்தரும். எனவே தேர்தல் பிரசாரத்துக்கு வா' என்று எம்.ஜி.ஆருக்கு அழைப்பு விடுத்தார். இந்த நல்வாய்ப்புக்காகக் காத்திருந்த எம்.ஜி.ஆர், தேர்தல் நிதி அளிப்பதுடன் களத்தில் இறங்கிப் பொது மக்களை, குறிப்பாகத் தன் ரசிகர்களை நேரில் சந்தித்தார்.

எம் ஜி ஆர் ரசிகர் சந்திப்பு அவருக்கு தன்னைப் பற்றி மக்கள் நேரடியாக அறிந்துகொள்ள உதவியாக இருந்தது. தன் இமேஜை உயர்த்திக்கொள்ள இந்தத் தேர்தல் மேடைகளையும், பயணத்தையும் மிகச்சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். திமுக அரசியல் கூட்டங்களுக்குப் பெண்கள் அதிகமாக வருவதில்லை என்ற நிலை மாறியது. எம்.ஜி.ஆரைப் பார்க்க பெண்கள் கூட்டம் அலைமோதியது. அவர் வரும் வழியெங்கும் பெண்கள் தம் குழந்தைகளுடன் மணிக்கணக்கில் கால்கடுக்க நின்றனர். இந்த நல்வாய்ப்பு இவருக்கு ஏராளமான ரசிகர்களைப் பெற்றுத்தந்தது. செல்லும் இடங்களில் எல்லாம் எம்.ஜி.ஆர் படப்பாடல்கள் ஒலித்தன.

எம்.ஜி.ஆர் திமுகவின் முக்கியப் பிரசார பீரங்கியாக மாறினார். சிறந்த மேடை பேச்சாளர்களும், மற்ற திரைக்கலைஞர்களும் செல்வாக்கை இழக்கத் தொடங்கினர். எம்.ஜி.ஆர் அண்ணாவிடம் பெற்ற செல்வாக்கைப்போல, கலைஞரையும் தன் அன்புப் பிடிக்குள் வைத்துக்கொண்டார். ஆனால், அதே சமயம் 'மலைக்கள்ள'னோடு அவரைத் தன் படங்களுக்கு வசனம் எழுத வைப்பதையும் நிறுத்திக்கொண்டார்.

ஆருர்தாஸ், சொர்ணம் [கலைஞரின் மைத்துனர்], ஆர்.கே.சண்முகம் போன்றோரையும், பிறகாலத்தில் கா.காளிமுத்து, நாஞ்சில் மனோகரன், கே.எஸ் கோபாலகிருஷ்ணன் ஆகியோரையும் தமக்கு வசனம் எழுத அமர்த்திக்கொண்டார். தன் நன்மையைக் கருதியும், கட்சியின் நன்மையைக் கருதியும் அண்ணாவின் மறைவுக்கு பிறகு கலைஞரை முதலமைச்சராக முன்மொழிந்தார்.

எம்.ஜி.ஆர் திரையுலகிலும் அரசியலிலும் எது செய்தாலும் அதில் ஒரு பொதுநலமும், சுயநலமும் இருக்கும்படி பார்த்துக்கொண்டார். இதில் அவரது கொடைத்தன்மைக்கு விலக்கு அளிக்கலாம். ஏனென்றால் கொடுப்பதற்கு அவர் தேடிக்கொண்ட விளம்பரத்தைவிட அவர் கொடுத்தது ஏராளம். இதை அவர் விளம்பரத்துக்காக மட்டும் செய்யவில்லை. அவருக்கு இயல்பாகவே அந்தக் குணம் அமைந்திருந்தது. முகம் தெரியாத நபர்கள் பலருக்கு அவர் மாதந்தோறும் வருடக்கணக்கில் மணி ஆர்டரில் பணம் அனுப்பியிருக்கிறார்.

துன்பப்படுவோரைப் பார்த்தால் அவர்கள் கேட்காமலேயே கொடுத்து உதவும் குணம் எம்.ஜி.ஆருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தது. உதவி என்று நாடி வந்தவர் எதிரியாக இருந்தாலும், அவருக்கு உதவும் குணம் அவருக்கு இருந்தது. இதுபோக 'தர்மம் தலைகாக்கும்' என்று படத்தலைப்பும் பாடலும் அமைத்து அதில் நடித்தார்.

குண்டு சுட்டு பிழைத்தபோதும், சிறுநீரகம் மாற்றிப் பிழைத்தபோதும், இந்தப்பாடல் அவர் தர்மம் அவரது தலையை காத்ததை ஊருக்குப் பறை சாற்றியது. எம்.ஜி.ஆரின் தேர்தல் பிரச்சாரத்தில் தன்னை ஆரத்தி எடுக்கும் பெண்களுக்குப் பளபளப்பான நோட்டுகளைக் காணிக்கையாகக் கொடுத்தார். எம்.ஜி.ஆரை மனதாரப் பாராட்டிய பெண்கள், அரசியலுக்கு வரவும் இச்செயல் ஒருவகையில் காரணமாக இருந்தது.

நாடோடி மன்னன்' படப்பாடல்கள்

1958-ல் எம்.ஜி.ஆர் சொந்தப்படம் எடுத்தார். திமுக கட்சிக் கொடி ஏந்திய ஆணும் பெண்ணும் நிற்பது போல சின்னம் அமைத்தார். 'எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்' என்று

பெயரிட்டார். முதல் பாடலே கொள்கை விளக்கப் பாடலாகவே ஒலித்தது. இன்றைக்கும் இது மதிமுக வின் கடவுள் வணக்க பாடலாக அங்கீகரிக்கபட்டுள்ளது. **'செந்தமிழே வணக்கம் நம் திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும் செந்தமிழே வணக்கம்'** என்ற இப்பாடல் வைகோவின் மனங்கவர்ந்த பாடலும் ஆகும். அடுத்து இப்பாடலில் இன்னொரு பாடலை அமைத்தார். இப்பாடலுக்கு பெரிய காட்சியமைப்பு சிறப்பு கிடையாது. எம்.ஜி.ஆரும் அமைச்சர் ஒருவரும் ஆளுக்கொரு குதிரையில் அமர்ந்து போவார்கள். அப்போது எம்ஜிஆர் 'உழைப்பதிலா உழைப்பை பெறுவதிலா இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா' என்று கேட்பார். அமைச்சர் பதில் எதுவும் சொல்லமாட்டார். எம்.ஜி.ஆர் பதிலும் சொல்வார்.

'உழைப்பவரே உரிமை பெறுவதிலே இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா' என்பதுதான் அந்தப் பதில். இப்படிக் கேள்வி பதிலாக அமைந்த இப்பாடலுக்கு அமைச்சர் தலை அசைத்தபடி வருவார். இதுதவிர 'காடுவெளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும்தானே மிச்சம்' என பானுமதி கேட்க எம்.ஜி.ஆர் 'காடு வெளையட்டும் பெண்ணே நமக்கு காலம் இருக்குது பின்னே' என்று பதில் அளிக்கும் பாடல் 'திமுக ஆட்சி வரட்டும்' என்ற நம்பிக்கையூட்டும் முன்னறிவிப்புப் பாடலாக அமைந்தது. இந்தப்பாடலில் தான் 'நாளை போடப்போறேன் சட்டம் மிக நன்மை புரிந்திடும் சட்டம் நாடு நலம் பெறும் திட்டம்' என்ற வரிகள் வரும். இந்த வரிகளே அவர் முதலமைச்சரானபோது அனைவரும் பாராட்டிய தீர்க்கதரிசன வரிகள் ஆகும். இந்தப்படல்கள் எம்.ஜி.ஆர் மீது மக்களுக்கு அதிக அன்பையும் நம்பிக்கையையும் ஊட்டின.

தீவிர காங்கிரஸ் எதிர்ப்பு :

1960-க்குப் பிறகு திமுக அரசு ஏற்கும் வரை எம்.ஜி.ஆர் படங்களில் காங்கிரஸ் எதிர்ப்புப் பாடல்கள் வலுப்பெற்றன. 1963-ல் வெளிவந்த 'தாய் சொல்லைத் தட்டாதே' படத்தில் 'போயும் போயும் மனிதருக்கு இந்தப் புத்தியைக் கொடுத்தானே... அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் சேர்த்து பூமியைக் கெடுத்தானே' என்ற பாடல், 'படகோட்டி (1964)'யில் 'கொடுத்ததெல்லாம் கொடுத்தான்' பாடலில் ***'இல்லையென்போர் இருக்கையிலே இருப்பவர்கள் இல்லயென்பார் - மடிநிறைய பொருளிருக்கும் மனம் நிறைய இருள் இருக்கும்'*** *என்ற வரிகள் 'ஆசைமுகம் (1965)' படத்தில் 'எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய குணமிருக்கு' என்ற பாடலும் 'பணம் படைத்தவன் (1965)' படத்தில் 'கண்போன போக்கிலே கால் போகலாமா' பாட்டில்* ***'மனிதன் போன பாதையை மறந்தும் போகலாமா'*** *என்ற வரி வரும்போது காந்திஜி படத்தைக் காட்டி காங்கிரஸார் காந்திய வழியைப் பின்பற்றத் தவறிவிட்டனர் என்பதை சிம்பாலிக்காகக் காட்டியிருந்தார்.*

அதே வருடம் வெளிவந்த 'எங்க வீட்டுப்பிள்ளை' படத்தில் கறுப்புச் சட்டை அணிந்து எம்.ஜி.ஆர் பாடும் 'நான் ஆணையிட்டால்' பாட்டில் ***'இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்'*** *என்று காங்கிரஸ்காரர்களைக் குறித்து பாடியிருப்பார். இந்தப் பாடல் வரிகள் சென்சாரில் அனுமதி பெறாததால் 'கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்' என்று மாற்றப்பட்டது. ஆனாலும், இலங்கை வானொலியில் பழைய வெர்ஷனைக் கேட்க முடிந்தது. பின்பு அங்கும் விடுதலை புலி அமைப்பு தடை செய்யப்பட்டபோது இந்தப்பாட்டு ஒலிபரப்புவது நிறுத்தப்பட்டது.*

*1966-ல் வெளிவந்த 'நாடோடி' படத்தில் எம்.ஜி.ஆருக்கு மிகவும் பிடித்த, ரசிகர்களுக்குப் பிடிக்காமல் போன பாடல் ஒன்று. கண்தெரியாமல் பிச்சையெடுக்கும் சரோஜாதேவி பாடும் விரசமான பாடலை மாற்றி '**நாடு அதை நாடு அதை நாடாவிட்டால் ஏது வீடு - பாடும்பொழுதெல்லாம் அதையே பாடு'** என்ற பாடலைச் சொல்லித்தந்து பாடச்செய்வார். அதே ஆண்டு வெளியான 'நான் ஆணையிட்டால்' படத்தில் 'தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை குருடர்கள் கண்ணை திறந்துவைப்பேன் - தனியானாலும் தலை போனாலும் தீமைகள் நடப்பதை தடுத்து நிற்பேன்' பாடல் திருடர்களைத் திருத்தும் பாடலாக அமைந்தாலும், சமூகத்தில் அது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுமக்கள் பணத்தைக் கொள்ளயடிக்கும் திருடர்களைத்தான் குறித்தது. பாடல் கருத்து திரைக்கதைக்கு ஏற்றதாகவும் அதேசமயம் பொது அரசியலுக்கு ஏற்றதாகவும் அமைத்துத் தரச்சொல்லி அதைத் தன் படங்களில் பயன்படுத்தினார் எம்.ஜி.ஆர்.*

*1967-ல் வெளிவந்த 'அரசகட்டளை' படம் காங்கிரஸ் காலத்தில் தயாரிக்கப்பட்டதால், 'ஆடி வா...' பாடலில் **'முயல் கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதோ அதன் முறையற்ற செயலை நம் வரவேற்பதோ'** என்ற வரிகள் இடம்பெற்றிருக்கும். இதில் முயல் கூட்டம் என்பது காங்கிரஸையும் சிங்கம் என்பது திமுகவையும் குறித்தது.*

திமுக புகழ் பாடும் பாடல்கள்

1967இல் அண்ணா அரசு பொறுப்பேற்றதும் எம்.ஜி.ஆரின் படப்பாடல்களின் உள்ளடக்கமும் மாறியது. அண்ணா அவர்கள் போலீஸ் என்ற பெயரைக் காவல் துறை என்று மாற்றினார். எம்.ஜி.ஆர் 'காவல்காரன்'

எனப் படம் எடுத்தார். அது எம்.ஜி.ஆரின் கணக்குப்பிள்ளை ஆர்.எம்.வீரப்பனின் சத்யா மூவிஸ் தயாரிப்பில் வெளிவந்த படம். இவருக்கும் ஜெயலலிதாவுக்கும் ஆரம்பத்தில் இருந்தே ஏழாம் பொருத்தம். ஜெயலலிதா கொஞ்சம் ஷார்ப்பாக இருந்தது அவரைச் சுற்றியிருந்த சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனால் எம்.ஜி.ஆருக்கோ ஜெயலலிதாவின் படிப்பும் சுறுசுறுப்பும் துணிச்சலாகத் தன் கருத்தை எடுத்துரைக்கும் பாங்கும் மிகவும் பிடித்துப்போயிற்று.

எம்.ஜி.ஆர் சுடப்பட்ட பின்பு வந்த முதல் படம் என்பதால் இதில் இடம்பெற்ற 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' என்ற பாடல் எம்.ஜி.ஆருக்காகவே எழுதப்பட்டது போல இருந்தது. ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

தமிழகத்தை காக்க வந்த 'காவல்காரன்' என்பது திமுக அரசை சிம்பாலிக்காகக் குறித்தது. எம்.ஜி.ஆரும் அதில் காவல்துறையை சேர்ந்த ரகசிய போலீஸாக நடித்திருந்தார். படம் சூப்பர் டூப்பர் ஹிட் . வெற்றிவிழாவில் எம்.ஜி.ஆர் உயரத்துக்கு வெள்ளித் தகட்டினால் அவர் உருவம் செய்து அவருக்கு வழங்கினர். அது இன்றும் எம்.ஜி.ஆர் நினைவு இல்லத்தில் இருக்கிறது. இதில் அரசைச் சாடியோ கண்டித்தோ எந்தப்பாடலும் இல்லை. மாறாக மூன்று டூயட் பாட்டு. மேலும் எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவை சீர்திருத்தத் திருமணம் செய்வதாகவும், குழந்தை பிறப்பதாகவும் அவர்களின் கனவு கற்பனைகளாகப் படம் எடுக்கப்பட்டிருந்தது. அப்போது சீர்திருத்தத் திருமணத்திற்கு அண்ணாவின் அரசினால் சட்ட அங்கீகாரம் கிடைத்த சமயம். மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதுபோல படம் எடுக்கப்பட்டிருந்தது.

1968-ல் வெளிவந்த எம்.ஜி.ஆரின் நூறாவது படமான 'ஒளிவிளக்கு' படத்தில் எம்.ஜி.ஆர் தன் தீவிர ரசிகர்களான குறவர்களை போல மாறுவேடம் அணிந்து ஜெயலலிதாவுடன் ஒரு பாட்டு பாடுவார். அந்தப்பாட்டில் திமுக-வின் படியரிசி திட்டம் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை பாடலில் வெளிப்பட்டது. திமுக ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர் என்பதாகவும் இப்பாட்டும், காட்சியும், நடனமும் அமைக்கப்பட்டிருந்தது.

திமுக மற்றும் எம்.ஜி.ஆர் புகழ் பாடல்கள்

*சமூகச் சாடல் குறைந்ததால் எம்.ஜி.ஆரை மையப்படுத்திய பாடல்கள் அவர் படத்தில் தோன்றின. 'நான் யார் நான் யார் நீ யார்' மற்றும் 'என்னைத் தெரியுமா நான் சிரித்து பழகி கருத்தை கவரும் ரசிகன் என்னை தெரியுமா', **'நான் உங்கள் வீட்டு பிள்ளை இது ஊரறிந்த உண்மை நான் செல்லுகின்ற பாதை பேரறிஞர் காட்டும் பாதை'** போன்ற திமுகவின் பிரதிபலிப்பாக எம்.ஜி.ஆரைக் காட்டும் பாடல்கள் எழுதப்பட்டன. அதாவது எம்.ஜி.ஆர் என்றால் திமுக, திமுக என்றால் எம்.ஜி.ஆர் என்ற பிம்பத்தை அவர் உருவாக்கினார். இது திமுக மூத்த உறுப்பினர்களுக்குச் சற்று காட்டமாக இருந்தாலும், இளைஞர்கள் எம்.ஜி.ஆர் மீது வெறியாக இருந்ததாலும், எம்.ஜி.ஆரின் செல்வாக்கு உச்சத்தில் இருந்ததாலும் எவரும் ஒன்றும் சொல்ல இயலவில்லை.*

கலைஞர் முதல்வர் ஆக்கப்பட்டார் :

1969-ன் தொடக்கத்திலேயே அண்ணா காலமாகிவிட்டார். கலைஞர் எம்.ஜி.ஆரை அடிக்கடி சந்திக்கிறார். கட்சியின் அடுத்த தலைவர் குறித்து

இருவரும் விவாதிக்கின்றனர். 'தம்பீ வா... தலைமை ஏற்க வா...' என்று அண்ணாவால் அன்போடு அழைக்கப்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் தன் ஆதரவாளர்களோடு 'தான் தன் அடுத்த முதல்வர்' என்ற நம்பிக்கையில் விவாதித்துக் கொண்டிருக்கிறார். இச்சூழலில் எம்.ஜி.ஆர் தன் சத்யா ஸ்டூடியோவில் கட்சியின் முக்கிய பிரமுகர்களைக் கூட்டி காங்கிரஸின் செல்வாக்கு இன்னும் முற்றிலுமாக ஒடுக்கப்படவில்லை, இந்நிலையில் படித்தவரைவிட காங்கிரஸை சமாளிக்கக் கூடியவரே கட்சிக்கும் ஆட்சிக்கும் பொறுப்பேற்பது நல்லது என்று சொல்லி அனைவரையும் கலைஞருக்கு ஆதரவாக எம்.ஜி.ஆர் சம்மதிக்க வைத்து கலைஞருக்கு பிடித்தமான வால்நட் கேக்கை அவர் டிரைவரை விட்டு வாங்கிவரச் சொல்லி அவர் வாயில் ஊட்டினார்.

ஏமாற்றிய ஆட்சி

1969-ல் கலைஞர் முதல்வரானதும், எம்.ஜி.ஆர் நினைத்தபடி ஆட்சி நடக்கவில்லை. திமுகவினர் தறிகெட்டுத் திரிகின்றனர். ஊழலும் வன்முறையும் எம்.ஜி.ஆரை குழப்பத்தில் ஆழ்த்தியது. அவர் இதை எதிர்பார்க்கவில்லை. கலைஞரும் எதையும் கண்டிக்கவில்லை. உள்ளூர் தாதாக்கள் கட்சிப் பொறுப்பேற்று கட்டிட ஒப்பந்ததாரர்கள் ஆகின்றனர். பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. கலைஞரின் ஆட்சி அவர் நினைத்ததற்கு மாறாக இருப்பதைக் கண்ட எம்.ஜி.ஆர் அவசரப்படாமல் அமைதியாக ஒரு காரியம் செய்கிறார்.

எம் ஜி ஆர் தமிழ்த் திரையுலகின் உச்சத்தில் அவர் கொடி கட்டி பறக்கிறார். அவரிடம் ஜெயலலிதா முழு செல்வாக்கு பெற்றிருக்கிறார். ஆழம் பார்க்க நினைக்கும் போதெல்லாம் எம்.ஜி.ஆர் அதை மற்றவர் காசில்

பார்ப்பது கிடையாது. தன் பணத்தை போட்டு சொந்தப் படம் எடுக்கிறார். அந்தப்படத்தில் ஓர் கொடுங்கோலனைக் காட்டுகிறார். தாயை தாய்நாடாகவும் அதை ஒரு கொடுங்கோலனின் அடிமைப்பிடியில் இருந்து மீட்பதாகவும் கதை உருவாக்கிப் படமாக எடுக்கிறார். அந்தப் படம் 'அடிமைப்பெண்' என்ற பெயரில் வெளிவந்து வெற்றிவிழா கொண்டாடியது.

அடிமைப்பெண் எடுக்கும்போது எம் ஜி ஆர் திமுகவில் இருந்தாலும் படம் திமுகவுக்கு எதிராக இருந்தது போல எடுக்கப்பட்டிருந்தது. இந்தப் படத்துக்கு தமிழக அரசின் விருதும் கிடைத்தது.

ஏமாற்றாதே ஏமாறாதே :

'அடிமைப்பெண்' படத்தில் மீண்டும் அரசை எதிர்க்கும் பாடல் காட்சிகளை அமைக்கிறார். கொடுங்கோலனுக்கு எதிராக ஒரு க்ளைமாக்ஸ் பாடல்

'உன்னை பார்த்து இந்த உலகம் சிரிக்கிறது


உன் செயலை பார்த்து

உன் நிழலும் வெறுக்கிறது'

பாடல் ஹிட் ஆனது. படத்தின் நடுவில் கலைஞருக்கு நேரடியாக எச்சரிக்கை செய்வது போல 'ஏமாற்றாதே ஏமாற்றாதே ஏமாறாதே ஏமாறாதே' என்ற பாடலைப் போல இந்தப்பாடலும் ஹிட் ஆனது

எம் ஜி ஆருக்கு தன் செல்வாக்கு அவருக்கு தைரியத்தை அளித்தது இந்தப் படத்தின் வெற்றி அவருடைய எண்ணத்துக்கு பச்சைக் கொடி காட்டினாலும் அவர் அவசரப்படவில்லை. இதனை அடுத்து, தான் அரசியலுக்கு வரலாமா என்பதை அறிய

நேரடியாக ஒரு படம் எடுத்து மக்களின் நாடி பிடித்து பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார். அதிக செலவில்லாமல் 'அடிமைப்பெண்' படம் போன்ற ஆடம்பரங்கள் எதுவும் இல்லாமல் பத்தே நாட்களில் விஜயா வாஹினி முதலாளி நாகிரெட்டியிடம் சொல்லி அவரது தயாரிப்பில் 'நம் நாடு' படத்தில் நடித்து முடிக்கிறார். அந்தப் படத்தின் வெற்றி இவருக்கு அரசியலில் ஈடுபடலாம் என்ற முழு நம்பிக்கையைக் கொடுத்தது.



நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான் நான் :

'நம் நாடு' படமும் 'அடிமைப்பெண்' போல எம்.ஜி.ஆர் வில்லன்களைத் தோற்கடிக்க ஜெயலலிதாவே அவருக்கு முற்றிலும் உதவுவது போன்ற கதையம்சம் உள்ள படம். இதில் அவர் கோடீஸ்வரராக மாறு வேடத்தில் ***'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான் நான் - துணிச்சலை மனத்திலே வளர்த்தவன் நான் நான் நான்'*** *என்று பாடி ஆடும் பாடல் அவரது மனத் திட்டத்தை எடுத்துரைத்தது. இதில் வில்லன்களைக் காங்கிரஸ்காரர்கள் போலவும் உயர்ந்த பக்திமான் போலவும் காட்டியிருந்ததால், திமுகவினருக்கோ சாதாரண மக்களுக்கோ சந்தேகம் வரவில்லை.*

இதற்கிடையே பல வெற்றிப்படங்கள் வந்தன. 'விவசாயி', 'மாட்டுக்கார வேலன்', 'குடியிருந்த கோயில்', 'தேடிவந்த மாப்பிள்ளை' எனப் பல படங்கள் வந்து எம்.ஜி.ஆரை உச்சத்துக்குக் கொண்டு போயின. எம்.ஜி.ஆரை வைத்துப் படம் எடுப்பவர்கள் எல்லாம் நல்ல லாபம் பெறுகின்றனறே, நாம் ஏன் சும்மா இருக்க வேண்டும் என்று கலைஞரும் அவரது மருமகன் முரசொலி மாறனும் எம்.ஜி.ஆரை அணுகி தாங்கள் கடனில் தவிப்பதாகவும், ஒரு படம் இலவசமாக நடித்துக் கொடுத்தால் கடனில் இருந்து கரையேறிவிடுவோம் என்றனர்.

எம்.ஜி.ஆர் எதிரி என்றாலும் உதவி என்று கேட்டுவிட்டால் செய்துவிடுவார் அல்லவா... அவர், தான் மட்டுமல்லாது ஜெயலலிதாவும் பணம் வாங்காமல் நடித்துக் கொடுப்பார் என்றார். 'எங்கள் தங்கம்' உருவாயிற்று. எம்.ஜி.ஆர் மற்றும் திமுக புகழ் பாடும் பாடலாக 'நான் செத்துப் பிழச்சவன்டா எமனைப் பார்த்து சிரிச்சவன்டா' என்ற பாடலில் கலைஞரை பற்றிய

*வரிகளாக '**ஓடும் ரயிலை இடை மறிச்சு அதன் பாதையில் தனது தலை வச்சு - உயிரையும் துரும்பா தான் மதிச்சு - தமிழ் பெயரை காத்த கூட்டம் இது**' என்பவை அமைந்தன. இன்னொரு டூயட் பாடலுக்கு, 'நான் அளவோடு ரசிப்பவன்' என்ற வரியை எழுதிவிட்டு கவிஞர் வாலி அடுத்த வரிக்குத் தடுமாறிய போது கலைஞரோ, 'எதையும் அளவின்றிக் கொடுப்பவன்' என்று அடியெடுத்துக் கொடுத்தாராம்.*

பாரத் விருது பெற்ற எம்.ஜி.ஆர் :

எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படவே, 1969க்கு பிறகு இருவரும் பிரிந்துவிட்டனர். உடல்நலத்தைப் பேணுவதில் சிறிதும் அக்கறை இல்லாத ஜெயலலிதா ரொம்பவும் குண்டாகிவிட்டார். 'பட்டிக்காட்டுப் பொன்னையா', 'அன்னமிட்ட கை' படங்களில் எம்.ஜி.ஆருக்குப் பெரியம்மா போலத் தோற்றமளித்தார். மேலும் எம்.ஜி.ஆரிடம் இருந்து இவரைப் பிரித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த கும்பல் இந்நேரம் பார்த்து மஞ்சுளாவை அறிமுகம் செய்தது.

சத்யா மூவிஸ் முலமாக 'ரிக்ஷாக்காரன்' படம் ஆர்.எம்.வீ அவர்களால் எடுக்கப்பட்டது. இதில் பணக்காரர்களின் அக்கிரமங்களுக்குத் துணை போகும் நீதித்துறையை எம்.ஜி.ஆர் சாடியிருந்தார். இதில் 'அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும் அது ஆணவச் சிரிப்பு' என்ற பாடலில் 'நாணல் போல வளைவதுதான் சட்டம் ஆகுமா - அதை வளைப்பதற்கு வழக்கறிஞர் பட்டம் வேணுமா' என்று கேட்டிருந்தார். எம்.ஜி.ஆருக்கு இந்தியாவின் சிறந்த நடிகரான 'பாரத்' விருது கிடைத்தது. பின்பு அது கலைஞர் சிபாரிசால் கிடைத்தது என்று திமுகவினர் குற்றஞ்சாட்டியதும், எம்.ஜி.ஆர் அதைத் திருப்பிக்

கொடுத்தார். இத்துடன் எம்.ஜி.ஆர் - கலைஞர் நட்பு முடிவுக்கு வந்தது.



அடுத்த ஆண்டே (1971) கலைஞர் தன் மகன் மு.க.முத்துவை எம்.ஜி.ஆருக்கு அமைந்தது போன்ற கதைகள் கேட்டு, தோற்றம், பாட்டு, டான்ஸ் எம்.ஜி.ஆர் போலவே உருமாற்றி திரைக்குக் கொண்டுவந்தார். ஆனால் வெற்றி பெறவில்லை. 'சினிமாவுக்கு அதிகம் பேர் போகிறார்களே அவர்களை மடை மாற்றுவோம்' என்று கருதி அரசுக்கு வருமான தரக்கூடிய மதுக்கடைகளைத் திறந்தார்.


சக்திவேல்

5. அதிமுக வளர்ச்சிக்கு உதவிய பாடல்கள்



அ.தி.மு.க கட்சி தோன்றியதும், அக்கட்சிக்கு ஆதரவாக முதலில் எழுதப்பட்ட பாடல், ''ஒரு வாலும் இல்ல நாலு காலும் இல்ல – சில மிருகங்கள் இருக்குது ஊருக்குள்ள – இந்தக் காட்டுக்குள்ளே உள்ள மிருகம் எல்லாம் -- அதைக்காட்டிலும் எத்தனையோ தேவலே''. இந்தப் பாடல் ஒரு இடைச்செருகலாக, இதயவீணை படத்தில் சொருகப்பட்டது. காட்டில் ஒளிந்து வாழும் எம்.ஜி.ஆர் பாடுவதாக அமைந்த இந்தப் பாடல், தமிழ்நாட்டில் உள்ள சில பகைவர்களைக் காட்டு மிருகங்களோடு ஒப்பிட்டுப் பாடுவதாக இருந்தது.

இதயவீணையைத் தொடர்ந்து, கட்சி வளர்ப்பதற்கு ஏற்ற வகையில் மக்களுக்கு ஊழலற்ற சமுதாயம் உருவாகும் என்ற நம்பிக்கையூட்டும் விதமாக பாடல்கள், பாடலாசிரியர்கள் உருவாகினர். எம்.ஜி.ஆர், புதியவர்களுக்கு வாய்ப்பு தரலானார். புலமைப்பித்தன் முத்துலிங்கம் நா. காமராசன் போன்ற கவிஞர்கள் எம் ஜி ஆர் படங்களில் பாடலாசிரியர்களாகஅறிமுகம் ஆயினர்

பகலில் படப்பிடிப்பில் கலந்துகொள்ளும் அவர், இரவில் கட்சிக்காரர்களைச் சந்தித்து அரசியல் வியூகம் உருவாக்கினார். 'அவருடைய இந்தத் திட்டமிடலையும் அந்தத் திட்டங்களை அவருடைய ஆட்களைக்கொண்டு செயல்படுத்திய முறைகளையும்வைத்து பார்க்கும்போது, அவர் ஒரு ராஜாங்கமே நடத்தியதுபோலதான் தோன்றிற்று' என்றார் நடிகர் ஆனந்தன்.

பாடல்களின் உள்ளடக்கம்

எம்.ஜி.ஆர் அ.தி.மு.க தோற்றத்துக்குப் பிறகு, தனது படங்களில் புதிய சமூகம் – சமத்துவம் – வர்க்க பேதம் இன்மை – தி.மு.க அரசின் தீய போக்கு – புரட்சி [பொதுவுடைமை] – தன் புகழ் – தன் துணிவு – என உள்ளடக்க விஷயங்களில் முன்பைவிட அதிகம்

கவனம்செலுத்தினார். பாடலாசிரியர்களிடம் சில கருத்துகளைச் சொல்லி, இவை இந்தப் பாட்டில் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டார். சில வரிகள் அவர் நினைத்த கருத்தைத் தரவில்லை என்றால், பாடலாசிரியர்களிடம் அதைச் சொல்லி திருத்தித்தரும்படி கேட்டு மாற்றிக்கொண்டார். இவ்வாறு அவர் படப் பாடல்கள் ஒவ்வொன்றும் அவரது நேரடி கருத்தாகவே இடம்பெற்றன.

புதுக்கட்சி தொடங்க திட்டமிட்ட ரசிகர்கள்

1972 அக்டோபர் மாதம் 12-ம் நாள், அ.தி.மு.க உதயமாயிற்று. அதற்கு முன்பே, ரசிகர்கள் மதுரை போன்ற நகரங்களில் தாமரை படம் போட்ட கொடி ஏற்றி, எம்.ஜி.ஆர் கட்சியைத் தொடங்கிவிட்டனர். அதுவரை பிரபலமாகாத சில நாளிதழ்கள், எம்.ஜி.ஆர் கட்சி ஆரம்பிக்க ரசிகர்கள் தரும் உத்வேகம் பற்றி நிறையச் செய்திகள் வெளியிடலாயின. தமிழகம் எங்கும் இருந்து ரசிகர்கள் புறப்பட்டு எம்.ஜி.ஆரின் சத்யா ஸ்டுடியோவுக்கும் ராமாவரம் தோட்டத்துக்கும் சென்று தங்கள் ஆதரவை வெளிப்படுத்தினர். ரசிகர்களும் பொதுமக்களும் இவ்வளவு ஆதரவு அளிப்பர் என்று எம்.ஜியாரோ கலைஞரோ அப்போது எதிர்பார்க்கவில்லை. எம்.ஜி. ஆருக்கு இனி அமைதியாக யோசித்துச் செயலாற்ற நேரமில்லாமல்போயிற்று. தி.மு.க மீதிருந்த வெறுப்பும் சேர்ந்துகொண்டதால், படித்தவர்களும் கட்சி சாராத பொதுமக்களும் எம்.ஜி.ஆருக்கு ஆதரவு தெரிவித்தனர். ஆங்காங்கே ரசிகர்கள் தமக்குப் பிடித்த படங்களை தி.மு.க கொடியில் போட்டு புதுக் கொடியேற்றி தனிக்கட்சியைத் தொடங்கிவிட்டனர்.

கட்சியையும் சினிமாவையும் இணைத்த எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் தான் இதுவரை தி.மு.க-வுக்கு ஆதரவாகத் தமது படங்களில் வெளியிட்ட காட்சிகளும் பாடல்களும் வீணாகிவிடக்கூடாது என்று முடிவுசெய்தார். அவற்றையும் தன் வருங்கால அரசியலுக்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில், கட்சியின் கொடி மற்றும் வண்ணத்தைத் தீர்மானித்தார். தி.மு.க கொடியின் நிறங்களுடன் பொதுவான ஒரு வெள்ளை நிறத்தை மட்டும் சேர்த்துக்கொண்டார். கட்சித்தலைவராக அறிஞர் அண்ணாவையும் அவர் உருவத்தையும் கொடியிலும் கட்சியின் பெயரிலும் இணைத்தார். ஆக, இப்போது அண்ணா ஆரம்பித்த தி.மு.க தான் இவருடைய அண்ணா தி.மு.க என்பது போலவும் இவர்

அக்கட்சியைப்பொதுச்செயலளாராக இருந்து நடத்துவது போலவும் ஒரு நிலையை உருவாக்கினார். இப்போது, இதுவரை அவர் தி.மு.க-வுக்கு ஆதரவாக அமைத்த காட்சிகளும் பாட்டுகளும் இனி இவருக்கும் பயன்படும். உதயசூரியனை வணங்குவது, போற்றுவது, பாராட்டுவது போன்ற காட்சிகள் மட்டும் பயன்படாது.

‘இதயவீணை’ படம், எம். ஜி.ஆரை தி.மு.க-வை விட்டு வெளியேற்றிய பிறகு வந்தாலும், அது மணியனின் நாவலை படமாக்கிய விதத்துக்காக ஓடி வெற்றிபெற்றது. அதில், அரசியல் பெரிதாகப் பேசப்படவில்லை. காஷ்மீரின் அழகிய காட்சிகள், மஞ்சுளா மற்றும் லட்சுமியின் அழகுத்தோற்றம், எம்.ஜி.ஆர் யேசுகிறிஸ்து போன்ற தோற்றத்தில். ஆனால், காவி உடுத்தி மாறுவேடத்தில் வந்து தங்கை லட்சுமியின் திருமணத்தில், ‘திருநிறைச் செல்வி மங்கையர்க்கரசி திருமணம் கொண்டாள் இனிதாக’ என்ற பாடல் பாடியது

ஆகியன இப்படத்தை வெற்றிபெறவைத்தன. ‘உலகம் சுற்றும் வாலிபன்’1970-ல் உலகப் பொருள்காட்சியான எஃஸ்போவில் படம் பிடிக்கப்பட்டு, 1973ல் திரைக்கு வந்த படம், ‘உலகம் சுற்றும் வாலிபன்’. இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய விடக்கூடாது என்று தன் அதிகாரத்தை முழுதாக தி.மு.க செலுத்தியும், படப்பெட்டியை வைக்கோல் வண்டியிலும் பேருந்தில் இஞ்சின் இருக்கும் இடத்திலும் ஒளித்துவைத்து, சரியான நேரத்தில் படத்தை வெளியிட்டு, தி.மு.க-வினரை தன் முதல் முயற்சியிலேயே மண்ணைக் கவ்வவைத்தவர் எம்.ஜி.ஆர்.

இந்தப் படம் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம் என்றாலும், இப்போதைக்கு இதன் அரசியல் சார்பற்ற ஆனால், அரசியல் வெற்றியை முன்னறிவுப்பாக வெளியிட்டதை மட்டும் காண்போம். இந்தப் படத்தில் பெயர் போடும்போது, அதிர்ஷ்டத்தின் சின்னமாக விளங்கும் காகிதப்பூ [போஹன்வில்லா] பின்புலத்தில் ‘நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் – இப்படை தோற்கின் எப்படை வெல்லும் – நீதிக்கு இது ஒரு போராட்டம் – இதை நிச்சயம் உலகம் பாராட்டும்’ என்ற பாடல், சீர்காழியின் கம்பீரக் குரலில் முழங்கிற்று. இன்றுவரை அ.தி.மு.க கட்சிக் கூட்டங்களில் இப்பாடல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

1974ல் படமும் பாட்டும்

1974ல் ‘நேற்று இன்று நாளை’, ‘உரிமைக்குரல்’, ‘சிரித்து வாழ வேண்டும்’, ‘நாளை நமதே’, ‘இதயக்கனி’ ஆகிய படங்கள் வெளிவந்தன. இவற்றில், ‘சிரித்துவாழ வேண்டும்’ [ஜஞ்சீர்], ‘நாளை நமதே’ [யாதோங்கி பாரத்] ஆகிய இரு படங்களும் இந்திப் படத்தின் தழுவல்கள். ‘ நேற்று இன்று நாளை’ படத்தில், ‘தம்பீ நான் படிச்சேன்

காஞ்சியிலே நேத்து – அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று – என்றும் நல்லவர்க்கு வாழ்வு வரும் நாளை – இது அறிஞர் அண்ணா எழுதிவைத்த ஓலை' என்ற பாடல், அ.தி.மு.க பிரச்சாரப் பாடலாகவே எழுதி இசையமைக்கபட்டு, படத்தில் இடம்பெறச் செய்து, பெரும் வரவேற்பு பெற்றது.



இந்தப் பாட்டில் வரவேண்டிய கருத்துகளை எம்.ஜி.ஆர், வாலியிடம் எடுத்துரைத்தார். ஏழை மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டத்தில் ஊழல், தெரு விளக்கு போட

தொழிலாளிகள் வேலைக்கு வந்ததாகப் பதிவேடு மற்றும் ஆவணங்களைத் தயாரித்து அறிவியல் பூர்வமாகச் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட மஸ்டர் ரோல் ஊழல்... ஆகியவற்றைச் சொல்லும் வகையில்...

ஊருக்கெல்லாம் வெளிச்சம் போட

கொடுத்த பணத்திலே – தாம்

வெளிச்சம் போட்டு வாழ்ந்து விட்டார்

நகரசபையிலே

ஏழைக்கெல்லாம் வீடு என்று

திட்டம் தீட்டினார் – தாம்

வாழ்வதற்கு ஊர்ப்பணத்தில் வீடு கட்டினார்

இந்தப் பாட்டு நேரடியாக மக்களுக்கு எதிரான தி.மு.க-வின் போக்கை எடுத்துச்சொல்லும் பிரச்சாரப் பாடலாகவே அமைந்தது. திண்டுக்கல் இடைத்தேர்தலில், அ.தி.மு.க பெற்ற வெற்றியும் ஒரு போஸ்டராக இப்படத்தில் ஒரு காட்சியில் காட்டப்பட்டது.

ஒரு சம்பவம் என்பது நேற்று -- நேற்று

அது சரித்திரம் என்பது இன்று -- இன்று

அது சாதனை ஆவது நாளை -- நாளை

வரும் சோதனை தான் இடைவேளை

என்று இப்பாடலை முடித்து, உடனே இடைவேளை விட்டதும் மக்கள் இப்பாடலின் உள்ளடக்கம்குறித்து விவாதிக்க நேரம் கிடைத்தது. பாடலை படத்தில் இடம்பெறச்செய்யும் இடமும் எவ்வளவு முக்கியம் என்பதை இந்தப் பாடல் மூலமாக அறிந்துகொள்ளலாம். இந்தப் படத்தில், எம்.ஜி.ஆர் அழகாகத் தோற்றமளிப்பார்.

அவரின் வயது தெரியாதபடி மேக்கப்பும் உடைகளும் வெகு பொருத்தமாக இருந்தது. மஞ்சுளா, லதா என இருவர் ஜோடிகளாக நடித்தனர். படம் தயாரித்த அசோகன், குடிகாரனாகவும் பிச்சைக்காரனாகவும் நடித்திருப்பார்.

உரிமைக்குரல்

தெலுங்குப் படத்திலிருந்து கதை எடுத்து, தமிழில் உருவான 'உரிமைக்குரலில் ***'ஒரு தாய் வயிற்றில் பிறந்த உடன்பிறப்பில் முன்பு பிரிவு வந்தால் பின்பு உறவு வரும் – நல்ல மனிதருக்கும் நன்றி மறந்தவர்க்கும் முன்பு உறவிருந்தால் பின்பு பிரிவு வரும்'*** *என்ற பாட்டு எம்.ஜி.ஆர் நல்ல மனிதர், ஆனால் அவரின் எதிரணியைச் சேர்ந்தவர் அப்படி அல்ல என்பதை நேரடியாகச் சுட்டியது. மேலும்*

நல்லவன் இலட்சியம் வெல்வது நிச்சயம்

அண்ணா அன்று சொன்னார்

என்றும் அதுதான் சத்தியம்

என்றுதான் அண்ணாவின் வழிவந்தவன் என்பதை நிரூபிக்க முயன்றிருப்பார். இந்தப் படத்தின் இறுதிக் காட்சியில், தாய் மண்ணை மீட்க உயிரைக்கொடுத்தும் போராடுவேன் என்று எம்.ஜி.ஆர் பேசிய வீர வசனம், 'மக்களை தீய சக்தியிடமிருந்து மீட்பேன்' என்று எம் ஜி ஆர் வாக்குறுதி அளிப்பதாக இருந்தது.

நாளை நமதே

எம்.ஜி.ஆர் 'நாளை நமதே' படத்தில் நடிக்க ஆரம்பத்தில் தயங்கினார். இது, மியூசிக் சப்ஜெக்ட். இதில் எனக்கு என்ன ஸ்கோப் இருக்கிறது என்றார். ஆனால், அந்த

ஃபேமிலி சாங் என்ற மியூசிக்கையே அவர் தனக்கு சாதகமாக்கிக்கொண்டார். அந்தப் பாட்டுதான்...

நாளை நமதே இந்த நாளும் நமதே

தாய்வழி வந்த சொந்தங்கள் எல்லாம்

ஓர் வழி நின்று நேர்வழி சென்றால்

நாளை நமதே

இப்பாடலில், 'தி.மு.க-வை எதிப்பவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் வென்றுவிடலாம்' என்ற நம்பிக்கையை ஊட்டினார்.

இதயக்கனி

தமிழுக்கு முதல் பம்பாய் வரவான 'தோரஹா' புகழ் ராதா சலூஜா எம்.ஜி.ஆருடன் ஜோடியாக நடித்த படம். எம்.ஜி.ஆரின் அறிமுகக் காட்சியில், 'காவேரிக்கு இணையாக நீண்ட காலம் வாழ்க' என்று எம்.ஜி.ஆரை வாழ்த்துவதாக இடம்பெற்ற பாடல், அ.தி.மு.க பிரசாரப் பாடலாக அமைந்தது. எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா தேர்தல் பணிகளுக்கு வருகை தரும்போது ஒலிக்கும் பாடல்களில், இதுவும் ஒன்றாகும். இப்பாடல் காட்சியில்... இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் இணைந்து ஒருமையாக எம்.ஜி.ஆரை வாழ்த்திப் பாடுவர். இதுவும் கட்சிக்கு மத பேதம் கிடையாது என்பதை சுட்டிக்காட்டும் டெக்னிக்தான். மேலும், எம்ஜியார் சத்யா தோட்டம் என்று தன் காபி தோட்டத்தின் பெயரைக் காட்டும்போது, அங்கு கட்சி சின்னமும் இடம்பெற்றிருக்கும்.

1974ல் பல்லாண்டு வாழ்க

இப்படமும் 'தோ ஆங்கேன் பாரா ஹாத்' என்ற இந்திப் படத்தின் மூலக்கதையைக்கொண்டு மட்டும்

தயாரிக்கப்பட்டதாகும். ஐந்து பயங்கரமானவர்களை திருத்தும் சிறைத்துறை அதிகாரியாக எம்.ஜி.ஆர் நடித்திருப்பார். இதில், ஒன்றே குலம் என்று பாடுவோம் – ஒருவனே தேவன் என்று போற்றுவோம் – அன்னை இதயமாக அன்பு வடிவமாக – வந்து வழிகாட்ட வேண்டும் என்று வணங்குவோம் என சர்வமத பிரார்த்தனைப் பாடல் ஒன்றை காட்சிப்படுத்தியிருப்பார். இதுவும் அ.தி.மு.க அனைத்து மதத்தினருக்குமான கட்சி என்ற கொள்கையை நிறுவ உதவியது. அதுபோல மக்கள் ஆதரவும் அ.தி.மு.க-வுக்கு வளர்ந்துவந்தது.

நினைத்ததை முடிப்பவன் – 1974

இரட்டை வேடத்தில் எம்.ஜி.ஆர் நடித்த இந்தப் படம், இந்தியில் வெளிவந்த 'சச்சா ஜூட்டா' [உண்மையும் பொய்யும்] என்ற படத்தின் தமிழாக்கம். இதில், கண்ணை நம்பாதே என்ற பாட்டு, பிரசாரப் பாட்டாக அமைந்திருந்தது. உடனே பாடல் ஆசிரியர், 'வந்த வழி மறந்துவிட்டு கண்மூடி போகிறவர் போகட்டுமே' என்று மாற்றி எழுதினார். எம்.ஜி.ஆரும் அந்த வரியை நடித்துக்காட்டும்போது, கையால் கண்ணை மூடிக்கொண்டு போவதை அபிநயித்துக் காட்டி, பாட்டை விளக்கியிருப்பார். அந்தப் பாடல் வரிகள்...

வந்த வழி மறந்துவிட்டு

கண்மூடி போகிறவர் போகட்டுமே

என் மனதை நானறிவேன்

என் உறவை மறவேன்

எதுவான போதிலும் ஆகட்டுமே

நன்றி மறவாத நல்ல மனம் வேண்டும்

என்றும் அதுவே என் மூலதனம் ஆகும்.

உழைக்குக் கரங்கள்

கா. காளிமுத்து வசனம் எழுதி, எம்.ஜி.ஆர் நடித்த பாடல். இந்து மதத்தில் உள்ள போலிச் சாமியார், கணவனை இழந்த இளம்பெண்ணை சீரழித்ததைத் தட்டிக்கேட்கும் பாத்திரமாகவும் தேவதாசி குலத்தில் பிறந்த பெண்ணைத் தொந்தரவுசெய்யும் மைனர்களை அதட்டிக் கேட்கும் பாத்திரமாகவும், ஆதரவற்ற பெண்குலத்தின் காவலனாகவும் நடித்திருந்தார். யேசுதாஸ் பாடிய, ***நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே – இந்நாடு முழுதும் மலர வேண்டும் புரட்சி மலர்களே - உழைக்கும் கரங்களே புரட்சி மலர்களே*** *என்ற பாடலில் ''* ***ஏர் பூட்டி தோளில் வைத்து - இல்லாமை வீட்டில் வைத்து – போராடும் காலம் எல்லாம் போனதம்மா- எல்லார்க்கும் எல்லாம் உண்டு – என்றாகும் காலம் இன்று – நேராகக் கண்ணில் வந்து தோன்றுதம்மா என்றும் விடியும் வேளை வரப்போகுது – தர்மம் தீர்ப்பை தரப்போகுது – நியாயங்கள் சாவதில்லை என்றும் நியாயங்கள் சாவதில்லை*** *என்றும் நம்பிக்கை ஊட்டிய வரிகள் இடம்பெற்றன.*

நீதிக்கு தலை வணங்கு- 1976

*'நீதிக்கு தலை வணங்கு' படம், தெரியாமல் ஒருவர்மீது காரை ஓட்டிக் கொன்றுவிட்ட தவறுக்கு, எம்.ஜி.ஆர் காவல்துறையிடம் தன்னையே ஒப்புவிக்கும் படம். இதில், ஏழைகளுக்கு பூசாரியாக இருந்துகொண்டு பெண்களுக்குத் துன்பம் தரும் தேங்காய் சீனிவாசனிடம் எம்.ஜி.ஆர் '' நான் பார்த்தா பைத்தியக்காரன் என்று ஒரு பாட்டை பாடுவார். அதில், ''****பெற்றெடுத்த தாயாக***

மற்றவரை நான் நினைத்து பிள்ளையென வாழ்பவன்டா – அவர் பெருமைகளைக் காப்பவன்டா”

என்று தாய்க்குலத்துக்கு ஆதரவாக குரல்கொடுத்திருப்பார்.

இன்று போல் என்றும் வாழ்க [1977]

தேர்தல் நெருங்கிவரும் காலகட்டமானதால், எம்.ஜி.ஆர் வெற்றிபெறுவதும் உறுதியாகிவந்த காரணத்தால், பல தயாரிப்பாளர்கள் அவரை வைத்து விரைவாக படத்தை முடிக்க வேண்டும் என பரபரப்படைந்தார்கள். தொழிலதிபர்கள், எம்.ஜி.ஆரை தேர்தலுக்கு முன்பே சந்தித்து, தனது ஆதரவைத் தெரிவித்துவிட வேண்டும் என்று அவரைப் பார்க்க வந்து குழுமினர். இந்நிலையில், நடிக்கும் படங்களில் அ.தி.மு.க பிரசாரப் பாடல்களைப் புகுத்த, புதுப்புது பாடல் ஆசிரியர்களுக்கு பாடகர்களுக்கும் வாய்ப்பளித்துவந்தார்.

தாம் அழைக்கும் நேரம் வந்து எவ்வளவு நேரமானாலும் இருந்து, தன் வேலையை முடித்துக்கொடுக்கக்கூடிய ஆட்களையே அவர் விரும்பினார். அந்தச் சமயம், ஒரு பாடல் காட்சி எடுத்தார். அதில்தான் தொழிலாளர் அனைவருக்கும் ஆதரவாக இருப்பதை வெளிப்படுத்தினார். தொழிலாளர் கைகளைப் பற்றிய பாட்டாக இருந்தாலும், இதைக் கேட்கும்போதும் சில காட்சிகளில் தன் கையை உயர்த்தி க்ளோசப் காட்சியாக எடுத்ததாலும் இந்தக் கை பாடல், எம்.ஜி.ஆருக்குரிய போற்றிப் பாடலாகவே அமைந்தது.

இது நாட்டை காக்கும் கை –

உன் வீட்டை காக்கும் கை

இந்தக் கை நாட்டின் நம்பிக்கை

இது எதிர்கால தாயகத்தின் வாழ்க்கை

என்று தொடங்கும் இப்பாட்டில், இது பெண்கள் தம் குலம் காக்கும் கை, இது திருடும் கை அல்ல என்று எதிரெதிர் கருத்துக்களாக அமைத்துப் பாடியிருப்பார். பிற்காலத்தில், காங்கிரஸ் கட்சிக்கு 'கை சின்னம்' அமைந்துவிட்டதால், அவர்களுக்கும் பயன்பட்டது.

மீனவநண்பன்

ஸ்ரீதர் இயக்கி வெளிவந்த இரண்டாவது எம்.ஜி.ஆர் படம். இதில் வலிமையான இரண்டு கொள்கைப் பாடல்கள் இடம்பெற்றன. எதிர்க்கட்சிக்கு சவால் விடுவதைப் போல...

நேருக்கு நேராய் வரட்டும்

நெஞ்சில் துணிவிருந்தால் - என்

கேள்விக்கு பதிலை தரட்டும்

நேர்மை திறமிருந்தால்

எனத் தொடங்கும் பாடலில்

மாறினால் மாறட்டும்

இல்லையேல் மாற்றுவோம்

*என்றும் **நீ கொண்ட நாணயம் பூட்டிய வீட்டுக்குள் சிறையாய் இருக்குதையா நான் கொண்ட நாணயம் நாட்டிலும் வீட்டிலும் நிறைவாய் இருக்குதையா**என்றும், இரு கட்சியினரின் இயல்பை விவரித்துப் பாடியிருப்பார். "பட்டத்து ராஜாவும் பட்டாளச் சிப்பாயும் ஒன்றான காலம் இது" எனற பாடலில், பல சமதர்மக் கருத்துகளைச் சொல்லியிருப்பார். ஏழைகளின் நல்வாழ்வுக்கு வழி பிறக்கப்போகிறது என்ற தொனி, அ.தி.மு.க ஆரம்பித்த*

பிறகு வந்த பாடல்களில் ஒலித்தது. இந்தப் படத்தின் படப்பிடிப்பு, ஜூன் 29 அன்று இரவு முழுக்க நடந்தது. மறுநாள் முதலமைச்சராக எம்.ஜி.ஆர் பொறுப்பேற்க உள்ள நிலையிலும் தொடர்ந்து ஷூட்டிங்கில் ஈடுபட்டார். நள்ளிரவிலும் நீண்ட ஷூட்டிங்கில் அனைத்துக் காட்சிகளும் கச்சிதமாக வர வேண்டுமே என்ற பதற்றத்துடனே படக்குழுவினர் பரபரக்க, எம்.ஜி.ஆர் போகிற போக்கில் அனைத்தையும் ஓ.கே செய்தார்.

முதல்வரான பிறகு வந்த படங்கள்

'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' [1978] என்ற படம் தமிழகத்தை சோழனிடமிருந்து பாண்டியனான எம்.ஜி.ஆர் மீட்டதாகப் பொருள் கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டு, அவர் முதல்வர் ஆன பிறகு திரைக்கு வந்தது. இப்படம், தேர்தல் சமயத்தில் வந்திருந்தால், வெற்றிவிழா படமாக அமைந்திருக்கும். எம்.ஜி.ஆர் வெற்றி பெற்றபிறகு என்பதால், ரசிகர்களிடையே படபடப்புக் குறைந்து, ஒரு மிதப்பு ஏற்பட்டுவிட்டது. இப்படம், தமிழீழத்தின் விடுதலையும் தன்னுள் உள்ளடக்கியதாக பாடல்கள் அமைத்திருந்தன. விடுதலைப்புலிகள் வேண்டிக்கொண்டதற்கு இணங்க...

தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை
தன்மானம் ஒன்றே தான் எங்கள் செல்வம்
ஒற்றுமையாய் பகைவர்களை ஓட வைப்போம்
உழைப்பலே நம் நாட்டை உயர்திடுவோம்

என்ற பாடலில்...

வீரமுண்டு வெற்றி உண்டு

விளையாடும் களம் இங்கே உண்டு

வா வா என் தோழா

என்ற வரிகள், போர் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் எழுதப்பட்டிருந்தன.

கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்

கொள்கை வீர தியாகங்களை ஏற்றிட வேண்டும்

இன்னொரு பாடலும் வீரம் புகட்டும் பாடலாக முன்னேற்றத்துக்கு வித்திட்ட பாடலாக அமைந்தது.

வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட

மானம் ஒரு வாழ்வாக வாழ்வுநதி தேனாக

முன்னேறுவோம் நம் நாட்டையே முன்னேற்றுவோம்

இத்துடன், எம்.ஜி.ஆரின் திரையுலக வாழ்வு நிறைவுபெற்றாலும், அவர் தன் கட்சிக்காகவும் தேர்தல் பிரசாரத்துக்காகவும் இதே திரைக்கலைஞர்களைக் கொண்டு...

இரட்டை இலை வெற்றி தந்த இலை – உயர்


இலட்சியம் காத்திட வந்த இலை. மற்றும்

புரட்சி தலைவரின் வழி நடப்போம் –

புதிய சமுதாயம் இனி அமைப்போம்

போன்ற பாடல்களை கேசட்டில் பதிந்து, தன் கட்சி நிர்வாகிகளிடம் வழங்கி, கட்சிப் பணிகளுக்கு நல்ல பாடல்களைப் பயன்படுத்திவந்தார். இப்பாடல்களும் இன்னும் உயிர்ப்புடன் திகழ்கின்றன.

6. ஏழை பங்காளன் பாத்திரங்களில் எம் ஜி ஆர்



'ஏழைப் பங்காளன்' என்று சைவ சமயக் குரவருள் ஒருவரான மாணிக்கவாசகர் சிவபெருமானைப் போற்றித் துதிப்பார். அந்தச் சொல்லுக்கு அடையாளமாக எம்.ஜி.ஆர் அமைந்ததற்கு முக்கியக் காரணங்கள் இரண்டு. ஒன்று, அவர் ஏழைகளுக்குத் தானாகப் போய் உதவியதும், உதவி எனக் கேட்டு வந்தவருக்கு உடனே கொடுத்து உதவியதும் ஆகும். இரண்டு, அவர் ஏழை எளிய வர்க்கத்தைச் சேர்ந்த கதாபாத்திரங்களை ஏற்று நடித்து அவர்களின் துன்ப துயரங்களைப் படத்தில் பிரதிபலித்து, அவர்களில் ஒருவனாகத் தன்னை வெளிப்படுத்தியது ஆகும்.

கதாபாத்திரமும் காட்சிப்பாடலும்

தான் எந்தத் தொழிலாளி கதாபாத்திரம் ஏற்று நடித்தாலும் அந்தத் தொழிலுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கும் வகையில் படத்தில் தொடக்கத்திலேயே ஒரு பாடலை அழைத்துத் தொழிலின் கஷ்ட நஷ்டங்களை விவரித்திருப்பவர் எம்.ஜி.ஆர். சில படங்களில் காட்சிகள் மூலமாகத் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்திவிடுவார்.

பாட்டாளி பாத்திரப்படைப்பு

நாடோடி படத்தில் தெருப்பாடகனாக ஆயிரத்தில் ஒருவனில் நாட்டு மருத்துவராகப் பெற்றால்தான் பிள்ளையா படத்தில் பெயின்டர் மற்றும் கிணற்றில் தூர் வாருபவராக தனிப்பிறவியில் மெக்கானிக்காக, தேர்த்திருவிழா படத்தில் பரிசல் ஓட்டியாக, தொழிலாளி படத்தில் கைவண்டி இழுப்பவராக, பின்பு பஸ் கண்டக்டராக, படகோட்டி படத்தில் நாட்டுப் படகோட்டும் பரதவனாக, மீனவ நண்பனில் இயந்திரப் படகின் மீனவனாக மாட்டுக்கார வேலனில் மாடு

மேய்ப்பவராக என் அண்ணனில் குதிரை வண்டிக்காரனாக எங்கள் தங்கத்தில் லாரி டிரைவாக விவசாயி படத்தில் படித்த விவசாயியாக ரிக்ஷாக்காரனில் ரிக்ஷா ஒட்டியாக எங்கவீட்டுப் பிள்ளையில் விவசாயியாக (ராமு) உழைக்கும் கரங்கள் படத்தில் ஊர் காக்கும் காவல்காரனாக நடித்திருப்பார்.

படித்தவராக எம்.ஜி.ஆர்

எம்.ஜி.ஆர் டாக்டராக தர்மம் தலைகாக்கும், புதியபூமி படங்களிலும் எஞ்சினீயராகக் கொடுத்து வைத்தவளிலும் வக்கீலாக நீதிக்குப் பின் பாசத்திலும் பத்திரிகை நிருபராக சந்திரோதயத்திலும் விளையாட்டு ஆசிரியர் மற்றும் கவிஞராக ஆனந்த ஜோதியிலும் முகராசி, காவல்காரன், பணத்தோட்டம், பரிசு, தெய்வத்தாய், தாய் சொல்லைத் தட்டாதே, என் கடமை, ரகசியப் போலீஸ் 115 போன்ற படங்களில் காவல்துறை அதிகாரி, சி.ஐ.டி படங்களில் காவல்துறை அதிகாரி, சி.ஐ.டி கதாபாத்திரங்களிலும் வன்னித்தாயில் மிலிட்டரி கமாண்டராகவும் நடித்திருப்பார்.

நாட்டு மருத்துவர்

ஆயிரத்தில் ஒருவன் படத்தின் அறிமுகக் காட்சியில் எம்.ஜி.ஆர் பாம்புக்கடிக்கு மருந்து கண்டுபிடித்த மகிழ்ச்சியுடன் 'வெற்றி வெற்றி' என்று கூறுவார். பின்பு பாம்பு தீண்டிய ஒருவருக்கு விஷத்தை உறிஞ்சி எடுக்கும் காட்சியில் ஜெயலலிதாவுக்கு அவர்மீது அபிமானம் ஏற்படும். இறுதிக்கட்டத்தில் மனோகர்மீது விஷம் தோய்த்த கத்தியை நம்பியார் வீசியதும் உடல் நலம் பாதித்துவிடும். உடனே எம்.ஜி.ஆர் விஷத்தை அகற்றுவார். படம் முடியும்போது நாட்டை மனம் திருந்திய மன்னனிடமே ஒப்படைத்துவிட்டு மருத்துவத் தொழிலுக்கே திரும்பிவிடுவார். தான் ஏற்ற

கதாபாத்திரத்துக்கு இவ்வகையில் இவர் நியாயம் செய்திருப்பார்.

ஆங்கில மருத்துவர்

தர்மம் தலைகாக்கும் படத்தில் ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவசேவை செய்வார். அந்த தர்மமே அவர் தலையை (உயிரை) ஒரு விபத்திலிருந்து காப்பாற்றியதாக எம்.ஆர்.ராதா ஒரு வசனம் பேசியிருப்பார். குண்டு சுட்டபோதும் சிறுநீரகமாற்று சிகிச்சையின்போதும் இவர் பிழைத்து எழுந்ததற்கு இவர் செய்த தர்மமே காரணம் என்று பொதுமக்கள் நம்பினர்.

புதியபூமி படத்தில் மந்திரவாதி ஒருவரின் ஏமாற்று சிகிச்சையில் அவதிப்படும் மலை கிராமம் ஒன்றிற்குப் பகுத்தறிவுப் பகலவனாக டாக்டர் கதிரவன் வந்து மருத்துவசேவை ஆற்றுவார். இவரது முறைப் பெண் டாக்டர் ஷீலா இவருக்கு ஒத்துழைப்பு தர மறுத்து விடுவார். நகரத்திலேயே ஒரு மருத்துவமனை கட்டி அங்கு டாக்டராக இருப்பார்.

டாக்டர் படிப்பு பெறுவோர் தம் வாழ்க்கையை ஏழை எளியோருக்கு சேவை செய்யும் வகையில் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற முன்மாதிரி பாத்திரமாக எம்.ஜி.ஆரின் பாத்திரப்படைப்பு அமைக்கப்பட்டிருக்கும்.

படகோட்டி

படகோட்டி படத்தில் அறிமுகப்பாடல் காட்சி கடலோடிகளின் துன்பத்தை பறை சாற்றுவதாக அமைந்திருக்கும்.

“தலைமேல் பிறக்க வைத்தான் - எங்களைத்

தண்ணீரில் பிழைக்க வைத்தான்

கரைமேல் இருக்க வைத்தான் - பெண்களைக்

கண்ணீரில் குளிக்க வைத்தான்

பாடல் தற்கால துயரத்தை வெளிப்படுத்தும்.

அந்தப்படம் முழுக்க படகோட்டிகளுக்கு அவர்கள் மீனுக்கு நல்ல விலை கிடைக்கவும் வந்து கந்து வட்டிக்காரரர் கொடுமையிலிருந்து விடுபடவும் அரசாங்கத்தின் திட்டங்களால் பயனடையவும் உழைக்கும் மாணிக்கமாக பாத்திரம் ஏற்று நடித்திருப்பார். படம் நெடுக படக்கோட்டிகளின் அவலமும் பாடுகளும் அவநம்பிக்கையும் தொடரும் இறுதியில் இரண்டு மீனவ குப்பங்களும் ஒன்று பட்டு அரசின் நலத்திட்டங்களைப் பெற்று தனிநபர் கொடுமையிலிருந்து விடுபடும்.

தொழிலாளி

தொழிலாளி படத்தில் படித்துப்பெற்ற எம்.ஜி.ஆர் வேலை எதுவும் கிடைக்காமல் கை வண்டியிழுக்கும் தொழிலாளியாக வாழ்வார். பின்பு பேருந்து நடத்துநர் பணி கிடைக்கும் பேருந்தின் இருக்கைகள் நிரம்பிவிட்டதால் நிறுத்தத்தில் நிற்கும் தன் தாயைக்கூடப் பேருந்தில் ஏற்றமாட்டார். (அந்தக்காலத்தில் பஸ்ஸுக்குள் ஸ்டாண்டிங் கிடையாது) தன் நேர்மையான உழைப்பால் முன்னேறி செக்கிங் இன்ஸ்பெக்டர் ஆவார். அப்போது அதிக வேகத்தில் பேருந்தை ஓட்டி இன்னொரு பேருந்தை 'ஓவர் டேக்' செய்த ஓட்டுநர் நம்பியாருக்கு எச்சரிக்கை கடிதம் அளிப்பார். பின்பு அந்த பஸ் நிறுவனத்தின் மேனேஜர் ஆவர்.

கதாநாயகி கே.ஆர். விஜயாவின் சிபாரிசும் இதற்கு முக்கியக் காரணம் ஆகும். அவரை ஒரு விபத்திலிருந்து எம்.ஜி.ஆர் காப்பாற்றியிருப்பார்.

இன்றைக்கு இந்த முன்னேற்றம் எளிதாகத் தோன்றலாம். 1960களில் அப்படியில்லை. கூலித்தொழிலாளி மேனேஜர் ஆவதெல்லாம் கனவிலும் கற்பனையிலும் மட்டுமே சாத்தியம். எனவே எம்.ஜி.ஆரது இந்தப் பாத்திரப்படைப்பு ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தது.

மேனேஜராக இருந்த எம்.ஜி.ஆரை முதலாளி வேலையை விட்டு நீக்கியதும் மீண்டும் எம்.ஜி.ஆர் கைவண்டி இழுத்து தன்னுடன் பணிபுரிந்து பழியேற்றப்பட்ட தொழிலாளிகளின் குடும்பங்களைக் காப்பாற்றி உதவுகிறார்.

குதிரை வண்டிக்காரன்

என் அண்ணன் படத்தில் எம்.ஜி.ஆர் குதிரை வண்டிக்காரனாகவும் ஜெயலலிதா புல்லுக்கட்டுக் காரியாகவும் நடித்தது மிகவும் பொருத்தமாக இருந்தது. இப்படத்தில் இருவரும் முருகன் கோவிலில் சாமிகும்பிடும் காட்சியும் இடம் பெற்றது.

முதல் அறிமுகப் பாட்டிலேயே அவர் குதிரை வண்டி ஓட்டுவது லாங் ஷாட்டில் ரோப் வைத்தும் பிற காட்சிகள் ஸ்டூடியோவுக்குள் குளோஸ்அப் ஷாட்கள் வைத்தும் அந்தப் பாட்டைப் படமாக்கியிருப்பார்கள். புல்லுக்கட்டு விற்கும் பெண்களும் எம்.ஜி.ஆர் நடத்தும் போலி சல்லாபக் காட்சிகளில் குதிரைவண்டிக்காரனைப் போல இயல்பாக நடித்திருப்பார். ஜெயலலிதாவுக்கு ஆத்திரமூட்டுவதற்காக இந்த விளையாட்டை நிகழ்த்துவார்.

ரிக்க்ஷாக்காரன்

இந்தப்படத்தில் ஆரம்பக்காட்சியில் ரிக்க்ஷா பந்தயத்தில் முதல்பரிசு பெறுவார். ஒரு நாள் உண்மையிலேயே பிற்பகல் வேலையில் எம்.ஜி.ஆர்

கோடம்பாக்கம் சாலையில் ரிக்ஷா ஓட்டிவிட்டு ஸ்டுடியோவுக்குத் திரும்பியிருக்கிறார். படப்பிடிப்புத் தளத்தில் இருந்தவர்கள் அவரைத் தேடி அலையும்போது அவர் வெளியே இருந்து ரிக்ஷா ஓட்டியபடி உள்ளே வந்தார்.

1964 இல் எம்.ஜி.ஆர் மழையில் நனைகிறார்களே என்று ரிக்ஷாக்காரர்களுக்கு ரெயின்கோட் இலவசமாக வழங்கினார். சத்யா ஸ்டூடியோவில் ஏராளமான டெய்லர்களை வாடகைக்கு அழைத்து வந்து ரெயின்கோட்கள் தைத்து, அவற்றை அண்ணா அவர்களின் திருக்கரத்தால் வழங்கினார். அன்று முதல் ரிக்ஷாக்காரர்கள் எம்.ஜி.ஆர்மீது தனி அன்பு வைத்திருந்தனர். 1971இல் ரிக்ஷாக்காரன் படம் வெளிவந்தபோது அதை வெற்றிவிழா படமாக உயர்த்தினார்.

ரிக்ஷாக்காரன் படத்திலும் எம்.ஜி.ஆர் படித்துப் பட்டம் வாங்கியவர் பட்டாளத்தில் பணிபுரிந்தவர் பின்பு ரிக்ஷா ஓட்டுவார். ரிக்ஷா ஓட்டுவதையும் கட்டண விவரத்தையும் வரன்முறைப்படுத்தி இத்தொழிலுக்கு ஒரு கௌரவம் அளித்திருப்பார். “ஏ ரிக்ஷா” என்று அழைப்பதைக் கூடக் கண்டிருத்திருப்பார்.

ரிக்ஷாவில் இருந்தபடியே எம்.ஜி.ஆர் சண்டை போடும் காட்சியை ஸ்டன்ட் மாஸ்டர் சங்கர் அமைத்திருப்பார். இக்காட்சியில் எம்.ஜி.ஆர் சிலம்பு சுற்றியபடியே ரிக்ஷாவில் சுற்றி சுற்றி வந்து சண்டைபோட்டு தன் ‘பேசஞ்சரான’ மஞ்சுளாவைக் ரவுடிகளிடமிருந்து காப்பாற்றுவது புதுமையான சண்டைக் காட்சியாக அமைந்து ரசிகர்களின் பலத்த கைதட்டலைப் பெற்றது.

மற்ற சில தொழிலாளி கதாபாத்திரங்கள்

தேர்த்திருவிழாவில் பரிசல் ஓட்டிகளாக எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் வந்து ஒருவருக்கு ஒருவர் போட்டி போடுவர். மோதலில் தொடங்கிய பழக்கம் காதலில் நிறைவுறும் துள்ளல் பாடலும் பரிசலில் குழுநடனமும் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும்.

முதல் காட்சியில் பெயர் போடும்போதே மாட்டின் பெருமையைப் பாடி மாட்டுக்காரனாக நடித்திருப்பார். மாட்டுக்காரவேலனில் மாட்டுக்காரன்தான் ஹீரோ தெருப்பாடகனாக (நாடோடி) வரும் எம்.ஜி.ஆர் நாட்டின் சிறப்பு குறித்த பாடல்களை சரோஜாதேவிக்குச் சொல்லிக்கொடுத்து பாடச் சொல்வார்.

நல்லநேரம் படத்தில் ''நம்ம ஆடுற ஆட்டமும் பாடுற பாட்டும் நாட்டுக்கு படிப்பினை தந்தாகனும்'' என்று பாடிய கருத்தை 'நாடோடியிலும் செயல்படுத்தியிருப்பார்.

தனிப்பிறவியில் லேத் பட்டறையில் தொழிலாளியாக வரும் எம்.ஜி.ஆர் ''உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே'' பாட்டு மூலமாக உழைப்பின் மகத்துவத்தை வெளிப்படுத்தியிருப்பார். ரசிகர்களை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவார்.

----

7. தாய்க்குலத்தின் ஆதரவு பெற்ற எம் ஜி ஆர்



தாய்க்குலத்தில் ஏகோபித்த ஆதரவுடன் மூன்று முறை தொடர் வெற்றி பெற்ற எம்.ஜி.ஆர் இயற்கையிலேயே தன் தாய் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தைப் போல மற்ற தமிழகத்து தாய்மாரிடமும் அளவற்ற தாய்ப்பாசம் கொண்டிருந்தார். மூதாட்டியர் பலர் அவரைத் தன் மகன் போல அனைத்து கண்ணீர் விட்டு கலங்கி நிற்கும்போது அவர்களின் ஏழ்மைத் தோற்றத்தைக் கண்டு அருவருப்படையாமல்

தன் கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்து விட்டவர். எம்.ஜி.ஆர்.

முதியோருக்கும் சத்துணவு

எம்.ஜி.ஆர் முதல்வரானதும் சத்துணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியபோது இது காமராஜர் தொடங்கிய திட்டம் தானே என்று சிலர் விமர்சித்தனர். அப்பனுக்கு சாராயம் பிள்ளைக்கு சத்துணவா? என்று கேட்டனர்.

இவர்களால் சத்துணவின் தன்மை அறியாதோர் என்று திட்டவட்டமாகச் சொல்லாம். எம்.ஜி.ஆர் தொடங்கிய சத்துணவு திட்டத்தில் அப்பகுதியில் வாழும் முதியோருக்கும் மதியஉணவு இலவசமாக சத்துணவு மையத்தில் வழங்கப்பட்டது. முதியோர் உதவித்தொகையும் உயர்த்தித்தரப்பட்டது. யாரும் இல்லாத முதியவர்கள், மருமகளால் விரட்டப்பட்ட முதியவர்கள் இந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவு பெற்றனர். இவர்கள் எம்.ஜி.ஆரை தம் மகனாகக் கருதி வந்தனர்.

இளம் தாய்மாரின் கண்ணீர் துடைத்த எம்.ஜி.ஆர்

இளம் பெண்கள் குழந்தை பெற்று நான்கு மாதம் முதல் அந்தக் குழந்தைகளு சத்துணவு மையங்களில் சத்துமாவு உருண்டை வழங்கப்பட்டது. இந்த சத்துமாவு உருண்டையை இளம் தாய்மார் தம் குழந்தைகளுடன் சத்துணவு மையத்துக்கு வந்து வாங்கி அங்கேயே ஊட்டிவிட வேண்டும். பின்பு சத்துணவு சமையலர்களின் சோம்பேறித் தனத்தால் சத்துமாவு பாக்கெட்டை இளம் தாய்மாரிடம் கொடுத்து வீட்டுக்குச் சென்று கொழுக்கட்டை செய்து அனைவரும் சாப்பிட்டுத் தீர்த்து விட்டனர்.

என் மகன் எம்.ஜி.ராமச்சந்திரன்

திருப்பூரில் வாழ்ந்து இளம் வயதில் சுதந்திரப் போரில் உயிர் நீத்த கொடி காத்த குமரனின் வரலாற்றை நாம் படித்திருப்போம். இந்த கொடி காத்த குமரனின் மனைவி ராமாயி மிகவும் வறுமையில் உழல்வதாகத் தகவல் கிடைத்ததும் முதலமைச்சாரா இருந்த எம்ஜி.ஆர் அவரை நேரில் சந்தித்தார்.

நாட்டுக்காக உழைத்த நல்லவரின் மனைவி பிறரிடம் உதவி பெறுவதை விரும்பமாட்டார் என்பதை நன்குணர்ந்த எம்.ஜி.ஆர் ராமாயியை அவர் வீட்டில் சந்தித்து அம்மா நான் உங்கள் மகன் எம்.ஜி.ராமச்சந்திரன் வந்திருக்கிறேன். என் தாய்க்கு நான் உதவ விரும்புகிறேன் என்றார். ராமாயியின் மனம் நெகிழ்ந்தது. மகன் தரும் உதவியை எந்தத் தாயாவது மறுப்பாரா? ஏற்றுக்கொண்டார். இந்த உறவை ராமாயி அம்மாள் இறுதிவரை பெருமையாக ஏற்றுக்கொண்டார். என் மகன் எம்.ஜி. ராமச்சந்திரன் சென்னையில் இருக்கிறார் என்று அந்தத்தாய் அன்போடு குறிப்பிடுவோர். எம்.ஜி.ஆர் அந்த ராமாயி அம்மாவை, 'அம்மா'' என்று அழைத்தது செய்தி அல்ல. ராமாயி அம்மா அவரை தனது மகன் என்று அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டதுதான் செய்தி.

ஒரு மகன் பட்டாளம், ஒரு மகன் சினிமா

மாட்டுக்கார வேலன் ஷூட்டிங் வைகை அணையில் நடந்தபோது சுற்று வட்டார கிராமங்களில் இருந்து கூட்டம் வந்து அங்கேயே இரவுபகலாக அமர்ந்துவிட்டது. பகலில் படப்பிடிப்பு இடைவேளையின்போது ஒரு மூதாட்டி எம்.ஜி.ஆரைப் பார்க்க வந்தார். எம்.ஜி.ஆர் அவரிடம் உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? அவர்கள் என்ன செய்கிறார்கள்? என்று விசாரித்தார். அதற்கு அந்தத்தாய் எனக்கு இரு

மகன்கள் ஒருவன் பட்டாளத்தில் இருக்கிறான். இன்னொருவன் சினிமாவில் நடிக்கிறான்'' என்றார். சினிமாவா? யார் அவர்? எனக்குத் தெரியாமல் இருக்கிறது சொல்லுங்கள் என்று எம்.ஜி.ஆர் கேட்டார். அதற்கு அந்தத் தாய் ''நீ தானப்பா என் ரெண்டாவது மகன்'' என்றார். எம்.ஜி.ஆர் நெகிழ்ந்து போனார். தேர்தல், பிரசாரப் பயணத்தின்போது இவர்களின் இந்த அன்பைப் பார்த்துத்தான் அவர் பல தருணங்களில் ''இந்த மக்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று கண்ணீர் விட்டிருக்கிறார். முதல்வரானதும் அதிகாரிகளின் மறுப்புக்கு அஞ்சாமல் நிதியை திரட்டி சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி குழந்தைகள் மற்றும் முதியவரின் பசிப்பிணியைப் போக்கினார்.

வருமான வரி பாக்கியை செலுத்த முன்வந்த தாய்

எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர் கே.பி. ராமகிருஷ்ணன் எம்.ஜி.ஆரைத் தனது தலைமகனாகத் நினைத்த ஒரு அன்புத்தாய் பற்றி கூறியிருப்பார். அவருக்குச் சொந்த மகன் இருந்தார். அ.தி.மு.க ஆரம்பித்த பிறகு தி.மு.க ஆட்சி எம்.ஜி.ஆரின் பெயரைக் கெடுக்க பல முயற்சிகளை எடுத்தது. அதில் ஒன்று அவர் வருமானவரி செலுத்தவில்லை என்ற புரளி. இதைக் கேட்ட இந்த முஸ்லிம் தாய் தன் மகனை அழைத்து 'அப்பா, உன் அண்ணன் எம்.ஜி.ஆர் வரி கட்டாமல் இருக்கிறாராமே. ஆவர் தான் சம்பாதித்த பணத்தை எல்லாம் ஊருக்குத் தர்மம் செய்துவிட்டு இன்று இந்த சோதனையில் சிக்கிவிட்டார். நாம் நம் சொத்தை அவர் பெயருக்கு மாற்றிவிடுவோம். அவர் நம் சொத்தை வருமானவரியை கட்டி விடட்டும் என்றார். மகனையும் தீவிர எம்.ஜி.ஆர் விசுவாசியாகத்தானே அந்தத் தாய் வளர்த்திருப்பார். அப்படியிருக்கும்போது மகன் மறுப்பாரா சம்மதித்துவிட்டார். தங்கள் கருத்தை

எம்.ஜி.ஆருக்கு கடிதம் எழுதித் தெரிவித்தார். எம்.ஜி.ஆர், அவர்களின் அன்புக்கு நன்றி தெரிவித்து பதில் எழுதினார். சொத்துகளை மாற்றவேண்டாம் என்றும் தெரிவித்துவிட்டார். நேரில் போய் பார்த்து அந்தத்தாயாரிடம் பேசவும் விரும்பினார்.

ஒரு நாள் அந்தத் தாய் மரணப்படுக்கையில் இருப்பதால் கடைசியாக ஒருமுறை தன் மகனைப் பார்க்க விரும்புவதாக எம்.ஜிஆருக்குக் கடிதம் வந்தது. இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என்று எம்.ஜி.ஆர் புறப்பட்டுச் சென்று அந்த அன்புத்தாயை நேரில் சந்தித்தார். மகனைப் பார்த்த மகிழ்ச்சியில் அந்தத்தாய் தன் வாழ்வை நிறைவுசெய்தார்.

நீராகாரம் கொடுத்த தாய்

எம்.ஜி.ஆர் கட்சி ஆரம்பித்த பின்பு கொடி ஏற்றுவதாக அவரை தொண்டர்கள் தமது பகுதியின் சந்து பொந்து எல்லாம் அழைத்துச் செல்வது உண்டு. அவரும் போகுமிடம் எல்லாம் சாதிபேதம் பார்க்காமல் சுளிக்காமல் சிரித்த முகத்துடன் இருப்பார். ஒருமுறை ஒரு குடிசை வாசலில் கொடியேற்றச் சென்றபோது அங்கிருந்த ஒரு மூதாட்டி ‘‘அய்யா இந்த வேகாத வெயிலில் இப்படி சுற்றுகிறாயே இந்தா இதை குடிச்சிட்டு போ’’ என்று ஒரு சொம்பு நிறைய நீராகாரம் (முதல் நாள் மிஞ்சிய சோற்றில் ஊற்றி வைக்கப்படும் நீர்) கொடுத்தார். எம்.ஜி.ஆர் அதை வாங்கி கடகடவென்று குடித்துவிட்டார்.

மொட்டையடித்து கருமாதி செய்தோர்

காதல் காட்சியில் பெண்களை ஏமாற்றி தன் பிம்ப வலைக்குள் சிக்க வைத்திருக்கிறார் எம்.ஜி.ஆர் என்று பாண்டியன் என்பவர் ஒரு நூல் எழுதியிருந்தார். அது பொய் என்று நிரூபித்தவர்கள் எம்.ஜி.ஆர் இறந்த பிறகு

அவருக்கு மகன் ஸ்தானத்தில் இருந்து மொட்டையடித்து கருமாதி செய்த பல்லாயிரம் ஆண்கள் ஆவர். எம்.ஜி.ஆரை விட சிவாஜி, ஜெமினி ஆகியோரின் காதல் காட்சிகளில் நடித்து பெரியளவில் ரசிகர்களைப் பெற்றிருந்தனர். எம்.ஜி.ஆரை பெண்கள் ரசித்தத்தற்கும் மதித்ததற்கும் அடிப்படை காரணம் அவர் ஒரு சிறந்த மனிதனுக்கு உரிய அனைத்து பண்புகளையும் பெற்றிருப்பதாக அவர்கள் நம்பியது மட்டுமே.

நடிகை பத்மினியுடன் எம்.ஜி.ஆர் ராணி சம்யுக்தாவில் நடித்தபோது பத்மினியை குதிரையில் வைத்து கடத்திச் செல்லவேண்டும். அப்போது பத்மினி நான்கு மாதம் கர்ப்பமாக இருந்தார். அவரை முதலில் குதிரையில் அமர்த்தினார்கள். அப்போது எம்.ஜி.ஆர் பார்த்துப்பா பத்திரமாக செய்யுங்க என்று எச்சரித்துக்கொண்டே இருந்ததாக (பத்மினி) ஒரு பேட்டியில் குறிப்பிட்டார். எம்.ஜி.ஆர் ஒரு சிறந்த மனிதர் என்றும் நற்சான்று அளித்து இருந்தார்.

தன் அன்பாலும் கருணையாலும் எம்.ஜி.ஆர் பெண்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்ததால் அவரைத் தம் மகனாகப் பலரும் கருதினர். எனவேதான், எம்.ஜி.ஆர் இறந்ததும் நீயும் மொட்டை அடிச்சுடுப்பா என்று தன் மகனிடம் கூறியபோது அந்த மகன்கள் தாயின் சொல்லை தட்டாமல் எம்.ஜி.ஆருக்காக மொட்டையடித்து கருமாதி செய்தனர். இது எம்.ஜிஆருக்குத் தெரியாது. ஆனால், எம்.ஜி.ஆரின் தாயன்புக்கு இது ஒரு சான்றாகும்.

தாயும் பிள்ளையும்

ஐந்து வயதில் தன் தாயைப் பிரிந்து வயிற்றுப் பிழைப்புக்காக பாய்ஸ் கம்பெனியில் சேர்ந்துவிட்ட எம்.ஜி.ஆருக்கு தாய்மீதான ஏக்கம் மனதுக்குள் இருந்திருக்கும். வளர்ந்ததும் தான் தன் பிள்ளைகளைப்

பிரியாமல் தன்னுடன் வைத்து அன்பாக வளர்க்க வேண்டும் என்ற எண்ணமும் உறுதியாகத் தோன்றியிருக்கும். ஆனால், அவருக்குப் பிள்ளை இல்லை. ''என் அண்ணனுக்கு ஒன்பது பிள்ளைகளைக் கொடுத்த இறைவன் எனக்கு ஒரு பிள்ளை கொடுக்கவில்லையே என்று அருள்தாசிடம் சொல்லி ஒருநாள் வருத்தப்படுகிறார். அவருடைய மனைவி சதானந்தவதி இரண்டுமுறை கருவுற்றபோது கருக்குழாயில் கருதங்கி வளர்ந்ததால் அதை வளர்க்க முடியவில்லை. அவருக்கு பின்பு காசநோய் தாக்கியதும் அவர் குழந்தைபெறத் தடையாக அமைந்துவிட்டது.

மோட்ச தீபம் ஏற்றிய குழந்தைகள்

எம்.ஜி.ஆருக்கு ஒரு குழந்தையை ஆண்டவன் கொடுத்திருந்தால் அவர் இறந்தபோது அந்த ஒரு மகன் இறுதிக் கடன்களை நிறைவேற்றி இருப்பார். ஆனால் ஒரு பிள்ளை கூட இல்லாததால் பல ஆயிரம் மகன்கள் அவருக்கு இறுதிக்கடன் செய்து கோயில்களில் மோட்ச தீபம் ஏற்றினர். எல்லோருக்கும் பிள்ளைகள் மட்டும்தான் கிடைக்கும். ஆனால், எம்.ஜிஆருக்கு தாய்மார்கள் கிடைத்ததால் பிள்ளைகளும் சேர்ந்து கிடைத்தார்கள். இது ஒரு அபூர்வு நிகழ்வு.





முனைவர் செ. இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்

